



கல்கி
KALKI
23.1.1972
விலை 45 காசு
ராஜம் ஐயர்
ற்றாண்டு விழா
விஜயா




# சுவையான பாரெக்ஸ் உணவு-இதனால் அனுதினமும் உரிய புரதத்தை உங்கள் குழந்தை பெறுவது உறுதி.



**1. பருப்புடன் பாரெக்ஸ்**
2 டேபிள்ஸ்பூன் பாசிப்பருப்பு
1/2 தேக்கரண்டி வெண்ணெய்
1 டேபிள்ஸ்பூன் பாரெக்ஸ்
பருப்பை நன்றாக வேகவைத்து, பருப்பு நீரிலேயே குழைவாக மசித்துக் கொள்ளவும். வெண்ணெயையும் பாரெக்ஸ் தூளையும் அதனுடன் சேர்க்கவும்



**2 பழரசத்துடன் பாரெக்ஸ்**
1 கோப்பை ஆரஞ்சு அல்லது சாத்துக்குடி பழரசம்
2 தேக்கரண்டி துருவிய ஆப்பிள்
1 தேக்கரண்டி சர்க்கரை
2 டேபிள் ஸ்பூன் பாரெக்ஸ்
பழரசத்துடன் சர்க்கரை சேர்த்து, ஆப்பிள் துருவலையும் பாரெக்ஸ்தூளையும் சேர்க்கவும் நன்றாகக் கலந்து, குழந்தை குளித்தவுடன், காலை பதினொரு மணிக்கு முற்பகல் உணவாகக் கொடுக்கவும்.



**3. முட்டையுடன் பாரெக்ஸ்**
1 முட்டை
1 உருளைக் கிழங்கு, சிறியது
1 1/2 டேபிள்ஸ்பூன் பாரெக்ஸ்
1 டேபிள்ஸ்பூன் பால்
முட்டையை மிக லேசாக வேகவைக்கவும். வேகவைத்த உருளைக் கிழங்கை நன்றாக மசித்து முட்டையுடன் கலக்கவும். பால், பாரெக்ஸ் தூள் சேர்க்கவும்.

வளரும் குழந்தைக்கு உகந்தது பாரெக்ஸ்
வாய்க்கினிதாய் வழங்குங்கள் அதனை

# பாரெக்ஸ்®

**—க்ளாக்ஸோ தயாரிப்பு**

சீரான உடல் வளர்ச்சிக்கு ஏற்ற
சரியான புரதச் சத்து கொண்டது




பாரெக்ஸ் புத்தகத்தை இலவசமாகப் பெற. 25 பை. தபால் தலை இணைத்து, தபால் பெட்டி 16558, 'வொர்லி' பம்பாய் என் னும் முகவரிக்கு எழுதுக.

CMGF-25-202 Tam

# கல்கி

## பொருளடக்கம்




''கல்கி''யில் வெளியாகும் கதைகளில் உள்ள பெயர்கள் எல்லாம் கற்பனைப் பெயர்களே; சம்பவங்களும் கற்பனையே.

விரோதிகிருது, தை 9 ★ ஜனவரி 23, 1972




| சந்தா விவரம் | ஒருவருடம் | ஆறுமாதம் |
|---|---|---|
| இந்தியா | ரூ. 23-00 | ரூ. 11-50 |
| இதர நாடுகள் | ரூ. 50-00 | ரூ. 25-00 |
| இலங்கை (இலங்கை நாணயம்) | ரூ. 23-00 | ரூ. 11-50 |



மகிழ்ச்சிதுள்ளும்
வளமான வாழ்வு
கிராமங்களிலே...
ராக்ஃபோர்ட் டால்மியா சிமெண்ட்
உறுதியான எதிர்காலத்திற்கு எழுப்பப்படும்
இன்றைய கட்டடம்.
டால்மியா சிமெண்ட் (பாரத்) லிட்.
பதிவு செய்யப்பட்ட அலுவலகம் மற்றும் தொழிற்சாலை
டால்மியாபுரம் (தமிழ்நாடு)
தலைமை அலுவலகம்: 4, சிந்தியா ஹவுஸ், புது டெல்லி 1.
ஏகபோக விற்பனை ஏஜெண்டுகள்
சிமெண்ட் டிஸ்ட்ரிப்யூடர்ஸ் லிட்.
டால்மியாபுரம், (தமிழ்நாடு).

கல்கி

மலர் 31
இதழ் 26

தமிழ்த்திரு நாடுதன்னைப் பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா
-- பாரதியார்

# அரசியலின் இடத்தில் சமயத்தை நிறுவுவோம்

தேசம் முழுவதிலும் ஒழுக்கக் குறைவைக் காணும்போது எல்லா நன் மக்களுக்கும் வருத்தமா யிருக்கிறது; எதிர் காலத்தைக் குறித்து நம்பிக்கை அடியோடு போய்விடுகிறது. அதிகார ஆசையினால் உண்டாகும் ஊழலால் அரசியல் தலைவர்கள், தொண்டர்கள் அனைவருமே பாதிக்கப்பட் டிருக்கின்றனர். பாபத்துக்கு அஞ்சும் குணம் போய் விட்டது. இறைவன் என்பது நேரில் அநுபவிக்க வேண்டிய புனிதமான சத்திய வஸ்து என்ற எண்ணம் மறைந்து இது ஒரு வெற்று வார்த்தையாகவே நிற்கிறது.

இப்போது நாம் செய்ய வேண்டியது என்ன? நம்பிக்கை இழந்து, வருத்தத்தில் மூழ்கி, சர்வநாசத்தை எதிர் பார்த்தே ஒவ்வொரு நாளையும் கழிக்க வேண்டியதுதானா? அல்ல. அல்லவெனில், நிலைமையைச் சீர்திருத்த நாம் என்ன செய்ய வேண்டும்?

சமய உணர்ச்சிக்குப் புத்துயிர் ஊட்ட வேண்டும். மக்களை ஒழுக்கமாக வாழச் செய்யவும், தார்மிகப் பண்புகளை மதிக்கச் செய்யவும், பாபத்திடம் அச்சம் ஏற்படுத்தவும் சமய உணர்ச்சியை வளர்ப்பதன்றி வேறு வழி இல்லை. முன்னேற்றம், சுபிட்சம் இவற்றை சமயம் என்ற கருங்கல் அஸ்திவாரத்தின் மீதே எழுப்ப வேண்டும். பெரிய முன்னேற்றத் திட்டங்களைப் போடலாம். ஆனால் அமல் செய்பவர்களின் ஒழுக்கக் குறைவால் இந்தத் திட்டங்களும் தோல்வியே காண்கின்றன. ஆகையால் ஒழுக்கத்தை வளர்க்கும் சமய உணர்ச்சிதான் சுபிட்சத்துக்கும் வழி செய்கிறது.

சமயங்கள் கூறும் தர்மம் ஒன்றே சத்தியமானது; அதன் சக்தியே அழிக்க வொண்ணாதது. இந்தக் காரணத்துக்காக மட்டுமின்றி, நடைமுறைப் பிரயோஜனத்தைப் பார்த்தாலும் கூட, ஒழுக்கமில்லாத அரசியலால் புது சுபிட்சத்தை உண்டாக்க முடியவில்லை எனக் காண்கிறோம். ஆகவே சுபிட்சத்தை வேண்டியும் சமயத்தைப் பேணி வளர்க்க வேண்டியதாகிறது. சமயம் கலக்காத அரசியல், மக்களை எல்லா நிலைகளிலும் பாழ்படுத்தி, சூதுவாதற்ற நமது கிராம மக்களைக்கூட வெகு வேகமாகக் கெடுத்து விட்டதைக் காண்கிறோம்.

அரசியலைத் திருத்த முடியாது. அதனை **அகற்றவே** வேண்டும். இப்போதுள்ள பரிதாப நிலையை மாற்றி, நம்பிக்கை உண்டாக்க வேண்டுமாயின், அடுத்து வரும் சிறிது காலத்துக்குச் சமயமே நமது அரசியலாக இருக்க வேண்டும். ஏதேச்சாதிகாரத்தை நீக்கி, அதனிடத்தில் ஜனநாயகத்தை நிறுவியது போல், அரசியலின் இடத்தில் சமயத்தை நிலை நாட்ட வேண்டும். ஐம்பது ஆண்டுகளுக்கு முன் சுயராஜ்யத்துக்காக எப்படிப் பாடுபட்டோமோ, அவ்விதமே இப்போது சமயத்துக்காகப் பாடுபட வேண்டும்.

'சமயம்' என்று நான் கூறுகையில் எந்த ஒரு மதத்தையும் குறிப்பிடவில்லை. இந்தியாவிலுள்ள எல்லா மதங்களும் போதிக்கும் 'பயபக்தி'யையே குறிப்பிடுகிறேன். பாபத்தைக் கண்டு பயம், பகவானின் கருணையில் நம்பிக்கை வைத்து பக்தி செலுத்துவது — இவற்றையே சமயம் என்கிறேன். இவ்விரு அம்சங்களிலுமே ஒவ்வொரு மதமும் அதனைப் பின்பற்றுவோரின் வாழ்வில் ஆன்மிகத்தைக் கூட்டியிருக்கிறது. எல்லா மதங்களும் இவ்விரு அம்சங்களில் ஒரேபோல் உள்ளன. 'மதச் சார்பின்மை' என்ற ஒரு வார்த்தையை அரசியல்வாதிகள் ஓயாமல் சொல்லி வருகிறார்கள். இது எந்த மதக் கோட்பாடுகளையும் சேராத எதிர்மறை நிலையைத்தான் காட்டுகிறது. மாறாக, எல்லா மதங்களும் கூறும் பயபக்தியை மக்களுக்கு ஊட்ட வேண்டும் என்கிறேன்.

நமது மக்களுக்குப் பாபத்தில் பயமும், பகவானிடம் பக்தியும் ஊட்டி வரும் பலவேறு உத்தமமான மதத் தலைவர்களும், மத நிலையங்களுமே

இன்றைய நெருக்கடியில் மிக உயர்ந்த அரசியலை வளர்த்து வருகிறார்கள் என்று எவ்விதத் தயக்கமும் இன்றிக் கூறுகிறேன். சிதைந்து போன அரசியல் அஸ்திவாரத்தை இந்த மதத் தலைவர்களும் மத ஸ்தாபனங்களுமே செப்பனிட்டு வருகின்றன.

சமீபத்தில் மா ஆனந்தமயீ அம்மையார் தமது சிஷ்யர்களுடன் சென்னைக்கு வந்திருந்தார்கள். அவரைத் தரிசிக்கச் சென்ற மக்களுக்கு ஏற்பட்ட ஆழ்ந்த உணர்ச்சி அற்புதமானது. இன்னும் பல மகான்களும், மத நிலையங்களும் இவ்வாறே புனிதப் பணி செய்து வருகின்றன.

மொத்தத்தில் நாம் உன்னி உணர வேண்டிய உண்மை இதுவே — சமயமும், பாபத்தில் பயமும், பகவானிடம் நம்பிக்கையுமே இன்று நமக்கு அரசியல். 'அரசியல்' என்று பொதுவாகச் சொல்லப்படுவதன் ஊழல் நமக்கு வேண்டாம் என்று ஒதுக்கி வைப்போம்.

இன்றைய அரசியலில் மூழ்கி, அதன் ஊழல்களால் லாபமடைபவர்களுக்கு என்னுடைய யோசனை விசித்திரமாகத் தோன்றும். முதிர்ந்த அரசியல்வாதியான நானே இப்படி சொல்கிறேனே என்று ஆச்சரியப்படுவார்கள். ஐம்பது ஆண்டுகளுக்கு முன் அந்நிய ஆட்சி முறையிலே மூழ்கி லாபம் அடைந்த அனைவருக்கும் 'ஒத்துழையாமைத் திட்டம்' என்பது விசித்திரமாகவும் முட்டாள்தனமாகவும் தான் தோன்றியது. ஆனால் ஒத்துழையாமை ஒன்றே வழி என்று பிற்பாடு நிருபணமாயிற்று. இன்று நம் நாட்டில் நடப்பதாகச் சொல்லப்படும் சுயாட்சியின் தீர்க்க முடியாத ஊழல்களிலிருந்து அஹிம்சை முறையிலேயே விடுபட வேண்டுமாயின் நான் இங்கு சொல்லியிருப்பதொன்றே வழி. இப்போது தேசத்துக்கு மட்டும் சுயாட்சி கிடைத்திருக்கிறது; ஆனால் மக்கள் தரும வழியில் தம்மைத் தாமே அடக்கி ஆண்டுகொள்கிற தார்மிக சுயாட்சியைப் பெறவில்லை எனக் காண்கிறோம். வைசூரி கண்ட நகரத்தைக் காலி செய்து வெளியேறுவதுபோல், ஊழல் பிடித்த அரசியலிலிருந்து இப்போது வெளியேறி, ஆண்டவன் பாதத்தைச் சிக்கெனப் பிடித்துக் கொள்வோம்.

(அடிப்படை: ராஜாஜி 'ஸ்வராஜ்யா'வில் எழுதியது.)

# ராஜாஜியின் கருத்துக்கள்

## வங்காள தேச விடுதலை

**பா**கிஸ்தான் ஜனாதிபதி பூட்டோ, ஷேக் முஜிப் — உர் — ரஹ்மானை விடுதலை செய்ததும், அதையடுத்து முஜிப் — உர் — ரஹ்மான் செய்து வரும் காரியங்களும் அனைவருக்கும் தெரிந்த விஷயம். பூட்டோ எடுத்த பண்பான நடவடிக்கையையும், முஜிப்—உர் ரஹ்மானின் பேச்சிலுள்ள அழுத்தமான உண்மைகளையும் விமரிசித்துப் பாராட்டுவது பொன்னுக்கு முலாம் பூசுவதும், தாமரைக்கு வர்ணம் தீட்டுவதும் போன்ற அவசியமற்ற காரியமே. முஜிப்—உர்—ரஹ்மானின் தலைமையில் வங்காள தேசம் சுதந்திரத் தனி நாடாகிவிட்டது என்பதில் இனி எவ்வித ஐயமும் இல்லை. ஐ. நா. பொதுச் சபையில் வங்காள தேசமும் இடம் பெறும் என்று முஜிப் நம்பிக்கை தெரிவித்திருப்பது நிச்சயம் செயலில் வரும்.








ஜனாதிபதி பூட்டோ, முஜிபை விடுதலை செய்ததால், இதுவரை பாகிஸ்தானின் கிழக்குப் பகுதியாக இருந்த பிரதேசத்தில் ஆதிக்கம் பெறுவதைவிடச் சிறந்த சொத்தாகிய நட்பை அடையத் தகுதி பெற்றிருக்கிறார். இதனால் உலக அரங்கில் அவரது மதிப்பு உயருகிறது. 'இந்தியா முதலிய அண்டை நாடுகளுடன் நட்பை விரும்பும் ஒரு சிறிய நாடு பாகிஸ்தான்' என்று பூட்டோ டிசம்பர் 30ந் தேதி கூறியதையும் அவரது இச்செயலோடு இணைத்துப் பார்த்தால், அவருக்கு இந்தியாவின் நல்லெண்ணமும் உரித்தாகிறது.



முன்னாள் ஐ. நா. சபை காரியதரிசி திரு ஊதாண்ட் அவர்கள் ராஜாஜி-93 மலரை நியூயார்க்கில் வெளியிட்டு இந்தியப் பிரதிநிதிகளுக்கு வழங்கி மகிழ்ந்தார். படத்தில் திரு ஊதாண்ட், ஐ. நா. பிரதம நிர்வாக அதிகாரி திரு வி. வி. நரசிம்மன், ஐ. நா.வில் இந்தியாவின் நிரந்தரப் பிரதிநிதி திரு சமர் சேன், புதுதில்லி ஜவாஹர்லால் நேரு சர்வகலாசாலை துணைவேந்தர் திரு ஜி. பார்த்தசாரதி ஆகியோரைக் காணலாம்.

படம் உதவி: ஐ. நா.

## சிநேகமா, சந்தேகமா?

மனப்பான்மைகள் பலவிதமானவை. நட்பைவளர்ப்பதில் எதிராளியை எதிர்பார்க்காமல் நாமே நம்பிக்கையுடன் முதலடி வைத்து முன்னேற வேண்டும் என்பதில் நம்பிக்கை வைத்தவன் நான். இப்படிச் செய்வதால் பிற்பாடு நமக்கு இடுக்கண் நேரலாம் என்று மற்றவர்கள் கருதுகிறார்கள். அவர்கள் எதிர்த்தரப்பை எதிர்பாராமல் நாம் ஒருதலைப்பட்ச நட்பு நடவடிக்கை எடுப்பதற்குப் பதில், எப்போதுமே ஜாக்கிரதை உணர்ச்சியுடன் உஷாராக இருக்க வேண்டும் எனக் கருதுகிறார்கள். இவ்வாறு எப்போதும் எச்சரிக்கையாக இருப்பது பயத்தின் ஒரு வடிவம்தான். பாரத மாதா முஜிபை மட்டுமின்றி பூட்டோவையும் வாழ்த்தி மாலை போட வேண்டும் என்பதே என் மதம். பலசாலிகள் அநாவசியமாகப் பயத்தில் உழல வேண்டியதில்லை. இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்குமிடையில் எப்போதேனும் போர் மூண்டால் அந்நிய வல்லரசுகள் அதில் பங்கு கொள்ளும் என்று நினைப்பதற்குச் சிறிதளவும் இடமில்லை. இது அனைவருக்கும் தெரிந்ததே. பாகிஸ்தானில் கொதிப்படைந்த சிலர் இருப்பர் எனினும், அந்த நாடும்கூட இவர்களது உந்துதலின் மீது போரில் இறங்காது என நம்பலாம். தற்கொலையிலேயே முடியக்கூடிய போரில் இறங்குமளவுக்குப் பாகிஸ்தான் விவேகம் இழந்திராது. அவர்கள் இவ்விஷயத்தில் நன்றாக அநுபவித்துவிட்டவர்கள். இந்தியா, பாகிஸ்தான், வங்களா தேசம் அனைத்துமே நட்புடன் இருந்தால்தான் நாம் அனைவரும் திவாலா நிலையிலிருந்து மீட்கப் படுவோம்.

## பெர்மிட் - லைசென்ஸ் ஆட்சி

பெர்மிட் - லைசென்ஸ் முறையின் மூலம் அவ்வப்போது தேர்தல்களில் புதுப்பித்துக் கொள்ளும் சர்வாதிகாரத்தை விட அப்பட்டமான சர்வாதிகாரமே சிலாக்கியமானது. ஆள்கிற கட்சி தன்னையே அதிகாரத்தில் நீடித்துக் கொள்வதன் பொருட்டு, பெர்மிட் - லைசென்ஸ் விநியோகத்தைத் துஷ்பிரயோகம் செய்து தேர்தலுக்கு நிதி திரட்டுவது பெரும் அதருமமாகும். சுதந்திரம் வாய்ந்த தனிக்குழு ஒன்றிடம் பெர்மிட்-லைசென்ஸ் விநியோகப் பொறுப்பைத் தரவேண்டும் என்ற கோரிக்கைக்கு ஆளும் கட்சி செவி சாய்க்காமல், தன் போக்கிலேயே பிடிவாதமாயிருந்தால், எதிர்காலத்தில் என்றோ ஒருநாள் மற்றக் கட்சிகள் அனைத்தும் சேர்ந்து தேர்தல்களையே பகிஷ்கரிக்குமாறு நேரும். பெர்மிட் - லைசென்ஸ் ஆட்சி மாறாமலே நீடித்தால் ஆளும் கட்சி தவிர வேறெதற்கும் தேர்தலில் வெற்றி வாய்ப்பே கிடையாது. தற்போதுள்ள ஒழுக்கக் கேடான போக்கை ஆட்சேபித்து அஹிம்சா முறையில், ஆயினும் சக்திகரமாக, எதிர்ப்புச் செய்ய வேண்டும். எவ்வளவுக்கெவ்வளவு விரைவில் இந்த எதிர்ப்பு உருவாகிறதோ அவ்வளவுக்கவ்வளவு ஜனநாயகத்துக்கு க்ஷேமமாகும்.


AL-2
ஐடெக்ஸ்
அழகு சாதனங்கள்
கண்மை
பிந்தி சாந்து
குங்கும் பேஸ்ட்
EYETEX KUMKUM PASTE 5 IN 1
EYETEX
ARAVIND LABORATORIES
P. B. 1415, MADRAS-17



# ஆலயமும் ஆஸ்பத்திரியும்

ஜகத்குரு ஸ்ரீ காஞ்சி காமகோடி சங்கராசாரிய சுவாமிகள்

'மனிதர்களுக்குச் சேவை செய்வதே பகவானுக்குச் செய்கிற பூஜை. தனியாக பகவத் தியானம், பூஜை எதுவும் வேண்டாம்' என்று சொல்பவர்கள் இருக்கிறார்கள். இவர்களில் சிலர் கோயில்கள் முதலிய வழிபாட்டிடங்கள் வேண்டியதில்லை என்றும், அவற்றை வைத்திய சாலைகளாகவும் பள்ளிக்கூடங்களாகவும் மாற்றிவிட வேண்டும் என்றும் சொல்கிறார்கள். மனிதர்களுக்கு ஆறுதல் தருவது, நோய்ப் பிணி போக்குவது, கல்வியறிவு தருவது எல்லாம் பரம உத்தமப் பணிதான். அதில் பகவான் நிச்சயமாகப் பிரீதி அடைகிறான் என்பதும் பரம சத்தியம். ஆனால் யோசித்துப் பார்க்கும்போது 'மனித சேவையே பகவத் சேவை' என்பதன் மாற்று வாசகமும் பரம சத்தியம் என்று தோன்றுகிறது. பகவத் சேவை செய்வதும் மனிதர்களின் நன்மைக்காகத்தான் என்று தெரிகிறது. அதுவே மற்ற சமூக சேவைகளைவிட மனிதனுக்கு நிரந்தர நலனைத் தருவதுமாகும்.

ஆஸ்பத்திரிகளில் நோயாளிகளைச் சொஸ்தம் செய்து அனுப்புகிறோம். அப்புறம் அவர்கள் நல்லவர்களாக வாழ வேண்டாமா? லோகத்துக்குக் கெடுதல் செய்கிறவர்களாகவும், தங்களுக்கே அனர்த்தம் செய்து கொள்பவர்களாகவும் அவர்கள் இருந்தால் அவர்களைச் சொஸ்தப்படுத்தியதன் பயனை நாம் அடைய முடியுமா? புத்திக் கோளாறு உள்ளதாகச் சொல்லப்படும் பலரை என்னிடம் அழைத்து வந்து சொஸ்தப்படுத்த வேண்டும் என்று கேட்கிற போது நான் இந்த ரீதியில்தான் உள்ளுக்குள் நினைத்துக் கொள்கிறேன். அதை அப்போது அவர்களிடம் சொன்னால், என்னிடம் ஆறுதல் தேடி வருகிறவர்களுக்கு மனசு கஷ்டப்படும். அதனால் சொல்வதில்லை. இப்போது பொதுவாகச் சொல்கிறேன்: புத்திபூர்வமாக ஒரு தவற்றைச் செய்தால்தான் அது பாபமாகிறது. ஆனபடியால் புத்தி தங்கள் வசத்திலேயே இல்லாமல் சித்தப்பிரமம் பிடித்தவர்கள் செய்கிற எதுவும் பாபம் இல்லை. ஏதோ பூர்வ பாபத்துக்காக அவர்கள் இப்படியாகியிருக்கிறார்கள். ஆனால் இப்போது அவர்களுக்குப் பாபமில்லை. நாம் உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசுவதுபோல் சித்தப் பிரமை பிடித்தவர்கள் பேசுவதில்லை. மனசில் எது வருகிறதோ அதையே சொல்கிறார்கள். இவர்களையும் 'சொஸ்த'ப்படுத்துவது என்கிற பெயரில் மற்றவர்களைப் போல் ஏன் ஆக்க வேண்டும் என்று எனக்குத் தோன்றுவதுண்டு.

ஆஸ்பத்திரி வைத்து உடல் வியாதியைத் தீர்ப்பது போதாது. நோயாளிகளது மனசில் கெட்ட எண்ணங்கள் என்ற வியாதி இல்லாமல் செய்வதே அதைவிட முக்கியம். இவ்வாறேதான் பள்ளிக்கூடம் வைத்துப் படிப்பை விருத்தி செய்கிறோம். படித்து வெளிவந்தவர்கள் யோக்கியர்களாக இல்லாவிட்டால் பள்ளிக்கூடம் வைத்த பயன் நமக்கு ஏது? வித்யாசாலையோடும் வைத்தியசாலையோடும் மநுஷ்யனின் வாழ்வு முடிந்து விடுகிறதில்லை. அவன் நல்லவனாக இருக்க வேண்டும். இப்படி நல்லவனாக்குகிற நிலையங்களாக ஆலயங்களும் — ஆஸ்பத்திரி போலவே — அவசியம் இருக்கத்தான் வேண்டும். நாம் நல்லவர் ஆவதற்காக பகவத் தியானம், பூஜை இவை வேண்டியவைதான்.

மனிதனின் உடம்புக்கு ஆரோக்கியம் தருவது, புத்திக்குப் படிப்புத் தருவது, அவனுடைய தரித்திரத்தை நீக்கிச் செல்வச் சுபிட்சம் தருவது எல்லாவற்றையும் விட அவனை பகவானிடம் சேர்ப்பதே பேருபகாரம். நாமும் பகவானிடம் மனசைச் செலுத்தி தியானம், பூஜை இவைகளை அநுஷ்டித்தால்தான் மற்றவர்களை இவற்றில் ஈடுபடுத்த நமக்கு யோக்கியதை உண்டாகும்.

மனிதனையே தெய்வமாக நினைத்து அவனுக்குச் சேவை செய்வது சிலாக்கியம்தான். ஆனால் நாம் அப்படி நினைப்பதோடு நிற்காமல் அவனை உண்மையாகவே தெய்விகத்தில் ஈடுபடுத்த வேண்டும். இதற்காகவே ஆலயங்களை அவசியம் பேண வேண்டும்.

நல்லவனாவதற்குப் பக்தி தேவையில்லை என்று ஒரு வாதம். ஆனாலும் நடைமுறையில் பலவிதமான சுயநல ஆசைகளால் ஆட்டி வைக்கப்படுகிற ஜீவனைப் பரிசுத்தப்படுத்துவதற்கு பக்தியைப் போன்ற சாதனம் வேறு இல்லை. 'பகவான் என்று ஒருவன் சர்வ சாட்சியாகவும், சர்வ சக்தனாகவும் இருந்து கொண்டு நம் கர்மங்களுக்குப் பயன் தருகிறான்' என்கிற பயபக்தி உணர்ச்சிதான் யுக யுகாந்தரமாக மனிதனைத் தர்ம மார்க்கத்தில் நிறுத்துவதற்குப் பெரிய ஊன்றுகோலாக இருந்து வந்திருக்கிறது.

பக்தியின் லட்சியம் நல்லவனாக ஆக்குவது மட்டுமல்ல. நமக்குக் காரணமான சக்தியைத் தெரிந்து கொண்டு, அதற்கும் நமக்கும் பேதமில்லை என்ற பரம ஞானத்தை அடைந்து சம்ஸாரச் சுழலிலிருந்து தப்புவதே பக்தியின் லட்சியம். அதோடு, வெளி உலகத்துக்கு நல்லவனாக நடக்கவும்கூட அதுவே உதவி புரிகிறது.







# தேவியின் விஜயம்

ஆனந்தம், பிரேமை, சாந்தி, தெய்வ நினைவு இவை தவிர வேறெந்த புல்லிய உணர்ச்சிகளுமே ஒரு சந்நிதானத்தில் ஏற்படவில்லை எனில் அதன் பெருமையை என்னென்பது? அம்பிகையின் அவதாரமெனவே திகழும் ஸ்ரீ ஆனந்தமயி மாதாவின் திருமுன்னர் அமர்ந்திருந்த ஆயிரமாயிர மக்களுக்கு இந்த மகத்தான பாக்கியம் மூன்று நாட்கள் கிடைத்தது. ஜனவரி 7ந் தேதி முற்பகலிலிருந்து 9-ந் தேதி மாலை மயங்கும்வரையில் ஸ்ரீ ஆனந்தமயி அவர்கள் 'கல்கி'ப் பூங்காவில் தங்கியிருந்து பேரருள் சொரிந்தார்கள். எத்தனை எத்தனையோ சிந்தனையிலும், துயரிலும் உலைப்புண்ட மக்களுக்கு உள்ளத்தில் எல்லையில்லாத தூய உவகையை ஊட்டி அருளினார்கள்.

தேவி இங்கு வந்து மூன்று தினங்கள் தங்கியதும், புனித சுக்ரவார இரவு பத்து மணிக்கு யாரும் சொல்லாமல் தாமாகவே தனியாக நமது புதிய ரோடரி அச்சுக்கூடத்தில் பிரவேசித்து அநுக்கிரகித்ததும், மறுநாள் காரியாலய ஊழியர் அனைவரையும் தமது பிராண கோபாலனாகவும், பிரம்ம கோபாலனாகவும் பாவித்துப் பரவசமுடன் பாடிப்பாடி ஒவ்வொருவருக்கும் பிரசாதம் வழங்கியதும் என்றென்றென்றும் மறக்கவொண்ணாத பாக்கியமாகும்.

தேவியின் விஜயத்தைப் பற்றி எத்துணை எழுதினாலும் பூர்த்தியாகாது. அது நேரில் அநுபவத்தாலே அறியக் கூடிய ஒன்றாகும். தேவி வாய் திறந்து பேசவில்லை. ஆயினும் அவரது திருவுருவமே அன்பின் அலைகளை அள்ளி வீசிக் கொண்டு அபயமும் ஆறுதலும் அளித்தன. உள்ளுக்குள்ளே ஏக வஸ்துவில் நிலைப்பட்ட கரைகாணாத சாந்தம், வெளியிலே சகல வஸ்துக்களிடமும் அநுக்கிரகம் பொழியும் எல்லையற்ற பிரேமை — இவற்றை அறுபது மணிகளும் ஒரு விநாடிகூட இடையறாமல் அநுபவித்தோம். அறுபது மணி மட்டும் அல்ல; எழுபத்தைந்து ஆண்டுகளாகவே திவ்விய மாதா இந்த அக அமைதியிலும், புற அன்பிலுமே மூழ்கி அகமும் புறமும் அற்ற அத்வைத ரூபிணியாகத்தான் இருந்து வருகிறார். அம்மாவுக்குக் குழந்தைகள் நன்றி சொல்லும் வழக்கமில்லை. என்றாலும் இந்தத் தெய்வத்தாய் இங்கு வந்து நம்மிடைத் தங்கத் திருவுளம் கொண்டதை எண்ணி எண்ணி நெஞ்சுருகி அவரது பதும பாதங்களை நமஸ்கரிக்கிறோம். அன்னையின் பணிக்கு ஏற்ற பண்பும், அன்பும் நிறைந்த அவரது ஆசிரமவாசிகளுக்கும் நமது வணக்கங்களை அளிக்கிறோம்.

மா ஆனந்தமயி கல்கிப் பூங்காவைப் புனிதப்படுத்தியபோது நடைபெற்ற வரவேற்பு, நாமசங்கீர்த்தனம், வேத பாராயணம், அன்னை அவர்களே தமது அமுதக் குரலால் புரிந்த பஜனை இவற்றில் நேரில் கலந்து கொள்ள வாய்ப்புப் பெறாத கல்கி வாசகர்கள் இந்தப் பக்கங்களில் காணும் படங்களிலிருந்து அந்த அமைதியை, ஆனந்தத்தை, அன்பை ஓரளவு பருகுவராக.






கல்கி பூங்காவில் கடந்த மூன்று தினங்களாக ஸ்ரீ மா ஆனந்தமய அவர்களின் தரிசனத்தைக் கண் குளிர, மனம் குளிரக் கண்டு இன்புற்ற எண்ணற்றவர்களில் நானும் ஒருத்தி. ஆனந்தமயி அவர்களின் தரிசனமும், அவர்களது தெய்வீகச் சிரிப்பும், பரவசத் துடிப்பில் ஆழ்த்தும் மனோகரமான குரலும் என்றென்றும் மறக்க முடியாதவை. காலை வெய்யிலைக் கருதாமல், மாலைப் பனியை மதியாமல் எண்ணற்ற ஆண், பெண், குழந்தைகள் அன்னையின் திவ்விய தரிசனத்தில் கருத்தூன்றி, பஜனைப் பாடல்களை பஜித்த வண்ணம் குழுமியிருந்த காட்சி கண்கொள்ளாக் காட்சி! எம். எஸ். அவர்கள் தேனினும் இனிய குரலில் பக்தி இசையை வழங்கி, மாவின் அருள் ஒளியில் எல்லோரும் நெருக்கமாக ஒன்றி நிற்கும் பேற்றினை நல்கினார்கள். மா ஆனந்தமயி, அவர்கள் நம்மை விட்டுப் பிரிந்து செல்வது வேதனை தருவதாக மாறிவிடும் அளவுக்கு நம் உள்ளத்தைக் கொள்ளை கொண்டு விட்டார்கள்.

இந்தக் கிடைத்தற்கரிய பாக்கியத்தைச் சென்னை நகர மக்களுக்கு நல்கிய கல்கி அதிபர் அவர்களுக்கு என் மனம் நிறைந்த நன்றியையும், மகிழ்ச்சியையும் தெரிவித்துக் கொள்கிறேன்.


சென்னை-4
10-1-72 கோமகள்

கல்கி பூங்காவுக்கு 8-1-72ந் தேதி சனிக்கிழமை குடும்பத்தோடு வந்திருந்து மௌனமாக இருந்து அம்மா ஆனந்தமயியின் அநுக்கிரக வெள்ளத்தில் திளைக்கும் பேறு, பல்லாயிரக் கணக்கான பக்தர்களுடன் எளியேனுக்கும் கிடைத்தது. அம்மாவின் முன்னிலையில் நடைபெற்ற பித்துக்குளி முருகதாஸ் பஜனை, வேத பாராயணம், ஸ்ரீமதி எம்.எஸ். சுப்புலட்சுமியின் பக்திப் பாடல்கள் ஆகியவை களைக் கேட்டு, மெய் சிலிர்த்து எங்கோ தேவருலகில் சஞ்சாரம் செய்வது போன்றதோர் அனுபவத்தைப் பெற்றோம்.

தொட்டுக் கைப்பிடித்த அன்புக் கணவராலேயே ''மா'' (அம்மா) என்று அழைக்கப்பட்டவர் புனித ஆனந்தமயி. ''கல்கி''யில் 'அம்மா' சாரதாமணியின் புனித சரித்திரம் வெளியாகும் இந்த நல்ல தருணத்தில் நம் முன்னே இன்று நடமாடும் இன்னொரு சாரதை என்னத் தக்க மா ஆனந்தமயியின் தரிசனத்தைப் பெறக் கல்கி ஸ்தாபனத்தாரே உதவியதன் பொருத்தத்தை எண்ணிக் குதூகலித்தது என் உள்ளம்.

சமீபத்தில் குருதியாறு பெருகிய கிழக்கு வங்கத்தில் கியோரா என்ற இடத்தில் 30-4-1896ல் தோன்றியவர் மாதாஜி. 1924ம் ஆண்டு டாக்காவில் இருந்தபோது பக்தர்களுக்குத் தமது தெய்வீகத் தன்மையைப் புலப்படுத்தியவர். கிழக்கு வங்கத்துக்கு மாதாஜி இப்போது செல்ல வேண்டிய தன் அவசியத்தையே என் உள்ளம் உன்னியது. தாம் பிறந்த பொன்னாட்டில் அவர் மறுபடியும் கால் வைத்துப் போனால் பல தொல்லைகளுக்கு ஆளாகிய மக்களுக்கு அவர் தமது அருள் மகிமையால் ஆறுதல் அளிக்க வேண்டும். புதிய தேச நிர்மாணத்துக்கு அன்னையின் அருட்தொண்டு பெரிதும் துணைசெய்யும் என்பதில் ஐயமில்லை. மாதாஜி இந்தப் புனிதப் பணியையும் நிச்சயம் மேற்கொள்வார் என்றே நம்புவோம்.

சென்னை-2
9-1-72 வி. ச. வாசுதேவன்






"ராம்குமார்! இவள்தான் என் மனைவி சுஜாதா" என்று மனைவியைத் தன் நண்பனுக்கு அறிமுகப்படுத்தினான் ராஜேஷ்.

"வணக்கம்" என்று கரங்களைக் குவித்தான் ராம்குமார்.

"சுஜா! இது யார் தெரியுமா? இன்றைய திரைவானில் கொடி கட்டிப் பறக்கும் பின்னணிப் பாடகர் ராம்குமார். இப்போது இவன் பாட்டுக்கள் இல்லாத படமே கிடையாது. உனக்கும் தெரிந்திருக்குமே....?" பேசிக்கொண்டே போனான் ராஜேஷ்.

"வணக்கம்" என்றாள் சுஜாதா, விழிகளைச் சற்றே மலர்த்தி. பிறகு உள்ளே சென்று விட்டாள்.

ராஜேஷின் முகம் சப்பென்று சுருங்கிப் போயிற்று. இருந்தாலும் அதை வெளிக் காட்டிக் கொள்ளாமல் சமாளிக்க முற்பட்டான்.

'இவள் ஏன் இப்படி இருக்கிறாள்? பின்னணிப் பாடகர் ராம்குமார் என்றால் எத்தனை இளம் பெண்கள் ஓடி வந்து அவனை மொய்த்துக்கொண்டு புகழ்மாலை சூட்டுகிறார்கள்! இவள்மட்டும் ஏன் இப்படி இருந்து தொலைக்கிறாள்?' — அவனுக்குப் புரிபடவேயில்லை.

புதன்கிழமை யன்று அவனுக்குப் பிறந்த நாள். அன்றைய தபாலில் அவனுக்கு ஒரு புத்தகம் பரிசாக வந்தது. டில்லியிலிருக்கும் பிரபல எழுத்தாளர் பரசுராம் ராஜேஷின் பிறந்த நாளை நினைவில் வைத்துக் கொண்டு அதை அனுப்பியிருந்தார். பரசுராம் ராஜேஷின் தூரத்து உறவினர். ஆனால் உறவை விட ராஜேஷின் அபிமான எழுத்தாளர் என்பதுதான் முக்கியமானது.

ராஜேஷ் ஒரே மூச்சில் அந்த நாவலைப் படித்து முடித்து விட்டான். உடனே சுஜாதாவிடம் கொடுத்து, "இதைப் படித்துப் பார் சுஜா! ரொம்ப அருமையான நாவல். இதில் பரசுராமன் தற்காலச் சூழ்நிலையை மிக அழகாக எடுத்துக்காட்டி அற்புதமான ஒரு கருத்தை வலியுறுத்தி எழுதியிருக்கிறார்..." என்று கூறினான்.

சுஜாதாவும் அந்த நாவலை அன்றிரவே படித்து முடித்து விட்டாள். ஆனால் அதைப் பற்றி ஒரு வார்த்தை பேச வேண்டுமே! ஊஹூம். கிடையாது.

"சிந்திக்க வேண்டிய கருத்து இல்லையா, சுஜா!" வேண்டுமென்றே அவள் வாயைப் பிடுங்கினான் ராஜேஷ்.

"நன்றாக இருக்கிறது" என்று ஒரே வார்த்தையில் முடித்து விட்டாள் சுஜாதா.

'அட, இலக்கிய நயத்தை வேண்டுமானால் ரசிக்கத் தெரியாமல் போகட்டும். கதையின் கருத்தைப் பற்றிக் கூடவா ஏதேனும் அபிப்பிராயம் சொல்லக் கூடாது! இருந்தாலும் இவள் ரொம்ப மோசம்.'

தீபாவளி வெளியீடாக வந்த எட்டுப் படங்களுள் நடிக மன்னன் சுகுமார் நடித்த 'ராஜா' என்ற படம்தான் ரசிக மக்களின் ஏகோபித்த பாராட்டுக்களைப் பெற்றது. ராஜேஷுக்கும் சுகுமாரின் நடிப்புத்தான் ரொம்பப் பிடித்தமானது. வேறு யார் நடித்த படத்துக்கும் போக மாட்டான், 'ராஜா' படம் பார்க்க சுஜாதாவுடன் முதல் வாரமே சென்றான் ராஜேஷ். பத்திரிகைகளின் விமரிசனம் அப்படியே நூற்றுக்கு நூறு உண்மையாகவே இருந்தது. சுகுமார் ரொம்ப அருமையாக நடித்திருந்தார். அவர் எந்தப் படத்திலுமே சோடையாக இருந்ததில்லை என்றாலும் 'ராஜா'வில் அவருடைய நடிப்பு நடிப்புக் கலைக்கே ஓர் இலக்கணமாக இருந்தது. மெய் மறந்து சுகுமாரின் நடிப்பை ரசித்தான் ராஜேஷ்.

சுஜாதா மட்டும் சுஜாதாவாகவேதான் இருந்தாள். இவளால் இப்படி எப்படி இருக்க முடிகிறது? இந்த சுஜாதா மட்டும் ஏன் எதிலுமே ரசனையற்றவளாக இருக்க வேண்டும்? அதுவும் எல்லாக் கலைகளிலும் மிகுந்த ஈடுபாடு கொண்டிருந்த ராஜேஷின் மனைவியாக அமைந்து விட்டு இப்படி வெறும் பட்டிக்காட்டுப் பெண்ணாக இருப்பது எவ்வளவு துன்பகரமானது! அவர்களுக்கு மணமாகி இரண்டு வருடங்கள்தான் ஆகியிருந்தன. இதற்குள்ளாகவே அவனுக்கு வாழ்க்கை சலித்துப் போயிற்று.

மசக்கைத் தொந்தரவு அதிகமாக இருந்ததால் பத்து நாளைக்குப் பிறந்தகத்தில் போய் இருந்து விட்டு வருவதாகச் சொல்லிச் சென்றிருந்தாள் சுஜாதா. அன்று ஞாயிற்றுக் கிழமையாக இருந்ததால் ராஜேஷுக்கு வீட்டில் நேரம் போவது சிரமமாக இருந்தது. சுஜாதாவைப் போய்ப் பார்த்து விட்டு வரலாம் என்று மயிலாப்பூருக்குச் சென்றான்.

உள்ளே ரேடியோவில் 'ராஜா' படத்தின் ஒலிச் சித்திரம் கேட்டுக் கொண்டிருந்தது.



# பயமே பண்பு என்றால்?

கே. ஜெயலக்ஷ்மி

வீட்டில் உள்ள அனைவரும் அங்கே உட்கார்ந்து கேட்டுக் கொண்டிருந்தார்கள். சித்திரம் முடியும் தறுவாய் சற்றே வெளியில் தாமதித்தான் ராஜேஷ். நிகழ்ச்சி முடிந்தது.

'' 'ராஜா'வில் சுகுமாரின் நடிப்பு மிகப் பிரமாதம் அண்ணா!'' இப்படிச் சொன்னது சுஜாதாதான்.

''இந்த வருடம் அதற்கு ஜனாதிபதி பரிசு கூடக் கிடைக்கும் என்று கண்டிப்பாகச் சொல்லலாம்.'' இது சுஜாதாவின் அண்ணன் மாது.

''சுகுமாரின் முழுத் திறமையையும் நாம் பார்க்க வேண்டும் என்றால் புதுமையானதும் வரவேற்கத் தக்கதுமான ஒரு நல்ல கருத்துள்ள கதை படமாக்கப்பட வேண்டும் அக்கா! எழுத்தாளர் பரசுராமன் தம் நாவல் ஒன்றை இவருக்குப் பரிசாகச் சமீபத்தில் அனுப்பி யிருந்தார். மனத்தை விட்டு அகலாத கதைக் கரு. படிக்கப் படிக்கத் தெவிட்டாத அழகான நடை. அதைப் படமாக்க வேண்டும். ரொம்பப் பிரமாதமாக இருக்கும்...'' இப்படிச் சொல்லிக்கொண்டே போனது சுஜாதாவின் குரலேதான்.

ராஜேஷ் வியப்பு மலையின் உச்சிக்கே போய்ச் சிலையாக நின்றுவிட்டிருந்தான்.

ராஜேஷுக்குத் தன் காதுகளையே நம்ப முடியவில்லை. 'எதிலுமே ரசனையற்ற வெறும் ஜடம் என்று எண்ணியிருந்த என் சுஜாவா இப்படி எல்லா விஷயங்களிலும் ஈடுபாடு கொண்ட ரசிகையாக இருக்கிறாள்! — தன்னைக் கிள்ளி விட்டுப் பார்த்துக் கொண்டான். அவன் தூங்கவில்லை. அதனால் அவன் கனவும் காணவில்லை.

உள்ளே சுஜாதாவின் அக்கா சொன்னது காதில் விழுந்தது.

''நீ மாறவேயில்லை சுஜா. கல்யாணம் ஆவதற்கு முன்பு எப்படி இருந்தாயோ அப்படியேதான் இப்போதும் இருக்கிறாய். எனக்கென்னமோ பயமாக இருக்கிறதம்மா....''

ராஜேஷ் உள்ளே நுழைந்தான்.

''வாங்கோ.... மாப்பிள்ளை...வாங்கோ!'' மாது ராஜேஷை உற்சாகமாக வரவேற்றான். எல்லோரும் அதில் பங்கு கொண்டனர். ராஜேஷ் மட்டும் மனைவியைத் தனிமையில் சந்திக்கத் துடிதுடித்துக் கொண்டிருந்தான். அதனால் அவர்களுடைய உற்சாகம் அவனைப் பற்றிக்கொள்ளவில்லை.

இரவு சாப்பாட்டுக்குப் பிறகுதான் அவன் அவளைச் சந்திக்க முடிந்தது.

எடுத்த எடுப்பிலேயே கேட்டுவிட்டான், ராஜேஷ்.

''சுஜா! அங்கே இருக்கும்போது ஒரு மாதிரியாக இருக்கிறாய். இங்கே வந்தால் வேறு மாதிரியாக இருக்கிறாய். இது ஏன் என்று எனக்குத் தெரியலாமா?'' என்று கேட்ட ராஜேஷ் மாலையில் கூடத்தில் அவன் கேட்ட சம்பாஷணையைக் குறிப்பிட்டான்.

அவளுடைய கண்கள் நிறைந்திருந்தன. இதழ்கள் படபடத்தன.

''கல்யாணம் முடிந்து நான் முதன் முதவில் நம் வீட்டுக்குப் புறப்பட்ட அன்று என் அக்கா எனக்கு ஓர் அறிவுரை கூறினாள்...'' என்றாள் சுஜாதா தடுமாற்றத்துடன்.

''என்ன அது?''

''எங்கள் வீட்டில் எல்லோருக்குமே எல்லாக் கலைகளிலும் ஈடுபாடு அதிகம். அதுவும் எனக்கு அவைகளில் எல்லாம் ரொம்ப ஆசை. சம்பந்தப்பட்டவர்களைப் புகழ்வது — கேலி செய்வது இரண்டுமே நான் அதிகப்படியாகச் செய்வதாக அக்கா, அம்மா இருவருமே அடிக்கடி சொல்வார்கள். 'நீ ராம்குமார், சுகுமார் என்று பலரைத் தலையில் தூக்கி வைத்துக் கொண்டு கூத்தாடுகிறாய் சுஜா. உனக்குப் பிடித்த எழுத்தாளர்களை 'ஓகோகோ' என்று புகழ்கிறாய். அதையெல்லாம் இந்த வீட்டோடு நிறுத்திக்கொள். புருஷன் வீட்டுக்குப் போயும் இப்படியெல்லாம் அவனையும் இவனையும் புகழ்ந்து பேசினால் உன் கணவருக்குப் பிடிக்காது. அவைகளையெல்லாம் சகஜமாக எடுத்துக் கொள்கிற ஆண்கள் நம் சமுதாயத்தில் ரொம்பக் குறைவு. வீணாக உன் வாழ்வைக் கெடுத்துக்கொண்டு விடாதே! எல்லாவற்றையும் மனசோடு வைத்துக்கொள், போதும்' என்று அம்மா புத்தி சொன்னாள்...'' என்ற சுஜாதா பயத்துடன் அவனைப் பார்த்தாள்.

''அந்த மாதிரி பயமெல்லாம் இனிமேல் வேண்டாம்'' என்றான் அவன் அவள் முகத்தில் செல்லமாகத் தட்டியபடியே.

# மூவர் மறைவு



● காலஞ்சென்ற ஸ்ரீ கே. லக்ஷ்மணன் அவர்களைத் தொழிலுலகம் நன்கு அறியும். நிதி விஷயங்களில் தேர்ந்த ஞானமும், தொழிலகத் திட்டங்களை வகுத்துக் கொடுப்பதில் ஆழ்ந்த அறிவும் பெற்றிருந்த ஸ்ரீ கே. லக்ஷ்மணன் அவர்கள் இன்று தமிழகத்தில் தலைசிறந்து விளங்கும் பல தொழில் நிறுவனங்களுக்கு வித்திட்டவர். பாங்குத் துறையில் அவர் புரிந்த பணியும் வெகு சிறப்பானது. அவர் அறிவாளி மட்டுமல்ல; மனித இதயம் படைத்த பண்பாளரும் ஆவார். ஒருவரைப் பார்த்த மாத்திரத்திலேயே அவரிடம் ஜவேஜி விசேஷமாக இல்லாவிட்டாலும்கூட, 'இவர் நேர்மையானவர், நாணயம் உள்ளவர், தொழில் திறன் படைத்தவர். இவருக்கு நிதி உதவினால் அதன் மூலம் ஒரு தொழில் வளரும்' என்று எப்படியோ கண்டுபிடித்துப் பண வசதி செய்து தருவார் ஸ்ரீ கே. லக்ஷ்மணன். அவரது நம்பிக்கை வீண் போகாமல் சாமானிய நிலையில் இருந்த பலர் தொழிலதிபர்களாக வளர்ந்து, பெரிய தொழில்களை வளர்த்திருக்கிறார்கள். தர்மிஷ்டராகவும், தெய்வ சிந்தனை பெற்றவராகவும், நல்ல நண்பராகவும் வாழ்ந்து மறைந்த ஸ்ரீ லக்ஷ்மணனின் நினைவுக்கு இன்று பல தொழில் வர்த்தக அதிபர்கள் நன்றியுடன் அஞ்சலி செலுத்துவார்கள். ●




● சென்னை, ஸ்டான்லி மருத்துவக் கல்லூரியின் முன்னாள் முதல்வர் டாக்டர் ஏ. அனந்தநாராயண அய்யரின் மறைவு வைத்தியத் துறையின் பெரும் இழப்பாகும். மருத்துவத்துறை போதகராக நாற்பத்தைந்து ஆண்டுகளுக்கு மேல் பணிபுரிந்து பிரசித்தி பெற்றார். உத்தியோகத்திலிருந்து ஓய்வுபெற்ற பிறகு டாக்டர் அய்யர் ஆராய்ச்சித் துறையில் ஈடுபட்டு, விஞ்ஞான ஆராய்ச்சி வெளியீடுகள் இருநூற்றைம்பதும், இரண்டு மருத்துவத்துறை நூல்களும் வெளியிட்டார். சென்னையிலுள்ள பிரபல சர்ம நோய் நிபுணரான டாக்டர் ஏ. கிருஷ்ணு, கல்கத்தாவில் மருத்துவத் துறையில் பிரசித்திபெற்று விளங்கும் டாக்டர் ஸ்ரீமதி கிரிஜா இருவரும் டாக்டர் அய்யர் அவர்களின் அருமை மக்கள். நட்புக்கு எளியவரும், அடக்கமே உருவானவரும், கூர்த்த மதி படைத்த வேதாந்தியுமான நல்ல மனிதர் டாக்டர் அனந்தநாராயண அய்யரின் குடும்பத்துக்கு நம் அநுதாபங்கள். ●



● நீண்ட நெடுங் காலமாகச் சென்னை மாநகரின் சமூக வாழ்வில் முக்கியஸ்தராக விளங்கி வந்த ஸ்ரீ கே. எஸ். ராமஸ்வாமி சாஸ்திரியார் அவர்கள் பழுத்த பழமாக வாழ்ந்து இறைவன் திருவடி அடைந்து விட்டார்கள். சமயம், சமூக இயல், இலக்கியம், நுண்கலை ஆகிய பல துறைகளில் நடைபெறும் கூட்டங்களிலெல்லாம் தமது தொண்ணூறாவது வயது வரையில் உத்ஸாகத்துடன் கலந்து கொண்டவர். அவரது செயலூக்கத்தைப் பார்க்குமிடத்து, இந்தத் தொண்டு கிழவர் லக்ஷ்மிபுரம் இளைஞர் சங்கத்தின் பிரதான அங்கத்தினராக இருந்ததும் பொருத்தமாகவே தெரிந்தது. மதிப்புக்குரிய ஒரு பெரிய குடும்பத்தைச் சேர்ந்த இந்தப் பெருமகனாரின் மறைவு குறித்து ராஜாஜி கூறுவது நெஞ்சைத் தொடுகிறது: என்னுடைய அன்புக்கும் மதிப்புக்கும் உரிய ஸ்ரீ கே. எஸ். ராமஸ்வாமி சாஸ்திரியாரின் மறைவில், உத்தமமான அறிவுத் திறனும் அப்பழுக்கற்ற நடத்தையும் கொண்ட ஓர் உதாரண புருஷரைத் தமிழகம் இழந்துவிட்டது. "இவர் நிறை வாழ்வு வாழ்ந்தார்; பகவானின் மனிதனாக மறைந்துபோனார்" என்று ராஜாஜி கூறுவதற்கு அதிகமாக எழுத என்ன இருக்கிறது? ●

## வடபழநி ஆண்டவனுக்கு அரோகரா!

அண்டர் புகழும் தண்டபாணி அப்பன் கோயில் கொண்டு அருள்பெருக்கும் வடபழனி ஆலயத்தில் ஜனவரி 26ந் தேதி காலை 10 மணி அளவில் அதிவிமரிசையாகக் கும்பாபிஷேகம் நடக்கவிருக்கிறது. எண்ணற்ற முருக பக்தர்களைக் கவர்ந்திழுக்கும் வடபழனி ஆலயத்துக்கு ராஜகோபுரம் இல்லாத குறை தீர்ந்துவிட்டது. மற்றும் மகாமண்டபம், இதர விமானங்களின் திருப்பணியும் நிறைவுபெற்றுள்ளது. நாம் சொல்லாமலே அன்பர்கள் குடமுழுக்கு விழாவில் பெருந்திரளாகக் கலந்து கொள்வார்கள். அதோடு ஐயன் திருப்பணிக்கு நிதி உதவியும் அளித்து, அருளை இரட்டிப்பாக்கிக் கொள்ளக் கோருகிறோம். பொருள் அனுப்ப வேண்டிய முகவரி: பொருளாளர், ஸ்ரீ வடபழனியாண்டவர் கோயில் திருப்பணிக் குழு, சென்னை—26.



# கொஞ்சுமிளம் தென்றலோ, குலவ வரும் மல்லிகையோ!





கம கமக்கும் மல்லிகை மணம். இளமை கொழிக்கும் மேனியெழில். இரண்டையும் உங்களுக்கு வழங்கவே ஜேய் அழகு சோப். வில்லை கரைந்தாலும் சுகந்தம் குறையாத அதன் மென்மை நுரை உங்கள் சருமத்திற்கு நேயமானது. உங்கள் பைந்தளிர் மேனி என்றும் பதினறுகப் புதுமையுடன் பொலிய உபயோகியுங்கள் ஜேய்—ஜிகினைத் தாளுறை தரித்த ஒரே அழகு சோப்!

**உங்கள் புத்தெழில் பெருக ஜேய் அழகு சோப் மனங்கவர் மல்லிகை மணம் கமழ்வது.**

**டாடா** தயாரிப்பு.

# புதிய

# ரெம்கோ ஜுகல்பந்தி



க்ராஸ்
ஓவர்
சவுண்ட்

## வேறு எந்த ரேடியோவும் ஈடு செய்ய முடியாத அம்சங்களுடன்!

மிக உயர்ந்த வெளிப்படுதிறன்: 10 வாட்
மிகக் குறைந்த தொனிச்சிதைவு: 75%
வெளிப்படுதிறனில் சிதைவு 1%.
3 ஸ்பீக்கர்களுடன் "க்ராஸ்-ஓவர் ஸிஸ்டம்"

5 பாண்ட், 7 வால்வுகள், ஃபைன்
ட்யூனிங்குடன். விலை ரு. 975/- (வரிகள் தனி).

ரெம்கோ REMCO

**ரேடியோ & எலெக்ட்ரிகல்ஸ்**
**மேன்யுஃபேக்சரிங் கோ. லிட்.,**
மைசூர் ரோடு, பெங்களூர்-26.

மைசூர், கோவா, தமிழ்நாடு, காரைக்கால்
மற்றும் பாண்டிச்சேரிக்கு விநியோகஸ்தர்கள்:

**ஹெகடே அண்ட் கோ.,**
குப்தா மார்க்கெட், கெம்பகவுடா ரோடு,
பெங்களூர்-9 மற்றும் 11, அகர்சந்த்
மேன்ஷன், 35, மவுண்ட் ரோடு, சென்னை-2.

SISTA'S-RR 306 TAM

# அலை ஓசை

அமரர் கல்கி

## 3. பம்பாய்க் கடிதம்

கிட்டாவய்யர் பட்டணத்து நாகரிகத்தைக் கிராமங்களுக்குக் கொண்டு வர ஆசைப்பட்டார். அந்த ஆசையின் அறிகுறியாகச் சில காலமாய் அவர் தமது மனைவியைப் பெயர் சொல்லி நாலு பேருக்கு முன்னால் கூப்பிடவும் அவளுடன் சங்கோசமின்றிச் சம்பாஷிக்கவும் ஆரம்பித்திருந்தார்.

பீஹார் பூகம்பத்தையும் லலிதா தபால் ஆபீஸ் சென்றதையும் சம்பந்தப்படுத்திய தமது மனைவியின் பேதைமையை எண்ணியபோது அவர் முகம் புன்னகை பூத்து மலர்ந்தது.


''சரசு! பீஹாரிலே பூகம்பம் வந்தால் இவ்விடத்தில் நமக்கு என்ன வந்தது? வீண் காபரா செய்யாதே!'' என்று சொன்னார்.


''இது என்ன பேச்சு! பூகம்பம் பீஹாரிலிருந்து இவ்விடம் வர எத்தனை நேரம் செல்லும்?''

''அதெல்லாம் ஒன்றும் வராது. நம் ஊருக்கும் பீஹாருக்கும் ஆயிரத்தைந்நூறு மைல் தூரம் தெரியுமா? வீணாக அலட்டிக் கொள்ளாதே!''

''ஆமாம்! நான் வீணாக அலட்டிக் கொள்கிறேன். நீங்கள்...?''

இந்தச் சமயத்தில் மோட்சுவய்யர் மத்தியஸ்தம் செய்ய ஆரம்பித்தார். ''ஓய்! பெற்ற





மனம் பித்து என்று கேட்டதில்லையா? பெற்ற தாய்க்கு அப்படித்தான் கவலையாயிருக்கும். நம்மைப் போன்ற தடியர்களுக்கு நிர்விசாரம்!'' என்றார்.

''ஆமாம், ஆமாம்! உலகத்தில் ஒருவரும் பெண்ணைப் பெறவில்லை. இவள் தான் அதிசயமாகப் பெற்றாள்! 'பூவரச மரத்தைத் தேள் கொட்டிற்று — புளிய மரத்துக்கு நெறி கட்டியது' என்ற கதையாக, பீஹாரில் பூகம்பம் என்றால், அதற்காக நாம் பயப்பட்டுச் சாகவேண்டும் என்கிறாள். பெண் கல்வி வேண்டும் என்று இதற்காகத்தான் சொல்லுகிறது!''

மறுபடியும் சீமாச்சுவய்யர் குறுக்கிட்டு, ''ஓய்! மத்தியானம் சாப்பாட்டுக்கு மேலே ஒரு 'கழுதை' ஆட்டம் போடலாமா?'' என்றார்.

''பேஷாய்ப் போடலாம்; இங்கேயே சாப்பிடலாமே ஓய்!'' என்றார் கிட்டாவய்யர்.

''வேண்டாம்! அப்புறம் நம்முடைய வீட்டில் ....'' என்று சொல்லிக் கொண்டே சீமாச்சுவய்யர் வெளியேறினார்.

கிட்டாவய்யர் கொல்லைக் கிணற்றடிக்குக் குளிப்பதற்குச் சென்றார்.

சரஸ்வதி அம்மாள் வீட்டு வாசலுக்குச் சென்று குழந்தை லலிதா பீஹார் பூகம்பத்துக்குத் தப்பிப் பத்திரமாய் வந்து சேர வேண்டுமென்ற கவலையோடு அவள் வரும் வழியைப் பார்த்துக் கொண்டிருந்தாள்.

* * *

அக்கிரகாரத்தின் வீடு திரும்பிக் கொஞ்ச தூரம் போனதும் பெரிய சாலை இருந்தது. சாலையோடு அரை பர்லாங் தூரம் நடந்தால் தபால் சாவடி இருந்தது.

லலிதா ஓட்டமும் நடையுமாகச் சென்று ஐந்து நிமிஷத்தில் தபால் ஆபீஸை அடைந்தாள்.

அவள் உள்ளே போவதற்குள் ரன்னர் தங்கவேலு தபால் மூட்டையைக் கொண்டு போய்ப் போஸ்ட்மாஸ்டர் முன்னிருந்த மேஜையின் மேல் வைத்திருந்தான்.

நாலு அடி நீளமும் மூன்று அடி அகலமும் உள்ள அந்த மேஜையில் நாலாயிரம் இடத்தில் மை கொட்டிய அடையாளங்கள் காணப்பட்டன.

போஸ்ட்மாஸ்டர் பேனாவை மேஜையின் மேல் நீட்டி விட்டுத்தான் எழுது



வது வழக்கமோ என்று சொல்லும்படி தோன்றியது.

தபால்கார பாலகிருஷ்ணன் ரன்னர் தங்கவேலுவைப் பார்த்து, ''ஏன் அப்பா இத்தனை நேரம்? வழியில் எங்கேயாவது படுத்துத் தூங்கிவிட்டு வந்தாயோ!'' என்றான்.

''தினம் உனக்கு இது ஒரு கேள்வி. ஐந்து மைல் ஜிங்கு ஜிங்கு என்று ஓடி வந்து பார்த்தால் தெரியும்!'' என்றான் தங்கவேலு.

''சும்மா இருங்க, அப்பன்மார்களே! இதோ கிட்டாவய்யர் வீட்டுக் குழந்தை வருகிறது!'' என்று சொல்லிவிட்டுப் பங்காரு நாயுடு தம் கையிலிருந்த நோட்டுப் புத்தகத்தில் ஆழ்ந்து கவனம் செலுத்தினார்.

லலிதா ஓடி வந்ததினால் ஏற்பட்ட மூச்சு இரைப்புடனே, ''போஸ்டு மாஸ்டர்! எனக்கு ஏதாவது லெட்டர் வந்திருக்கிறதா?'' என்று கேட்டாள்.

போஸ்டு மாஸ்டர் அப்போதுதான் அவளுடைய வரவை அறிந்தவர்போல் நிமிர்ந்து பார்த்து, ''ஓகோ! நீயா குழந்தை? கொஞ்சம் உட்காரு! தபால் கட்டை உடைத்துப் பார்த்துச் சொல்கிறேன்!'' என்றார்.

''இன்னும் கட்டு உடைக்கவில்லையா, ஸார்!''

''கட்டும் உடைக்கவில்லை; குட்டும் உடைக்கவில்லை!....''

''சீக்கிரம் உடைங்கோ, ஸார்!''

''என்னம்மா அவ்வளவு அர்ஜண்டு?''

''அர்ஜண்டுதான், ஸார்! இன்றைக்கு பம்பாயிலிருந்து எனக்குக் கடிதம் வரும்.''

''இவ்வளவுதானே? ஹூம்! பம்பாயிலிருந்துதானே? இதற்கா இவ்வளவு அவசரம்? ஒருவேளை சிங்கப்பூரிலிருந்து கடிதம் வருகிறதாக்கும் என்று பார்த்தேன்.''

''சிங்கப்பூர் ரொம்ப உசத்தியோ? எங்க பம்பாயிலே...''

''உங்க பம்பாய் மட்டும் ஒசத்தியோ? எங்க சிங்கப்பூரிலே...''

''எங்க பம்பாயிலே, விக்டோரியா டெர்மினஸ் ஸ்டேஷனை நீங்கள் பார்த்தால் அப்படியே அசந்து போய்விடுவேள், ஸார்!''

''எங்கள் சிங்கப்பூர் ரயில்வே ஸ்டேஷனுக்கு உறை போடக் காணாது உங்க விக்டோரியா டெர்மினஸ்! தெரியுமா, குழந்தை!''

''எங்க பம்பாயிலே எட்டு மாடி வைத்த வீடு இருக்கு, ஸார்!''

''ஹும்? இவ்வளவுதானா? சிங்கப்பூரிலே இருபத்து நாலு மாடி வைத்த வீடு இருக்கே?''

''எங்க பம்பாயிலே மச்சு வைத்த மோட்டார் பஸ் இருக்கே?''

''எங்க சிங்கப்பூரிலே மாடி வைத்த ரிக்ஷா வண்டி இருக்கே?''

''எங்க பம்பாயிலே வழவழவென்று தார் ரோடு இருக்கே?''

''ஹும்! எங்க சிங்கப்பூரிலே ரப்பர் ரோடு போட்டிருக்கே?''

''உம்... வந்து... வந்து... எங்க பம்பாயிலே அத்தங்கா இருக்காளே?''

''ஹும்!... எங்க சிங்கப்பூரிலே அய்யங்கார் இருக்காரே!''

''உங்களோடு போட்டி போட என்னால் முடியாது! தபால் கட்டைப் பிரியுங்கோ, ஸார்!''

''நிஜமாய்ப் பிரிச்சு விடட்டுமா?''

''நிஜமாய், சீக்கிரமாய்ப் பிரியுங்கோ ஸார்! உங்களுக்கு ரொம்பவும் புண்ணியம் உண்டு, ஸார்!''

''இதோ உடைச்சுட்டேன், குழந்தை!'' என்று சொல்லிக் கொண்டே போஸ்டுமாஸ்டர் தபால் கட்டைப் பிரித்துத் தபால்களின் விலாசத்தை ஒவ்வொன்றாகப் பார்க்கத் தொடங்கினார்.

''அச்சா! இதோ இருக்கிறது குழந்தை, பம்பாய்க் கடிதம்! ஆனால் விலாசம் தப்பா இருக்கே! உங்க அப்பா பேரல்லவா...''

''இங்கே கொடுங்க ஸார், பார்க்கலாம். இது எங்க அப்பாவுக்குத்தான். எங்க அத்திம்பேர் எழுதியிருக்கார். இன்னும் பாருங்க, ஸார்! எனக்குக் கட்டாயம் லெட்டர் இருக்கும்!''

''ஆஹா! இதோ ஒன்று இருக்கு. இதுவும் உங்க அப்பாவுக்குத்தான்.''

''இங்கே கொடுங்கள்! ஆமாம்; இதையும் அப்பாவிடம் கொடுத்து விடுகிறேன். எனக்கு ஏதாவது கடிதம் இருக்கா என்று பாருங்கோ, ஸார்!'' என்று ஏமாற்றமான குரலில் கூறினாள் லலிதா.

போஸ்ட்மாஸ்டர் எல்லாத் தபால்களையும் பார்த்த பிறகு கடைசியாக அடியில் இருந்த கடிதத்தைப் பார்த்து ''ஆகா! இதோ இருக்கு உன் தபால்! எல்லாவற்றுக்கும் அடியில் போய் உட்கார்ந்திருக்கு!'' என்று சொல்லிவிட்டு எடுத்துக் கொடுத்தார்.

லலிதா ஆவலோடு கடிதத்தை வாங்கிக் கொண்டு வாசற் பக்கம் குதித்தோடினாள். தபாலாபீசின் வாசலிலேயே உறையை உடைத்து உள்ளே இருந்த கடிதத்தை எடுத்துப் பார்த்தாள். அந்தக் கடிதத்தில் பின்வருமாறு எழுதியிருந்தது :—

தாதர், பம்பாய்
14—1—1934

என் பிரியமுள்ள உயிருக்கு உயிரான தோழி லலிதாவுக்கு, அத்தங்காள் சீதா அன்புடன் எழுதியது.

போன ஞாயிற்றுக்கிழமை நான் எழுதிய கடிதம் உனக்குக் கிடைத்திருக்கும். அதை எழுதும்போது மிகவும் சந்தோஷமாயிருந்தேன். வரிந்து வரிந்து நாலு பக்கம் எழுதித் தள்ளினேன். நான் எழுதும் போது அம்மா வந்து பார்த்துவிட்டு, 'சீதா! இவ்வளவு நீளமாய்க் கடிதம் எழுதுவதற்கு அப்படி என்னதான் சமாசாரம் இருக்கும்?' என்று கேட்டாள். 'அம்மா! நாலு பக்கம் எழுதியும் இன்னும் சமாசாரம் முடியவில்லை. தொடர்கதை மாதிரி அடுத்த வாரம் எழுதப் போகிறேன்' என்றேன். அம்மா என் கன்னத்தில் ஒரு முத்தம் கொடுத்துவிட்டு, 'என் கண்ணே! இப்படியே நீயும் லலிதாவும் உங்களுடைய ஆயுள் முழுவதும் சிநேகிதமாயிருங்கள்!' என்றாள். அப்போது அம்மாவின் கண்ணில் கண்ணீர் சுரந்திருப்பதைப் பார்த்து மிகவும் ஆச்சரியப்பட்டுப் போனேன். 'இது என்ன அம்மா? எதற்காகக் கண்ணீர் விடுகிறீர்கள்?' என்று நானும் வருத்தமாகக் கேட்டேன். 'ஒன்றுமில்லை, சீதா! எனக்கு இந்த உலகில் சிநேகிதிகளே இல்லை. நீயாவது ஒரு நல்ல சிநேகிதியைப் பெற்றிருக்கிறாயே என்பதற்காகச் சந்தோஷப்பட்டேன். வேறொன்றுமில்லை' என்றாள்.

'அது எப்படி அம்மா! சந்தோஷத்தினால் யாராவது கண்ணீர் விடுவார்களா?' என்று மறுபடியும் கேட்டேன். 'எத்தனையோ கதைப் புத்தகங்கள் படிக்கிறாயே, சீதா! ஆனந்தக் கண்ணீர் என்று கேட்டதில்லையா?' என்றாள். 'நானும் லலிதாவும் சிநேகமாயிருப்பதில் உனக்கு அவ்வளவு ஆனந்தமா?' என்று ஆச்சரியத்துடன் கேட்டேன்.

'ஆமாம், சீதா! யார் கண்டார்கள்? எனக்கு ஏதாவது காலத் தலையை வலித்ததென்றால் உனக்கு வேறு துணை யார் இருக்கிறார்கள்? லலிதாவின் சிநேகம் உனக்கு ஒரு காலத்தில் மிகவும் உபயோகமாயிருக்கலாம் என்று சொன்னேன்.'

இந்த மாதிரியெல்லாம் அம்மா பேசியது அப்போது எனக்கு ரொம்பவும் ஆச்சரியமாயிருந்தது. ஆனால், அம்மாவினுடைய மனத்துக்குள் எங்களுக்கு வரப் போகிற விபத்து தெரிந்திருந்ததோ, என்னமோ?

லலிதா! நான் மேலே என்னத்தை எழுதுவேன்! சென்ற கடிதம் எழுதின மறுநாளே அம்மா சுரமாகப் படுத்துக் கொண்டாள். 'சாதாரண சுரம், இரண்டு நாட்களில் சரியாய்ப் போய் விடும்' என்று அம்மா சொன்னதை நம்பிச் சும்மா இருந்துவிட்டோம். மூன்றாம் நாள் அப்பாவுக்கு ஏதோ சந்தேகம் வந்து டாக்டரை அழைத்து வந்தார். டாக்டர் 'டைபாய்டு சுரம்' என்று சொல்லிவிட்டார். 'இந்த அம்மாள் போஷாக்குக் குறைவினால் ரொம்பவும் மெலிந்து போயிருக்கிறாள். இத்தனை நாள் கவனியாமல் இருந்துவிட்டீர்களே?' என்று அப்பாவை டாக்டர் கேட்டபோது எனக்குச் 'சுருக்' என்றது. அடிக்கடி அம்மா விரதம் இருந்ததும் பட்டினி கிடந்ததும் அதைப் பற்றி அப்பா கொஞ்சம்கூடக் கவனியாமல் இருந்ததும் ஞாபகம் வந்தது.

லலிதா! அதையெல்லாம் இப்போது எழுதி என்ன பிரயோஜனம்! அம்மாவுக்கு உடம்பு ரொம்ப 'அதிகமாகிவிட்டது. 'கடவுள் அருள் இருந்தால் பிழைப்பாள்!' என்று அப்பாவிடம் டாக்டர் சொல்லிக் கொண்டிருந்தார்.

கடவுளின் அருள் இருக்குமா, லலிதா! அல்லது கடவுள் என்னை அநாதையாக விட்டு விட்டு அம்மாவை அவரிடம் அழைத்துக் கொண்டு விடுவாரா?

மாமாவுக்கு அப்பா கடிதம் எழுதியிருக்கிறார், உடனே புறப்பட்டு வரும்படி. நீயும் சொல்லு. மாமா வந்தால் ஒருவேளை அம்மா பிழைத்துக் கொண்டாலும் பிழைத்துக் கொள்வாள்.

அடுத்த வாரக் கடிதம் உனக்கு எழுதுவேனோ என்னமோ தெரியாது. கடிதம் எழுதினாலும் எழுதாவிட்டாலும் எப்போதும் உன் நினைவாகவே இருப்பேன்.

உன் அருமைத் தோழி,

**சீதா.**

தபால் சாவடித் திண்ணையில் நின்றபடியே மேற்படி கடிதத்தைப் படித்த லலிதாவின் உள்ளம் உருகி விட்டது. அவள் கண்களிலிருந்து கண்ணீர் பெருகிற்று. விம்மி அழத் தொடங்கினாள்.

விம்மிய சத்தம் தபாலாபீஸுக்குள்ளே கேட்டது. போஸ்ட்மாஸ்டர் பங்காரு நாயுடு, போஸ்டுமேன் பாலகிருஷ்ணன், ரன்னர் தங்கவேலு ஆகிய மூன்று பேரும் வெளியே ஓடி வந்து பார்த்தார்கள்.

"என்ன, அம்மா! என்ன?" என்று கவலையுடன் கேட்டார்கள். கையில் பிரித்து வைத்திருந்த கடிதத்தைப் பார்த்துவிட்டு, "குழந்தை! கடிதத்தில் ஏதாவது துக்க சமாசாரம் இருக்கிறதா?" என்றார்கள்.




"ஆமாம்; பம்பாயில் இருக்கிற என்னுடைய அத்தைக்கு உடம்பு சரியில்லையாம்!" என்றாள் லலிதா.

"இதற்கு ஏன் அம்மா அழ வேண்டும்? உலகத்தில் எத்தனையோ பேருக்கு உடம்புக்கு வருகிறது. சொஸ்தமாகிவிடவில்லையா?" என்றார் போஸ்டுமாஸ்டர். பிறகு, "பாலகிருஷ்ணா! இந்தக் குழந்தையைக் கிட்டாவய்யரின் வீடு வரையில் கொண்டு போய் விட்டு விட்டு வா!" என்றார்.

"ஆகட்டும், ஸார்! வா, அம்மா!" என்று சொல்லிக் கொண்டே பாலகிருஷ்ணன் புறப்பட்டான்.

## 4. வாசலில் ரகளை

கிட்டாவய்யரின் மனைவி சிறிது நேரம் வாசலில் கால் கடுக்க நின்று லலிதாவை எதிர்பார்த்தாள். பிறகு சற்று நேரம் திண்ணையில் உட்கார்ந்து பார்த்தாள். வீதியோடு யாராவது புருஷர்கள் சென்றால் உடனே எழுந்து ரேழியில் போய் நின்று கொள்வாள். இரண்டொரு தடவை வீட்டுக்கு உள்ளேயும் போய்விட்டு வந்தாள்.

கடைசியாக, லலிதா கையில் பிரித்த கடிதத்துடனும் கண்ணில் கண்ணீருடனும் துணைக்குத் தபால்கார பாலகிருஷ்ணனுடனும் வருகிறதைப் பார்த்ததும் சரஸ்வதி அம்மாள் மனம் கலங்கி விட்டாள். பாய்ந்து சென்று குழந்தையைத் தாவிக் கட்டிக் கொண்டு, "அடி



பெண்ணே! என்னடி விஷயம்? நான் பயப்பட்டது சரியாய்ப் போய்விட்டதே?..... பாலகிருஷ்ணா! குழந்தை ஏன் அழுகிறாள்? தடுக்கி விழுந்துவிட்டாளா?'' என்று அலறினாள். மனக் குழப்பத்தினால் அக்கம் பக்கத்து வீட்டு ஆண் பிள்ளைகள் வாசலில் வந்து நிற்பதைக்கூட அவள் கவனிக்கவில்லை.

அம்மா இவ்விதம் கேட்டதும் லலிதாவின் தேம்பல் அதிகமாயிற்று. ஆனால் பாலகிருஷ்ணன், ''அதெல்லாம் ஒன்றுமில்லை, அம்மா! பம்பாயிலிருந்து ஏதோ கடிதம் வந்திருக்கு! அதைப் படித்து விட்டுக் குழந்தை அழுகிறது!'' என்றான்.

'' இவ்வளவு தானே? கடிதத்தில் என்ன எழுதியிருக்கிறது லலிதா? என்ன தான் இருந்தாலும் நீ எதற்காக அழ வேண்டும்?'' என்று சரஸ்வதி அம்மாள் கேட்டாள்.

இதற்கும் லலிதாவிடமிருந்து பதில் வராமல் போகவே, சரஸ்வதி அம்மாளுக்குக் கோபம் வந்துவிட்டது. ''யாராவது செத்துக்கித்துத் தொலைந்து போய்விட்டார்களா, என்ன? நீ சொல்லாவிட்டால் நானாகப் பார்த்துக் கொள்கிறேன்'' என்று லலிதாவின் கையிலிருந்த கடிதத்தைப் பிடுங்கினாள்.

கொல்லைக் கிணற்றில் 'விச்ராந்தியாகக் குளித்துவிட்டு அப்போதுதான் வீட்டுக் கூடத்துக்கு வந்த கிட்டாவய்யர் வாசலில் நடந்த கலாட்டா சத்தத்தைக் கேட்டு வெளியே வந்தார்.

தான் சொன்னதைக் கேளாமல் லலிதா தபாலாபீசுக்குப் போனதற்காக அவளைத் தம் மனைவி அடிப்பதாக எண்ணிக் கொண்டு, ''இந்தா, சரசு! குழந்தையை அடிக்க வேண்டுமானால் இப்படித்தானா நாலு பேர் சிரிக்கும்படி

அன்புக்குரிய குழந்தைகளே!

ஆசிகள் பல.

வருகிற தமிழ்ப் புத்தாண்டு தினத்திலிருந்து தமிழ் கூறும் நல்லுலகமெங்கும் உள்ள சிறுவர் சிறுமியருக்கென்று கல்கி ஸ்தாபனம் ஒரு புதிய பத்திரிகையை ஆரம்பிக்கப் போகிறது.

புதிய பத்திரிகைக்கு என்ன பெயர் வைப்பது என்று யோசித்த போது தமிழ் நாட்டுக் குழந்தைகளுக்காக ஆரம்பமாக விருக்கும் பத்திரிகைக்குப் பெயர் சூட்டும் பொறுப்பை அவர்களிடமே விட்டு விடலாமே என்று தோன்றியது.

தெருவிலே நின்று கொண்டு அடிக்க வேண்டும்? உள்ளே வந்து கதவை இழுத்துத் தாழ்ப்பாள் போட்டுக் கொண்டு அடித்துக் கொன்றுவிடு. தெருவிலே வேண்டாம்'' என்றார்.

''நான் ஒன்றும் உங்கள் குழந்தையை அடிக்கவும் இல்லை; கொல்லவும் இல்லை. தபால்டாபீசிலிருந்து வரும்போது அழுது கொண்டே வந்தாள். கேட்ட கேள்விக்குப் பதில் சொல்லாதபடியால் கையில் கொண்டு வந்திருந்த கடிதத்தை வாங்கிப் படிக்கலாம் என்று நினைத்தேன். அதற்குள் நீங்கள் வந்து, 'அடிக்கிறாய்' 'கொல்லுகிறாய்' என்கிறீர்கள். நீங்களும் உங்கள் பெண்ணும் எப்படியாவது போங்கள். என் வயிற்றில் இவள் பிறக்கவில்லை என்று நினைத்துக் கொள்கிறேன்'' என்று சரஸ்வதி அம்மாள் உரக்கச் சத்தம் போட்டுக் கத்திவிட்டு விடுவிடு என்று உள்ளே போனாள். கோடை இடி இடித்து ஆலங்கட்டி மழை பெய்துவிட்டது போலிருந்தது.

மனைவியின் கோபத்தைக் கிட்டாவய்யர் சிறிதும் பொருட்படுத்ாதவராய், ''பாலகிருஷ்ணா! என்ன சமாசாரம்? குழந்தை எதற்காக அழுகிறாள்?'' என்று கேட்டார்.

அவன் விவரத்தைத் தெரிவித்து விடைபெற்றுக் கொண்டு திரும்பத் தபாலாபீஸுக்குப் போனான். ஐயர் வீட்டில் காப்பி சாப்பிடச் சொன்னால் சாப்பிடுவதற்குத் தயாராக அவன் வந்திருந்தான். ஆனால் அங்கு நடந்த ரகளையைப் பார்த்துவிட்டு உடனே திரும்பினான்.

தபாலாபீசை அடைந்ததும், ''ஸார்! பட்டாமணியம் கிட்டாவய்யர் இவ்வளவு சாதுவாயிருக்கிறாரே? அவருக்கு வாய்த்த சம்சாரம் ரொம்பப் பொல்லாத அம்மா, ஸார்! சற்று நேரத்துக்குள் எவ்வளவு ரகளை பண்ணிவிட்டாள்!'' என்றான்.

''என்னடா, பாலகிருஷ்ணா இப்படிச் சொல்கிறாய்! கிட்டாவய்யர் சம்சாரம் பரம சாதுவாயிற்றே! இருக்கும் இடமே தெரியாதே! நான் எத்தனையோ தடவை போயிருக்கிறேன். அந்த அம்மாளின் குரலைக் கூடக் கேட்டதில்லையே?'' என்றார் நாயுடு.

''உங்கள் துரதிர்ஷ்டம் ஸார், அது! இன்றைக்கு நீங்கள் வந்திருந்தால் பார்த்திருப்பீர்கள்! அடே அப்பா! தாடகை, சூர்ப்பனகை எல்லாரும் அப்புறந்தான்! மொத்தத்திலே பெண் பிள்ளைகளைக் கட்டிக் கொண்டு மாரடிக்கிறதே, கஷ்டந்தான்!'' என்றான் பாலகிருஷ்ணன்.

''பாலகிருஷ்ணா! நான் சொல்வதைக் கேள். நீ பிரம்மச்சாரி. அதனால் உனக்கு இந்த விஷயம் தெரியவில்லை. ஒவ்வொரு பெண் பிள்ளையிடத்தும் தாடகையும், சூர்ப்பனகையும் குடிகொண்டிருக்கிறார்கள். அதே மாதிரி லக்ஷ்மியும் சரஸ்வதியும் சீதையும் அருந்ததியும். இருக்கிறார்கள். புருஷன் யாரைக் கூப்பிடுகிறானோ, அவர்கள் வெளி வருவார்கள். சூர்ப்பனகையை விரும்பினால் சூர்ப்பனகையும் சீதையை விரும்பினால் சீதையும் வருவார்கள். ஏதாவது பைத்தியக்காரத்தனமான எண்ணம் எண்ணிக் கல்யாணம் பண்ணிக்கொள்ளாமல் இருந்து சாப்பாட்டுக்குக் கஷ்டப்படாதே!'' என்றார் நாயுடு.

''ஆகக் கூடி, கல்யாணம் செய்து கொள்வதென்பது சமையல் செய்து போடுவதற்காக என்றுதானே சொல்கிறீர்கள்! நான் கல்யாணம் செய்து கொண்டால், 'லவ் மாரியேஜ்'தான் செய்து கொள்வேன்!'' என்று பால

எங்கே, உங்கள் அபிமானப் பத்திரிகையாக விளங்கப் போகும் புதிய சிறுவர் சிறுமியர் மடலுக்கு, ஒரு பெயரைச் சூட்டுங்கள் பார்க்கலாம்!

உங்கள் கடிதம் எங்களுக்கு ஜனவரி 31-ம் தேதிக்குள் கிடைக்க வேண்டும்.

மிகவும் அழகான, பொருத்தமான பெயர் என்று நாங்களும் ஒப்புக்கொண்டு ஏற்கப்படும் பெயரை எழுதி அனுப்பிய குழந்தைக்குக் கல்கி பத்திரிகையின் காவல் தெய்வமான கணபதி ஆசி வழங்குவதோடு ஆறு கொழுக்கட்டைகளையும் அன்பளிப்பாக வழங்குவார். அவசரப்பட்டு அதை அப்படியே சாப்பிட்டுவிடக் கூடாது! விண்டு பார்த்தால் ஒவ்வொரு கொழுக்கட்டைக்குள்ளேயும் ஒரு பொற்காசு இருக்கும்!

எந்தக் குழந்தைக்கு இந்தக் கொழுத்த கொழுக்கட்டைப் பரிசு கிடைக்கிறதோ பார்க்கலாம்!

அன்புடன்

சதாசிவம்

ஆசிரியர், கல்கி



கிருஷ்ணன் சொல்லிவிட்டு அப்போது பிரபலமாகியிருந்த ஒரு சினிமாப் பாட்டைச் சீட்டியடிக்கத் தொடங்கினான்.

* * *

இங்கே கிட்டாவய்யர் தம் குழந்தையை அன்புடன் தடவிக் கொடுத்துவிட்டு, ''லலிதா! ஏன் அழுகிறாய்? கடிதத்தில் அப்படி என்ன எழுதியிருக்கிறது, அம்மா?'' என்று கேட்டார். லலிதா விம்மலையும் தேம்பலையும் பிரயத்தனப்பட்டு அடக்கிக் கொண்டு, ''அப்பா! அத்தைக்கு உடம்பு ரொம்பச் சரிப்பட வில்லையாம். சீதா எழுதியிருக்கிறாள். உங்களுக்கும் இதோ கடிதம் வந்திருக்கிறது'' என்று சொல்லித் தான் கொண்டு வந்திருந்த இரண்டு கடிதங்களையும் அவரிடம் கொடுத்தாள்.

கிட்டாவய்யர் முதலில் ஒரு கடிதத்தைப் படித்துப் பார்த்தார். உடனே அவருடைய கண்களில் நீர் பெருகத் தொடங்கியது. உள்ளே சென்று சாய்மான நாற்காலியில் சாய்ந்தார்.

சரஸ்வதி அம்மாள் சற்று நேரத்துக்கெல்லாம் சாந்தமான குரலில், ''சாப்பிட வரலாமே!'' என்றாள்.

கிட்டாவய்யர் அது காதில் விழாதவர் போல் மௌனமா யிருந்தார்.

''ஏன் கவலையா யிருக்கிறீர்கள்? கடிதத்தில் என்ன எழுதியிருக்கிறது?'' என்று சரஸ்வதி அம்மாள் மீண்டும் கேட்டாள்.


''ராஜத்துக்கு உடம்பு சரிப்பட வில்லையாம்'' என்றார் கிட்டாவய்யர்.

''உடம்பு சரிப்படாவிட்டால் என்ன? தானே சரியாய்ப் போய் விடுகிறது. இதற்காகச் சாப்பிடாமல் இருக்கப் போகிறீர்களா? வாருங்கள்! குழந்தைகள் சாப்பிட உட்கார்ந்து விட்டார்கள்.''

''இல்லை, சரசு! குழந்தைகள் சாப்பிடட்டும். எனக்கு இப்போது சாப்பாடு இறங்காது. ராஜத்துக்கு ரொம்ப உடம்பு சரியில்லையாம். 'டைபாய்டு' சுரமாம். பிழைப்பதே.....''

''பிழைப்பதே புனர்ஜன்மந்தான். போன வருஷம் இப்படித்தான் கடிதம் எழுதியிருந்தார்கள். போய்ப் பார்த்தால் ஒன்றும் இல்லை. உங்களுக்கு நானூறு ஐந்நூறு ரூபாய் செலவு வைப்பதில் அவர்களுக்குத் திருப்தி போலிருக்கிறது.''

இதைக் கேட்ட கிட்டாவய்யர் சாய்மான நாற்காலியிலிருந்து கோபமாக எழுந்தார். அப்போது பிரிக்காமல் வைத்திருந்த இன்னொரு கடிதம் கீழே விழுந்தது. (தொடரும்)




**ஆரோக்கிய பானத் தயாரிப்பில் ஓர் அரிய சாதனை—விவா!**


விவாவின் ஒவ்வொரு துளியிலும் புரதம் தரும் ஆரோக்கியம், கார்போஹைட்ரேட் தரும் சக்தி, பால் ஏடு தரும் வளமை மற்றும் மால்ட் தரும் சுவையான சிறப்பு நிரம்பியுள்ளன.

விவா—முழுமையான, முன்கூட்டியே சீரணிக்கப்பட்ட போஷாக்குப் பானம்.

விவா, பகலில் உடலுக்கு உரமூட்டுகிறது: இரவில் நிம்மதியூட்டுகிறது. எளிதில் ஜீரணமாகும் கார்போஹைட்ரேட்டுகளும் முன்கூட்டியே சீரணிக்கப்பட்ட புரதங்களும் கொண்ட விவா, நோயாளிகளுக்கும் பிணியாற்றி வருவோருக்கும் மிகச் சிறந்தது. ஏன், உங்கள் டாக்டரையே கேளுங்கள்; அவரும் இதையே கூறுவார்.

# விவா

இரு செயல் புரியும் ஆரோக்கிய பானம்






"விவா—ஆரோக்கிய பானங்களில் கண்டறியாத அருங்குணமுள்ள பானம்".

Shilpi JI 218/71 TAM

## மூன்று மந்திரவாதிகள்

நான்காம் பாகம்
மணிப்புர மங்கை

கதை: வாண்டுமாமா
சித்திரம்: ராமு







அதோ உன் குதிரை இருக்கிறதே அதை வைத்து ஓர் ஆட்டம் ஆடிப்பார். ஒரு வேளை அசுவயோகமிருந்து உனக்கு அதிர்ஷ்டம் திரும்பலாம். யார் கண்டது!
சரி, பகடைக்காயைக் கொடு, அதையும் பார்த்து விடலாம்.
என் அருமைக் குதிரையும் போய் விட்டது. இனி இழப்பதற்கு என்னிடம் ஏதுமில்லே...
உன்னை நீ இன்னும் இழக்கவில்லையே. உன்னையே வைத்து ஆடு. நீ வென்றால் இழந்தவற்றையெல்லாம் உனக்கே தந்து விடுகிறேன்... யோசிக்காதே...ம்...
விதியினால் மதி இழந்த பார்த்திபன் சூதாட்டத்தில் தன்னையே வைத்து ஆடி இழந்தான்.
பார்த்திபா! இந்த விநாடி முதல் நீ என் அடிமை... ஹா..ஹா..ஹா! இழந்த நாட்டை மீட்கவா கிளம்பினீர்கள் சகோதரர் மூவரும்? நான் யார் தெரியுமா?
தெரிந்திருந்தால் இப்படிச் சூதாட்டத்தில் என்னையே இழந்து நிற்பேனா?
இதோ பார், இது தான் என் நிஜ உருவம். துந்துபி நாட்டரசனைப் பற்றிக் கேள்விப்பட்டதுண்டா நீ?
துராத்மாவான அவன் மந்திர தந்திரங்களிலும் வல்லவன் என்று என் தகப்பனார் சொல்லக் கேட்டிருக்கிறேன்.
அந்த வல்லவன் நான் தான். என் பெயர் சசாங்கன். உன் தகப்பனாரின் பரம வைரி.
என் அடிமையாகி விட்ட நீ, இன்னும் ஏழு நாட்களுக்குள் என் அரண்மனைக்கு வந்து சேர வேண்டும். இதோ இந்த ரொட்டித் துண்டும் தண்ணீரும் உன் வழிப் பயணத்துக்கு...
மந்திர வாதி சசாங்கன் பார்த்திபனின் குதிரை மீதேறி மறைகிறான்.
துந்துபி நாடு எந்தத் திசையிலிருக்கிறதென்று தெரியவில்லையே. ஈசா, இது என்ன சோதனை?


இந்தத் துண்டு ரொட்டியும் குடுவை நீரும் எத்தனை நாளைக்கு வரும்? பசியைச் சகித்துக் கொண்டு இதை உண்ணாமல் காப்பாற்றினால் தான் உயிர் வாழ முடியும். இன்னும் எத்தனை தொலைவுப் பிரயாணமோ?
இனி என்னால் பசியைத் தாங்க முடியாது. இனி வயிற்றை வஞ்சிக்கவும் முடியாது, முடியாது...
ஐயா, ஐயா, தருமவானே! என் குழந்தை பசியால் செத்துக் கொண்டிருக்கிறது...
உங்களுக்குக் கோடிப் புண்ணியம் உண்டு ஐயா. அந்த ரொட்டியையும் நீரையும் தந்தால் என் குழந்தை பிழைக்கும்.
அப்படியா? குழந்தையின் உயிரை விட என் பசி பெரிதல்ல தாயே. இந்தாருங்கள்...
ஐயா, உங்கள் பசிக்காக வைத்திருந்த ரொட்டியைக் கொடுத்து என் குழந்தையின் பசியைத் தணித்து உயிரைக் கொடுத்த உங்களுக்கு நான் ஏதாவது நன்மை செய்ய வேண்டாமா?
இதே பாதையில் சில காத தூரம் போனீர்களானால் ஒரு நந்தவனம் எதிர்ப்படும். அதனுள் ஓர் அழகிய வாவி இருக்கும். அங்கு சென்று மறைந்திருங்கள். நடுநிசியில் மூன்று புறாக்கள் வரும். புறாக்கள் பெண்களாக மாறி நீரூற்றிலே நீராடுவார்கள். புறாக்களில் சிறிய புறாவைப் பிடித்துக் கொள்ளுங்கள். என்ன கெஞ்சினாலும் விடாதீர்கள். அந்தப் புறா மூன்று வரம் கொடுக்கும். அதன் பிறகு அதை விடுவியுங்கள். வெற்றி உங்கள் பக்கமிருக்கும்.

தொடரும்






தலைவலி மாத்திரை ஏதாவது தீங்கு
விளைவிக்குமோ என்கிற பயத்தால், நாம்
எத்தனையோ தடவை தலைவலியைப்
பொறுத்துக்கொண்டு அவதிப்படுகிறோம்.

ஆனால் அப்படி அவதிப்பட வேண்டாம்.
அவேதன் தீமையில்லாமல் தலைவலியைப்
போக்குகிறது. ஏனெனில், அவேதனில்
அற்புத 'எபெப்' அடங்கியுள்ளது. அவேதன்
சாப்பிட்ட பின் எவ்வித துன்பகரமான
பின் விளைவுகளும் ஏற்படாது; துரிதமான
நிச்சய நிவாரணம் கிடைக்கும்.

எனவே, தீமையற்ற முறையில் தலைவலியைப்
போக்குங்கள். ஜலதோஷம், ஃப்ளூ மற்றும் இதர
வலிகளையும் நோவுகளையும் கூடத்தான்!
'எபெப்' அடங்கிய அவேதன் சாப்பிடுங்கள்.



அவேதன்—அற்புத 'எபெப்' அடங்கியது.
தலைவலி, ஜலதோஷம், மற்றும் ஃப்ளூவிலிருந்து
தீமையற்ற நிச்சய நிவாரணம் அளிக்கிறது.


SQUIBB SARABHAI CHEMICALS

® இ.ஆர். ஸ்க்விப் அண்டு ஸன்ஸ் இன்கார்ப்ப
ரேடெட்டின் ரெஜிஸ்டர்ட் ட்ரேட் மார்க்கைக் குறிக்கிறது.
காம்சந்த் ப்ரேம்சந்த் பிரைவேட் லிமிடெட் இதை
உபயோகிக்க உரிமை பெற்றவர்கள்.

Shilpi HPMA 37A/70 TAM



# ஒளிரும் ஒலிம்பிக்




1. 1972 ஒலிம்பிக் நகர மாதிரித் தோற்றம்.
2. ஜெர்மனியில் ஒலிம்பிக் விளையாட்டுகள் நடக்கவிருப்பதன் காரணமாக அந் நாட்டுக் குழந்தைகளுக்கு விளையாட்டுக்களிலும் தேகப் பயிற்சிகளிலும் புதிய ஆர்வம் ஏற்பட்டிருக்கிறது.
3. பனிச் சறுக்கு சாம்பியன்.
4. மியூனிக் ஒலிம்பிக்கில் மிகுந்த ஈடுபாடு கொண்டுள்ள ஜெர்மானிய யுவதி.














5. மெக்ஸிகோ ஒலிம்பிக்கில் தட்டு வீச்சில் இரண்டாவது இடம் பெற்ற ஜெர்மனியைச் சேர்ந்த லீஸல் வெஸ்டர்மான்.

6. ஸ்டேடியம் உருவாகிறது.

7. 1896லிருந்து 1968 வரை பல்வேறு ஒலிம்பிக் பற்றிய புகைப்படக் கண்காட்சி இந்த விநோத உருவம் கொண்ட கட்டிடத்தில் நடக்கிறது.

8. பிரம்மாண்டமான ஸ்டேடியம் உருவாக நிலம் அகழ்ந்தெடுக்கப்பட்ட காட்சி.







# ஒப்பற்ற ஒலிம்பிக்

ஏற்கனவே 'ஜெர்மனியின் சொர்க்கம்' என்ற சிறப்புப் பட்டம் பெற்றதுதான் மியூனிக் நகரம். தற்போது 1972 ஒலிம்பிக் போட்டிகள் நடப்பதற்காக மெய்யாலுமே ஒரு சொர்க்கபுரியாக உருமாறிக் கொண்டிருக்கிறது. மியூனிக் ஒலிம்பிக் பற்றிய புகைப் படக் காட்சி சென்னை மாக்ஸ்முல்லர் பவனில் ஜனவரி 4ந் தேதியிலிருந்து ஜனவரி 12ந் தேதி வரை நடைபெற்றது.

○ ஒலிம்பிக் விளையாட்டுக்களில் பங்கேற்கும் ஆட்டக்காரர்களுக்கு அரைக் கட்டணத்தில் முடிதிருத்தும் பணியைச் செய்ய முன்வந்திருக்கிறார் மியூனிக் முடி திருத்தும் விற்பன்னர் எட்வின் சாமுவேல்.

○ பத்திரிகையாளருக்குக் கம்ப்யூட்டர் உதவியுடன் வசதிகள் செய்து தரப்படுகின்றன. உலகம் முழுவதுமுள்ள நாலாயிரம் பத்திரிகைப் பிரதிநிதிகள் இங்கு கூடுவார்கள். அவர்கள் தேவைக்கான கட்டுரைகளை முந்நூறு ரயில்வே வாகன்களில் ஏற்றிக் கொணரவிருக்கின்றனர். எல்லாம் பழைய ஒலிம்பிக் விளையாட்டுக்களைப் பற்றியவை. அவரவருக்குத் தேவையான ஒலிம்பிக் பற்றிய கட்டுரையை கம்ப்யூட்டர் தேர்ந்தெடுத்துத் தரும். நிகழ்காலம் பற்றி எழுதுகையில், கடந்த கால ஒலிம்பிக் ரிகார்டுகளையும் குறிப்பிட்டு எழுத வேண்டியிருக்குமல்லவா? இதற்காகத்தான் இந்த ஏற்பாடு.

○ மூன்று ஆசிய வெற்றிப் பதக்கங்கள் பெற்ற இந்தியக் கோஷ்டியைச் சேர்ந்த கச்சாசிங், எட்வர்ட் ஸிக்யூரா, கமலஜித் சாண்டு ஆகியோர் வேறு பதினொரு ஆசிய விளையாட்டு வீரர்களோடு மேற்கு ஜெர்மனியில் பயிற்சி பெறுகிறார்கள்.

○ பிராங்க்பர்ட் நகரம் ரேடியோ, டெலிவிஷன் ஒலிபரப்புகளுக்குத் தயாராகிக்கொண்டிருக்கிறது. 42 ரேடியோ அலைவரிசைகளும் 420 டெலிவிஷன் சானல்களும் மியூனிக்குக்கும் பிராங்க்பர்ட்டுக்கும் இடையில் நிறுவியிருக்கிறார்கள். பிராங்க்பர்ட்டிலுள்ள தபால் நிலையச் சிப்பந்திகள் முக்கியமான உலக மொழிகளைக் கற்றுக் கொண்டிருக்கிறார்கள், ஒலிம்பிக் போட்டியைக் காண வருவோருக்கு உதவுவதற்காக.

○ பதினெட்டு தேசங்களைச் சேர்ந்த பதினையாயிரம் தொழிலாளர்கள் மியூனிக்கருகே 780 ஏக்கர் நிலப்பரப்பில் ஒலிம்பிக் நகர நிர்மாணத்தில் ஈடுபட்டிருக்கிறார்கள். ஒலிம்பிக் நகரில் முன்கூட்டியே திட்டமிட்டு 4750 மரங்கள் நடப்பட்டன. 27 மைல் நீளத்துக்குச் சாலைகளும் போடப்பட்டன. ஓர் ஏரி உருவாகியது. பிரும்மாண்டமான ரயில் நிலையமும், 960 அடி உயர டெலிவிஷன் டவரும் தயாராகி விட்டன. நீச்சல் போட்டிக்கென்று வட கடலும் பால்டிக் கடலும் சந்திக்கும் கீல் கால்வாயைச் சுத்தப்படுத்தி அழகுபடுத்தி வருகிறார்கள்.


○ ஒலிம்பிக் ஸ்டேடியத்தில் 80,000 பேர் உட்கார்ந்து விளையாட்டுக்களை ரஸிக்கலாம். நீச்சல் குள ஸ்டேடியத்தில் 9000 பேர் அமரலாம். உடல்பயிற்சி நிலையத்தில் 11,000 பேர் இருக்கலாம். சைக்கிள் போட்டிப் பந்தயத்தை 5000 பேர் காணலாம். குத்துச் சண்டை ஸ்டேடியத்தில் 7000 பேர்களும் வாலிபால் ஸ்டேடியத்தில் 3,700 பேர்களும் ஹாக்கி ஸ்டேடியத்தில் 10,000 பேர்களும் அமரலாம். ஒலிம்பிக் நகரில் 12,000 விளையாட்டுக்காரர்களும், 'கோச்சு'களும் பணியாளர்களும் தங்கலாம்.


○ ஒலிம்பிக் பந்தயம் 16 நாட்கள் ஆகஸ்ட் 26ந் தேதியிலிருந்து செப்டம்பர் 10ந் தேதி வரை நடைபெறவிருக்கிறது.


○ மியூனிக்கில் 26 கலைக் கூடங்களும் மியூஸியங்களும் இருக்கின்றன. 22 சினிமாத் தியேட்டர்கள் உள்ளன. மியூனிக் நகரில் நாற்பது சதவிகிதம் பேர் முப்பது வயதுக்குக் கீழுள்ள இளைஞர்கள்.


○ எல்லாமாகச் சேர்ந்து இவ்வாண்டு ஒலிம்பிக்கை ஒப்பற்றதாகச் செய்யப் போகிறது.


—குண்டுமணி












# ...இட்டால் இதமளிப்பு



# டெட்டால் அரவணைப்பு

காயங்களைத் தூய்மைப் படுத்துவதோடன்றி
ஆற்றவும் துணை டெட்டால்.

பட்ட காயம் எதுவாயினும் இட்டுப் பயன்காணத்
தட்டாமல் உதவுவது டெட்டால். உங்கள் டாக்டரே
கூறுவார் : ஒழுங்குதவறுமல் காயத்தின்மீது
அடிக்கடி இட்டால், கிருமிகள் அணுகாமல்
காக்க உதவுவது டெட்டால் ... பரிபூரணமான
ஆன்ட்டிஸெப்டிக் பாதுகாப்பு அது.

குளி நீரிலே இட்டால் : புத்துணர்வூட்டுகிறது டெட்டால்.
க்ஷவரத்திற்கான நீரிலே : பாதுகாக்கிறது டெட்டால்.





**புதுமைக் கோல டெட்டால்**- பரிபூரண ஆன்ட்டிஸெப்டிக் பாதுகாப்பு

*கல்யாணங்கள் சொர்க்கத்தில் நிச்சயிக்கப்படலாம் - ஆனால் பொருளாதாரப் பிரச்னை பூமியில்தான் தீர்த்துவைக்கப்படுகிறது.*

## அத்தியாயம் 25

வெள்ளிக்கிழமை காலை வரையில் கணபதி செய்தியைச் சங்கரிக்கோ, மங்களாவுக்கோ தெரிவிக்கவில்லை. பிறந்தநாள், விழாபோல் நடந்திருக்கிறது. இந்த மாபெரும் துக்கத்தைச் சொன்னால் விழாவினால் ஏற்பட்டிருக்கும் குதூகலமெல்லாம் பறந்துவிடும்.

வெள்ளிக் கிழமை சாயந்திரமே ரொஸாரியோவுக்கு ஆக வேண்டியதெல்லாம் முடிந்துவிட்டது. ரேணுகாவும் மங்களாவும் மேரியைத் தேடிச் சென்றனர்.




தேற்ற முடியாத துக்கத்தில் மேரி அமைதியுடன் காணப்பட்டாள். எட்மண்ட் அழுது தீர்த்தான். லூஸி குனிந்த தலை நிமிராமல் நின்றாள். அவள் கேட்ட எழுபது ரூபாய் அவளுக்குக் கிடைக்கவேயில்லை.

* * *

கேதாரம் சனிக்கிழமை பம்பாய்க்குத் திரும்பிப் போய்விடுவது என்று தீர்மானம் செய்தான். வெள்ளிக்கிழமை மத்தியானம் தன் முடிவை மணியிடம் சொல்ல, அவன் அதைப் பத்தாவது நிமிடம் மங்களாவிடம் தெரிவித்தான். மங்களா ரேணுகாவிடம் கூறினாள்.

ரேணுகா ரிடையரிங் அறையை அடைந்தபோது மணி மூன்றரை இருக்கும். வெளி அறையில் அவள் நுழையும் போதே, உள்ளே இருந்து உரத்த குரல் கேட்டது. அவள் திடுக்கிட்டு நின்றாள். நுழைந்த அறையிலே எத்தனை நேரம் நின்றாளோ அவளுக்கே தெரியாது. பேச்சு காரசாரமாகவும் ஆர்வத்தைத் தூண்டும் வகையாகவும் இருந்தது.

''டேய் கேதாரம்! கடைசியா எனக்கு என்ன பதிலைச் சொல்லப் போறே....? இன்னிக்கு ரிடையர்ட் சீஃப் செக்ரடரியின் பெண்ணைப் பார்க்க நான் ஏற்பாடு செய்திருந்தேன். நீ அதிலும் மண்ணை வாரிப் போட்டுவிட்டாய்!''

''மாமா! தீர்ந்து போன விஷயத்துக்கு நீங்கள் உயிர் கொடுக்கப் பார்க்காதீர்கள்.''

''எதுடா தீர்ந்து போன விஷயம்?'' —ஜம்புநாதன் கத்தினார்.

''நீங்கள் எனக்காகப் பெண் பார்க்கிற வேலை.''

''அப்போ?''

''அப்போன்னு அப்போதான்.''

''உன் இஷ்டப்படிதான் கல்யாணம் செய்து கொள்வியாக்கும்.''

''நான் அப்படிச் சொல்லுகிறவனாக இருந்தால், பம்பாயிலிருந்தே புறப்பட்டிருக்க மாட்டேன்.''

''பின் ஏன் திடீர்னு மனசு மாறினே? அந்த எஸ். எஸ்.ஸின் பெண் மயக்கி விட்டாளா?''

''அநாகரிகமாகப் பேசாதீர்கள், மாமா.... நீங்க இழுக்கிற இழுப்புக்கெல்லாம் வளைந்து கொடுக்க நான் என்ன கம்பியா?''

''கம்பியில்லையடா, நீ கம்பியில்லே. இரும்புக் குண்டு.''

(ரேணுகா தனக்குள் சிரித்துக் கொண்டாள்.)

''சரி, சும்மா என்ன வளவளன்னு பேசறேன். இப்போ எதுக்கு மறுபடியும் வந்திருக்கிறீர்கள்? உங்கள் பல்லவியைப் பாடத்தானே? பாடிவிட்டுப் போங்கள்.''

''ஏன்டா! மூணு வயசிலேயே அப்பாவை முழுங்கினே. ஏழு வயசிலே அம்மாவைத் தோத்தே..... உன்னை ஹோட்டலுக்குச் சப்ளையராக அனுப்பாமல் கூடப் பிறந்தவள் பிள்ளை என்



பிள்ளைன்னு உன்னைப் படிக்க வைச்சேன்.... கல்லூரிக்கு அனுப்பினேன்... அவன் காலையும் இவன் காலையும் பிடித்து என்ஜினியரிங் காலேஜில் சேர்த்தேன்.....

''நீங்க யார் காலையும் பிடிக்கலைன்னு எனக்கும் தெரியும்.... என் மார்க்கைப் பார்த்து ஸீட் கொடுத்தார்கள்....''

''ஆமாம்டா... மார்க்கு...பொல்லாத மார்க்கு.... உன் மாதிரி மார்க் வாங்கின எத்தனை பேர்களுக்கு ஸீட் கிடைக்கலை...... அது தெரியுமாடா, உனக்கு?''

''இப்போ அது தெரிய வேண்டாம், எனக்கு.''

''வாய் கிழியப் பேசறதில் ஒண்ணும் குறைச்சல் இல்லை..... இப்போ எனக்குப் பதில் சொல்லு.''

''என்ன பதில்?''

''என் இரண்டு பெண்களின் கல்யாணம் நடந்தாகணும்.''

''நானு குறுக்கே நிக்கறேன் ?''

''ஆமாம்! நீயேதான்.... நீயேதான் !''

கேதாரம் சிரித்தான்.

''எனக்குப் பதினைந்தாயிரம் உடனடியாக வேணும்.... உனக்குக் கல்யாணம் நிச்சயமானால் நான் நினைத்தபடி நடந்தால் என் கையை விட்டுப் பணம் போகாது... ஆனால் உன் போக்கடாத்தனத்தினால் செலவு என் தலையிலே விழுறது.''

''அதென்ன பதினைந்தாயிரம்னு கணக்கா கேட்கிறீர்கள்?''

''சரி, பதினாலாயிரத்துத் தொள்ளாயிரத்துத் தொண்ணூற்று ஒன்பதாகக் கொடு.''

ரேணுகா சிரித்துக் கொண்டாள்.

''மாமா! நீங்க என்னை என்னவென்று நினைத்துக் கொண்டிருக்கிறீர்கள்? நான் என்ன பம்பாயில் பிஸினஸா பண்றேன்...? நீங்க கேட்கறதுக்கும் நான் செக் கிழிச்சுக் கொடுக்கிறதுக்கும்....? என் சம்பளத்திலே பிராவிடண்ட் ஃபண்டு, இன்கம் டாக்ஸ், வாடகை, கார்க் கடன் மாதாந்திரத் தவணை எல்லாம் கழிச்சு எனக்குக் கிடைப்பது எழுநூற்று எட்டு ரூபாய் எண்பது பைசா.... இன்னிக்கெல்லாம் இருந்தால் என்னாலே உங்க பெண் கல்யாணத்துக்கு உடனடியாக ஒரு ஐயாயிரத்தைப் பெயர்த்துக் கொடுக்க முடியும். அவ்வளவுதான்.''

''சமையற்காரப் பிள்ளைகூட இரண்டாயிரம் வரதட்சிணை கேட்கிற காலம்டா இது.... என் பெண்ணின் பாதிக் கல்யாணம்கூட உன் ஐயாயிரத்தில் நடக்காது.....''

''அப்போ கொஞ்சம் பொறுங்கள்.

''அந்த எஸ். எஸ்.ஸின் பெண்ணைத் தானே கல்யாணம் செய்து கொள்ளப் போறே? அவர்கிட்டே வரதட்சிணையா பத்தாயிரம் வாங்கு.''

''மாமா! நீங்கள் போகாத ஊருக்கு வழி தேடுகிறீர்கள். முதலாவதாக நான் அந்தப் பெண்ணைக் கல்யாணம் செய்து கொள்ளப் போகிறேன் என்று நீங்கள் இப்படி அடித்துப் பேசுவதே தப்பு. இரண்டாவது எனக்கு அப்படி ஓர் எண்ணம் இருந்தாலும் கணபதி மனம் இசைவார் என்பது என்ன நிச்சயம் ? அப்படியே அவர் சரி என்றாலும், அந்தப் பெண் என்ன நினைத்துக் கொண்டிருக்கிறாளோ ?''

''ஏண்டா, கேதாரம்! நீ என்கிட்டே நாடகமா ஆடறே, நாடகம்? ஆடுடா, நன்னா ஆடு.... வந்து அஞ்சு நாள் முழுக்க ஆகலை. அவள் வீட்டுக்கு நீ ரெண்டு தரம் போயாச்சு... அவள் இங்கே ஒரு தரம் வந்தாச்சு. நீ கொடுத்த கோகோகோலாவைக் குடிச்சாச்சு.... என்கொயரியிலே வேறு சந்திச்சுப் பேசியிருக்கே... இதெல்லாம் போறுதுன்னு அந்தச் சவடால் மணியை வேறு தூது விட்டிண்டிருக்கே. நாடகமாடா, ஆடறே நாடகம் ?''

''இதெல்லாம் எப்படி மாமா, உங்களுக்குத் தெரிந்தது?''

''நீ வந்ததிலேயிருந்து நான் உன்னைக் கவனிச்சுண்டுதாண்டா இருக்கேன்..... கவனிச்சுண்டுதான் இருக்கேன்.''

''நீங்க சொல்றபடியே எல்லாம் இருந்தாலும், கல்யாணம் நடக்கப் போறது என்று எப்படி நீங்கள் தீர்மானமாகச் சொல்லலாம்?''

''நடக்கத்தாண்டா போறது..... ஆனால் நான் குறுக்கே நிற்பேன். கல்யாண வீட்டு வாசலிலே குறுக்கே படுத்துப்பேன். சும்மாப் படுத்துக்கமாட்டேன். தலைமாட்டிலே உன் மாமியையும், கால்மாட்டிலே ரெண்டு பெண்களையும் நிக்க வைப்பேன்.... ஆமாம்டா, நிக்க வைப்பேன்!''

ரேணுகாவின் மனக் கண் முன்னால் ஒரு காட்சி தோன்றியது. கல்யாண வீடு. வாசலில் இரண்டு வாழை மரங்கள்; தோரணங்கள். ஒருவர் ஒரு வாழை மரத்தில் தலையிடிக்க, இன்னொன்றில் கால் இடிக்கக் குறுக்கே படுத்துக் கொண்டிருக்கிறார். இரண்டு பெண்கள் சிரிப்பதா அழுவதா என்று தெரியாமல் கால்மாட்டில் நிற்கிறார்கள். தலைமாட்டில் கல்யாணக் கூடத்தை எட்டி எட்டிப் பார்த்துக் கொண்டே ஒரு ஸ்திரீ நிற்கிறாள்.


வயிற்றுக் கோளாறு?
வாயுவா? அமில உபாதையா?
நெஞ்செரிச்சலா?
அஜீரணமா?
2 ரென்னி மாத்திரைகளை
மெல்லுங்கள்... விரைவிலேயே நிவாரணம் பெற




தலைவலி • ஃப்ளு • பல்வலி
• உடல்வலி முதலியவற்றை
உடனடியாகக் குணப்படுத்த
ஸலோஃபென்
வலி நிவாரண மாத்திரை
ஏனெனில் ஸலோஃபென் மாத்திரைகள்
டாக்டர்கள் சிபாரிசு செய்யும் மருத்துவ
முறைப்படித் தயாரிக்கப்பட்டவை.
ஸலோஃபென்
இருக்குமிடத்தில்
வலி இருக்காது!
இது அமிர்தாஞ்சன்
கம்பெனியின்
தயாரிப்பு
அமிர்தாஞ்சன்
லிமிடெட்
SALOFEN

காட்சி அபூர்வமான காட்சி. பணம் கொடுத்தாலும் பார்க்கக் கிடைக்காத காட்சி.

''நீங்க பேசறதே ரொம்ப அநாக ரிகமா இருக்கு.''

''அப்போ நீ நாகரிகமாக நடந்து கொள்.''

''சரி, இப்போ போய் வாருங்கள்.''

''நாளைக்கு மறுபடியும் வருவேன். வந்து கொண்டே யிருப்பேன். நாலு பேர் கேட்கக் கத்துவேன்!''

அடுத்த கணம், பேசியவர் புறப்படு வதை உணர்ந்தாள் ரேணுகா. அவசர மாய் வெளி அறையை விட்டு வராந்தா வுக்கு வந்தாள்.

நெற்றியில் விபூதி துலங்க, கையில் ஒரு பையுடன் அங்கவஸ்திரத்தால் முகத்தைத் துடைத்துக் கொண்டே ஒருவர் வெளியே வந்தார்.

இவர்தான் மாமா, ஜம்புநாதனோ ?

''ஸார் !''

தம்மை இப்படி யாரும் அழைக்க மாட்டார்கள் என்ற தைரியத்தில் ஜம்புநாதன் சட்டை செய்யாமல் வேக மாக நடந்தார்.

''ஸார்..... உங்களைத்தான் !''

அவர் அருகே போய் அழைத்தாள் ரேணுகா.

''என்னையா அம்மா கூப்பிட்டே?''

''ஆமாம், ஸார்....!''

''என்ன வேணும்?''

''பம்பாயிலிருந்து கேதாரம்னு ஒருத் தர் வந்திருக்கிறாரே... அவர் இங்கே தானே இருக்கிறார்?''

ஜம்புநாதன் அவளை ஒரு தடவை ஏற இறங்கப் பார்த்தார். எங்கேயோ பார்த்த ஞாபகம் வந்தது.

''ஆமாம். என்ன வேணும்?''

''அவரிடம்தான் சொல்ல முடியும்.''

''நான் அவனுடைய சொந்த மாமா.... என்கிட்டே தைரியமாகச் சொல்லலாம்.....''

''கல்யாண விஷயமாய்....''

''உனக்கு எந்த ஊரும்மா ? யாருடைய கல்யாண விஷயமாய்ப் பேசப் போறே ?''

''நான் பம்பாயில் இருக்கிறவள்...''

''பம்பாய்ப் பெண்ணு?''

''பெண் மெட்ராஸ்தான். அவள் என் சிநேகிதி..... பெண்ணைப் பெற்ற வர் வரதட்சிணையைப் பற்றிப் பயப்படு கிறார்...கேதாரம் பம்பாயில் இருக்கிறவ ராச்சே, அதைச் சாக்காக வைத்துக் கொண்டு பேசிப் பார்க்கலாம்னு வந் தேன்.... தாங்க்ஸ் ஸார்.''

ரேணுகா நகர யத்தனித்தாள்.

''இதோ பார் அம்மா... என் மருமான் படிச்சவன்.... பெரிய பதவி யிலே இருக்கிறவன். கெட்டிக்காரன். பெரிய பெரிய இடங்களிலெல்லாம் பெண் பார்க்க ஏற்பாடு செய்து வைச் சேன். இவன் முதலிலே ஒரு பெண் ணைப் பார்த்தான். அப்புறம் வேதாளம் முருங்கை மரம் ஏறின கதையா உச் சாணிக் கொம்பிலே நிக்கறான். பார்த்த பெண்ணை இவனை வேண்டாம்னு சொல்லிட்டா.''

''இதை யெல்லாம் எதற்காக என் கிட்டே சொல்லுகிறீர்கள்?''

''எல்லாவற்றையும் நீ உன் மனசிலே வைச்சிண்டிருந்தா நல்லது இல்லியா? அது சரி, யாருடைய பெண்?''

''ரொம்ப அவசியமாகத் தெரி யணுமோ?''

''நான் பிள்ளைக்கு மாமா. அவனுக்கு அம்மா அப்பா கிடையாது. எனக்குத் தான் சம்பந்தி ஸ்தானமே!''

''மங்களான்னு பெண்ணோட பேரு. அவளுடைய அப்பா இந்த சென்ட்ரலில் ஸ்டேஷன் சூப்பிரண்டாக இருக்கிறார்.''

ஜம்புநாதனுக்கு மூச்சை அடைத் தது. அவர் சமாளித்துக் கொள்வதற் குள் ரேணுகா, ''நான் போகிறேன் ஸார்! இப்போதைக்கு நீங்கள் அங்கே வராதீர்கள்!'' என்று கூறிவிட்டு, தன் னுள் சிரித்தவளாய்க் கேதாரத்தின் அறைக்குள் நுழைந்தாள்.

ரேணுகாவைப் பார்த்ததும் கேதா ரத்துக்குத் தூக்கி வாரிப் போட்டது. தன் திகைப்பை அடக்கிக் கொண்டு ''வாருங்கள், மிஸ் ரேணுகா!'' என்று வரவேற்றான்.

''இப்போ யாரோ உங்க அறையி லிருந்து வெளியேறிப் போகிறாரே, யார் அவர்?''

''என் மாமா ஜம்புநாதன் என்று பெயர். என்னை எடுத்து வளர்த்து ஆளாக்கியதே அவர்தான்.''

''ஓ, அப்படியா? பார்க்கிறதுக்கு ரொம்ப நல்லவரா, தெய்வபக்தி உள்ள வராத் தெரியறார்.''

''நல்லவர்தான்...''

''ஏன் அதை அசுவாரசியமாகச் சொல்லுகிறீர்கள்?''

''ஒன்றுமில்லை.''

''என்கிட்டேயே மழுப்புகிறீர்களே!''

''அதெல்லாம் இல்லை. எங்களுக் குள் கொஞ்சம் அபிப்பிராய பேதம். அவ்வளவுதான்.''

''ஐ ஆம் ஸாரி... உங்களுடைய சொந்த விஷயத்தில் நான் தலையிடறது தப்பு.''

''சொந்த விஷயம் என்ன? அவ ருடைய இரண்டு பெண்கள் கல்யா ணத்துக்கு நிற்கிறார்கள். எனக்குப்

பெரிய இடத்தில் கல்யாணம் ஆனால் தமக்கு நல்லது என்று நம்புகிறார்.''

''ஏன்? நீங்கள் பெரிய இடம் வேண்டாம் என்று தீர்மானம் செய்து விட்டீர்களாக்கும்.''


''உங்கள் கேள்விக்குப் பதில் சொல்ல முடியாத நிலையில் இருக்கிறேன். மன்னிக்கணும்!''

''அதுபோகட்டும்... இந்த வரதட்சிணை முறையைப் பற்றி நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்?''

''வரதட்சிணையை எதிர்த்து நூறு பேர் கிளம்பினால் ஆமோதித்து ஆயிரம் பேர் கொடுக்கிறார்கள்...''

''உங்களுடைய தனிப்பட்ட அபிப்ராயம்?''

''கொடுக்கிறதும் தப்பு, வாங்கறதும் தப்பு...ரொம்பக் குடும்பங்களில் கல்யாணமாகாமல் எத்தனையோ பெண்கள் நிற்கிறார்கள். வேலை செய்து உழைக்கும்படியான நிர்ப்பந்தம் உண்டாகிறது. நடுத்தர, ஏழைக் குடும்பங்களுக்கு இது ஒரு சாபக்கேடு.''




''சில சமயங்களில் வரதட்சிணை ரொம்ப அவசியமாகவும் போகிறது.''

''எப்படி?''

''சாதாரண நடுத்தரக் குடும்பம். பெற்றவருக்கு மாத வரும்படியைத் தவிர வேறு எதுவும் கிடையாது. ஒரு பிள்ளையும் ஒரு பெண்ணும். பெண்ணைக் கல்யாணம் பண்ணிக் கொடுக்கப் பணத் தெம்பு இல்லை. ஆனால் பிள்ளைக்குப் பெண் கொடுக்க வருகிறார்கள்.''

''எனக்குப் புரிகிறது, மிஸ் ரேணுகா! பிள்ளைக்கு வாங்கிப் பெண்ணுக்குக் கொடுக்கச் சொல்கிறீர்கள்!''

''ரொம்ப சரி! கொடுத்து வாங்கினால் என்ன, வாங்கிக் கொடுத்தால் என்ன? உங்கள் லட்சியப்படியே இருந்தால் இரண்டு பேருக்கும் கல்யாணம் ஆகாது.''

''பெண்ணை மட்டும் பெற்றவராக இருந்தால்?''

''அதனால்தான் ரொம்பக் குடும்பங்கள் அழிந்து போகின்றன.... உங்க மாமா உங்கள் கையை எதிர்பார்த்து நிற்கிறாராக்கும்!''

கேதாரம் தலையை ஆட்டினான்.


ரேணுகா எழுந்தாள்.

''நான் வருகிறேன்.''

''என்ன வந்தீர்கள். என் மாமாவைப் பற்றி விசாரித்தீர்கள்... புறப்பட்டு விட்டீர்கள்!''

''ஏன், உங்கள் லட்சியத்தைப் பற்றிக் கேட்டேனே!''

## இரட்டைப் பொய்யர்கள்!



''ரொம்ப நன்னா இந்த சீனில் பாடினேளே, அதைச் சொல்வதற்குத்தான் ஓடி வந்தேன்!''

''நீயும் நன்னா பாடினே! அதைச் சொல்லத்தான் நானும் ஓடி வந்தேன். நீ முந்திண்டுட்டே!''

கேதாரத்துக்கு ஒன்றும் புரியவில்லை. விழித்தான்.

''மிஸ்டர் கேதாரம்! மற்றொரு சொந்த விஷயம்... நம் எஸ். எஸ். இருக்கிறாரே... கணபதி... அவருக்கு... உங்க பேரிலே ஒரு கண் இருக்கு. ஆசை மட்டும் போதுமா? சக்தி இல்லையே என்று அவர் கவலைப்படுகிறார். ஆனால் எனக்கு உங்களுடைய லட்சிய மனம் புரிந்து விட்டது... நான் வருகிறேன்.''

''கொஞ்சம் இருங்கள்... என்னுடைய மாமா...''

''அவருடைய பெண்களுக்கும் கல்யாணம் ஆக வேண்டும்... நீங்க கவலைப்பட வேண்டாம்!''

கேதாரம் தொப்பென்று நாற்காலியில் விழுந்தான்.

* * *

**ம**ணி, ஆறாவது பிளாட்பாரத்தை அடைந்தபோது மணி நாலரை. கேரளா எக்ஸ்பிரஸைப் பார்த்த போதே மனம் கசிந்தது. இதே எக்ஸ்பிரஸில்தான் நேற்று ரொஸாரியோவுக்கு வேலை. ரயில் கிளம்புகிற சமயத்தில் அவருடன் பேசி, அவரைத் தொந்தரவு செய்யக் கூடாது என்று அவன் நேற்று நினைத்தான். இன்று பேசவே முடியாத நிலையை அவர் எய்தி விட்டார். ஓர் இருபத்து நாலு மணி நேரத்துக்குள்ளாக இவ்வளவு பெரிய விபரீதமா? ரொஸாரியோ எவ்வளவு நல்ல மனிதர்! நல்ல மனிதர்களையும் ஏன் விதி விடுவதில்லை?

இன்று சிவலிங்கம் கார்டாகச் செல்கிறார். முருக பக்தர். வார்த்தைகளை அளந்து பேசுகிறவர்.

''குட் ஈவினிங் சார்!''

புன்முறுவலால் எதிர் வணக்கம் செய்தார் சிவலிங்கம்.

''யார் சார்! அண்டர்கார்டு புதிசா இருக்கிறார்?''

''குண்டக்கல் டிவிஷனிலிருந்து மாற்றல் வாங்கிக் கொண்டு வந்திருக்கிறாராம். இன்னிக்கு முதல் தடவையா சார்ஜ் எடுத்துக்கொள்ளப் போகிறார்.''

மணி முன்னோக்கி நடந்தான். அண்டர்கார்டு பார்ப்பதற்கு லட்சணமாக இருந்தான். வாட்ட சாட்டமான உடற்கட்டு. நெற்றிப் புருவங்கள் அடர்ந்து அதன் கருமையே எடுப்பாக இருந்தது.

''என்ன சார், இன்னிக்குத்தான் நீங்கள் சார்ஜ் எடுத்துக் கொள்கிறீர்களாக்கும்?''

''ஆமாம், நீங்கள் யார்?''

''இந்த சென்ட்ரலில் நீங்கள்தான் இந்தக் கேள்வியை முதன் முதலாகக் கேட்டிருக்கிறீர்கள்... பரவாயில்லை... நீங்கள் சென்ட்ரலுக்குப் புதுசுதானே? டெபுடி ஜெனரல் மானேஜர் குடும்பத்தோடு குருவாயூர் போகிறார். தெரியும் இல்லையா?''

''தெரியாதே.''

''வி கம்பார்ட்மெண்ட்... எதுக்கும் இரண்டு மூன்று தடவை விசாரித்து வையுங்கள்...''

''தாங்க்ஸ் ஸார்... நீங்கள்...?''

''மணி... உங்க பெயர்...?''

''கோதண்டராமன்.''

''ஆமாம்! சிவலிங்கம் சொன்னார். பூர்விகம் தஞ்சாவூரோ?''

''ஆமாம்.''

''எங்கே தங்குகிறீர்கள்?''

''குவார்ட்டர்ஸ் கிடைக்கவில்லை. ரூம் பார்த்துக் கொள்ளணும். இன்னிக்குக் கார்த்தாலேதான் 'ரிப்போர்ட்' பண்ணினேன்.''

''உறவுக்காரர் யாருமில்லையா?''

''நான் அநாதை சார்.. ஆனால் ஒரு அத்தை இருக்கிறாள். அவருடைய கணவர்தான் எஸ். எஸ்.''

''என்ன, அப்படியா?''

''ஆமாம்... 'லா'விலே கையெழுத்துப் போடணும். நான் வரட்டுமா? அப்புறம் சந்திக்கிறேன்...''

மணியின் தலை சுற்றியது.

சங்கரியின் அண்ணா பிள்ளை இவன்தானா?

இரண்டாவது மணி அடித்தது.

அண்டர்கார்டு கோதண்டராமன் ஏறிக்கொண்டான். பின்னால் மணியும் தாவி ஏறினான்.

கோதண்டராமனுக்குக் கோபமும், அதே சமயம் ஒருவித பயமும் ஏற்பட்டன.

''சார்! நீங்கள் சங்கரியின் அண்ணா பிள்ளையா?''

''ஆமாம்... நீங்கள் ஏன் இந்தப் பெட்டியில் ஏறினீர்கள்? இதில் பிரயாணம் செய்வது தவறல்லவா?''

''எனக்குத் தெரியும். ஆனால் நீங்க கணபதியின் மைத்துனர் பிள்ளை, மங்களாவின் மாமா பிள்ளைன்னு தெரிஞ்சப்புறம் நான் எப்படி சார் ஏறாமல் இருக்க முடியும்?''

''சொந்தம் அற்றுப் போய்ப் பதிமூணு, பதினாலு வருஷங்கள் ஆகிறது.''

''எப்போ வேலை ஆயிற்று?''

''அறுபத்திரண்டில். ஒன்பது வருடங்கள் ஆயிடுத்து.''

''ஏன் அத்தையைப் பார்க்கப் போகவில்லை?''

''நான் யார்னுகூட அவர்களுக்கு நினைவு இருக்காது.''

''நன்னா நினைவு இருக்கு சார்.''

''சொந்தம் நினைவிருக்கலாம். ஆனால் என்னை?... இருக்காது.''

''ஏன் அப்படிச் சொல்லுகிறீர்கள்?''

''எப்பவோ பிரிந்துவிட்டோம்.''

''உறவு பிரியுமா?''

''பிரிந்து விட்டது.''

''நீங்களே பிரித்துக் கொண்டு விட்டீர்களாக்கும்?''

கோதண்ட ராமன் பதில் சொல்லவில்லை. ஏதோ ஒரு ரிஜிஸ்டரைப் புரட்டலானான்.

''உங்க அத்தைக்குப் பதினொரு குழந்தைகள். மூத்தவன் பெங்களூரில் பாங்கியில் ஏஜெண்டாக இருக்கிறான். இரண்டாவது பிள்ளை பஞ்சாபிலிருந்துவிட்டு அமெரிக்கா போய்விட்டான்... கல்யாணம் கூட அங்கேதான் போலிருக்கு...''

'' மூர்த்தியையும் மோகனையும் கொஞ்சம் நினைவு இருக்கிறது.''

''மூன்றாவது பெண் மங்களா. என் கொயரியில் கிளார்க்காக இருக்கிறாள்.''

''அப்படியா?''

'' கல்யாணம்கூட ஆகவில்லை..... அடடா, இன்னிக்கு உங்களைச் சந்தித்தேனே..... நேத்து காலையில் சந்தித்திருக்கணும்.''

'' இன்னிக்குக் கார்த்தாலேதான் நான் மெட்ராஸுக்கே வந்தேன்.''



''பல்லவா போக்குவரத்துக் கழகம் பாண்டியா போக்குவரத்துக் கழகம் என்று மாற்றினால் மட்டும் போதுமா? கண்டக்டர் டிரைவர்களின் உடைகளையும் இப்படி மாற்றினால்தானே பொருத்தமாக இருக்கும்!'' —கிட்டு.

''நேற்று, கணபதியின் கடைசிப் பெண்ணுக்குப் பிறந்த நாள்... கோலாகலமாக நடந்தது.''

கோதண்டராமன் மீண்டும் ரிஜிஸ்டரில் கவனத்தைச் செலுத்தலானான்.

''சார்,... உங்களுடைய குடும்பம் ? எத்தனை குழந்தைகள்?''

''மூணு வயசிலே பெண். ஆறு மாசப் பிள்ளை.''

''பின் எதற்காக அறை பார்க்க வேண்டும் என்கிறீர்கள்?''

''என் மனைவி ஒரு டீச்சர். கோடை விடுமுறையில்தான் வர முடியும். அது வரையில் இருக்க......''

''எப்போ திரும்புகிறீர்கள்?''

''நாளைக்கு.... 28 எக்ஸ்பிரஸ்.''

''நானும் கணபதியுமா உங்களை வரவேற்கப் பிளாட்பாரத்தில் காத்துக் கொண்டிருப்போம்.''

''ப்ளீஸ்! சும்மாயிருங்க. அற்றுப் போன சொந்தம் தழைக்க நான் விரும்பவில்லை.''

''ஆனால் கணபதி விரும்புவார். சங்கரி விரும்புவாள். நீங்கள் கல்யாணமாகிக் குழந்தை குட்டிகளுடன் இருக்கிறீர்கள் என்று தெரிந்தால் கணபதி ரொம்பவும் சந்தோஷப்படுவார்!''

மணி அரக்கோணத்தில் இறங்கினான்.

ஆறு முப்பத்தைந்துக்கு அங்கிருந்து புறப்படும் பெங்களூர் பாஸஞ்சரில் சென்னைக்குத் திரும்பினான். அந்தப் பாசஞ்சர் நகர்ந்து நகர்ந்து ஒரு வழியாக இரவு ஒன்பது மணிக்குப் பத்தாவது பிளாட்பாரத்தில் வந்து நின்றது.

மணி இறங்கி ஓடினான். அவன் பார்க்க வேண்டியது, மங்களாவை, கணபதியை, ரேணுகாவை, கேதாரத்தை !

நடப்பது சினிமாவிலா, நாடகத்திலா, அல்லது நிஜ வாழ்க்கையிலா? அவனுக்கு ஒன்றும் புரியவில்லை. (தொடரும்)



# தபசு

சுபஸ்ரீ

ஆடி வெள்ளிக்கிழமை. கோமதி அம்மன் எழுந்தருளி யிருக்கும் சங்கரநயினார் கோயில் யாத்திரிகர்களால் நிரம்பி வழிந்தது. ஆடித் தபசு உத்ஸவத்துக்கு இன்னும் நான்கு நாட்கள் இருக்கின்றன. பட்டிதொட்டிகளி லிருந்தெல்லாம் பக்தர்கள் திரளாக வந்து கோமதி அம்மனைத் தரிசனம் செய்து, பிரார்த் தனை செலுத்திக் கொண்டிருந்தனர். வைகறையில் நாககனையில் குளித்துவிட்டு ஈரத் துணியுடன் மாவிளக்கு ஏற்றி, எந்த அங்கம் குணமாக வேண்டுமோ அதன் மேல் விளக்கை ஏந்தி வேண்டுதல்கள் செய்து கொண்டிருந்த னர். 'ஆவுடையாத்தா, கோமதி அம்பா' என்ற துதி அழைப்புகள் அடிக்கடி காற்றை நிரப்பின. கடவுட் பக்திதான் நம் வாழ்க்கை யில் எவ்வாறு வேரூன்றி நிற்கிறது !

சந்நிதித் தெருவில் சங்கர நாராயண பட்டர் வீட்டுத் திண்ணையில்தான் எனது படக் கடையைப் போட்டிருந்தேன். ஊர் ஊராகத் திருவிழா நடக்கும் தலங்களுக்குச் சென்று கடை விரிப்பது எனது தொழில். ஆடித் தபசு பத்து நாட்களும் சங்கரன் கோயில்தான் தாமசம். அந்த எல்லையிலேயே அதுதான் பெரிய விழா. நல்ல விற்பனை இருக் கும். கணிசமான வருமானத்தை எதிர் பார்க்கலாம்.

வழக்கமாக நான் பட்டர் வீட்டுத் திண்ணையைத்தான் பிடிப்பது. வாடிக்கை யாக நான் வருடா வருடம் வருவதால் வாடகைச் சலுகை உண்டு. அநேகமாகச் சந்நிதித் தெருவில் எல்லா வீட்டுக்காரர்களும் தபசு உத்ஸவத்தில் திண்ணை வாடகையில் சற்றுப் பணம் பண்ணி விடுவார்கள்.

என்னுடையது மொபைல் கடை. நட மாடும் வியாபாரம் ஆனதால் சுமாரான மூலதனம்தான். சாமி உருவங்களைப் பட மாகவும் கண்ணாடிச் சட்டம் போட்டும் விற்பனை. பிரேம் தொழில் எனக்குக் கைவந் தது. கூடப் பிரார்த்தனைச் சாமான்கள் — வெள்ளித் தகட்டில் பாம்பு, தேள், கை, கால், முகம் முதலியன. மர விளையாட்டுச் சாமான்கள், புற்று மண் இத்தியாதி.

நான் பட்டர் வீட்டை வருடா வருடம் நாடுவதற்குக் காரணம் வெறும் வர்த்தக நோக்கு மட்டுமல்ல. கறுப்பிலே ஒரு குறிப்பு ஏந்தி, பேசும் பெரிய விழிகளோடு வளைய வருகிறாளே பட்டரது மகள் பாப்பா கூடத்தான். பெயர்தான் பாப்பா. இருபது வயதும் இளமைச் செழிப்பும் அந்தப் பெயருக் கும் பொருந்துமா ?

நறுவிசான சட்டத்துக்குள் அடைத்தது போன்ற வாளிப்பான உடல்; கண்ணாடியின் பரப்பு போன்ற வழவழ என்ற மேனி ; குங்குமம் ஜிகினா போன்று முகத்தில் பளபளப்பு.

இந்த வருடம் போய் சேர்ந்தவுடனேயே வரவேற்றது பாப்பாதான். 'வே, முத்து. இந்த வசை கீழ் வீட்டுத் திண்ணையிலே கடை வைச்சிருக்கிறாரே நாயுடு. அவரு கூடப் பத்து ரூபாய் தரேன்னாரு. அம்மா சரின்னு சொல்ல இருந்தாள். நான்தான் தடுத்து நிறுத்தினேன். நீர் என்ன இவ்வளவு லேட்டா வந்திரு !' என்று பேசியபடி நமட்டுச் சிரிப்பு உதிர்த் தாள், பாப்பா.

''நம்ம கட்சி பேசறதுக்குப் பாப்பம்மா இருக்கும் போது எனக்கு என்ன கவலே?''

''ஊக்கும், உமக்கு நான் என்ன வக்கிலா? எவ்வளவு பீஸ் தருவீரோ?''

''கடையே உன்னது. அப்புறம் என் னம்மா ?''

''இந்தக் கள்ளப் பேச்சுக்குக் குறைச்சல் இல்லே'' என்பாள் இதழ் விரியச் சிரித்தபடி.

முதல் வருடம் நான் அவ்வளவாகக் கவ னிக்கவில்லை. போன வருஷம் அவள் பேச்சும் நடவடிக்கையும் ஒரு விதமாகத் தான் இருந்தன. வயசுக் கோளாறு, சற்று அப் படித்தான் இருக்கும் என நினைத்தேன். ஆனால் உள்ளூற எனக்கும் ஒரு கிளுகிளுப்பை உண் டாக்கவே செய்தது. படக் கடைக்காரன் தான் என்றாலும் பருவம் யாரை விட்டது!

மேல் திண்ணையில் அமர்ந்து என்னையும் எனது வியாபாரத்தையும் வேடிக்கை பார்த் துக் கொண்டே யிருப்பாள். உட்கார்ந்திருக் கும் தினுசே கவர்ச்சியாகத்தான் இருக்கும். ஒரே செல்லப் பெண். அதிலும் குருக்கள் சாதியில் பெண்கள் குறைவு. எட்டாம் வகுப்புடன் — பெரியவளானதால் — படிப்பை நிறுத்திவிட்டாள்.

சென்ற ஆண்டு ஊருக்குப் புறப்படும்போது, 'ஐயா முதலாளி! உங்க ஞாபகமா இந்தப் படத்தைக் கொடுத்திட்டுப் போங்க' என்று ஒன்றைக் காட்டினாள், சுந்தரேசுவரர்

மீனாட்சியின் கைத்தலம் பற்றும் மணக் கோலக் காட்சி.

''இந்தப் படம் தர்ற முகூர்த்தம் உனக்குச் சட்டுனு கல்யாணம் ஆவுது பார்....'' என்று சொல்லிக் கொடுத்தேன்.

''ஆமாம் பெரிய சாமியாரு — ஆசீர்வாதம் பண்ண ஆரம்பிச்சிட்டாரு.''

''இந்த நாடோடி வியாபாரி சன்னுசி தான்.''

'' என்னைக்குமா ?''

அடேயப்பா, என்ன சொற்கள் ; கண்களிலே என்ன வீச்சு !

இந்த வருடம் தபசுக்கு வந்தது முதல் பாப்பாவின் நடத்தை மேலும் புதிராக இருந்தது. உண்பதும் உறங்குவதுமாக, ஏதோ கிடைக்கிற லாபம் போதும் ஒத்தக் கட்டைக்கு என்று இருந்தவனுக்குத் திடீரென்று ஒரு பற்றுக் கோடு தோன்றியது. ஒரு பெண் அதிலும் இளமையும் அழகும் கொண்டவள், 'சரளமாகப் பழகுகிறாள்' என்ற எல்லைக்கு ஒரு படி மேலே, ஏதோ 'அர்த்தம்' கூட்டி நினைக்கிற அளவுக்குப் பழகுகிறாள் என்ற நினைப்பு மனத்திலொரு மோகத்தை ஏற்படுத்தியது.

கோயிலில் ரிஷப வாகனம் புறப்பாடு. பொறுக்கி எடுத்த ஜதை மேளம். ஊர்வலம் தெற்குத் தெருவை அண்டிவிட்டது. 'இனி எங்கே வியாபாரம்' என்று கடையை மூடி விட்டுப் பெரிய திண்ணையில் படுக்கையை விரித்தேன். மல்லிகை மணத்தைத் தொடர்ந்து, வளையல் ஒலி ஆளோடியில் கேட்டது. எதிர் சிறு திண்ணையில் பாப்பா வந்து அமர்ந்தாள்! ''நாயனக் கச்சேரி போகலியா?'' இருட்டும் வெளிச்சமும் அவள் மேனியில் திட்டுத் திட்டாகப் படர்ந்து எழில் ஊட்டின.

அன்று அவள் பேசிவிட்டுச் சென்றபிறகு எனக்குத் தூக்கமே பிடிக்கவில்லை.


மூன்று வருடங்களாகத் 'தபசு' கிடக்கும் அவள் மனத்தை நான் புரிந்துகொள்ள இவ்வளவு நாளாயிற்றும். குருக்கள் சாதியிலேயே பிறந்த ஒன்றிரண்டு 'முறை'ப் பையன்கள் இருக்கிறார்கள். ஆனால் மணி அடிக்கும் கைகளைப் பற்றிட அவள் மனம் ஒப்பவில்லை. அரும்பு மீசையும் கிராப்புமாக இருக்கும் என்னைப் பிடித்து விட்டதாம். சாதியாவது, பேதமாவது !

சங்கரன் — நாராயணன் என்ற பேதமின்றி ஒருங்கே காட்சி அளிப்பதுதான் ஆடித் தபசு உத்ஸவம். அந்த நிலையில் சமூகப் பிரிவுகளுக்கு இடமேது!... பாப்பா அப்படித்தான் பேசினாள். வைர முனையால் கண்ணாடியைச் சீராக அறுப்பது போல் அவள் என் தயக்கத்தை வெட்டி எறிந்தாள்.

தபசு அன்று ஊரே தெற்கு வீதியில் திரண்டிருக்கும். லட்சக்கணக்கான பக்தர்களின் கூட்டம் அலைமோதும். அம்மன் சப்பரத்தில் பட்டருக்கு முறை. தபசு பார்க்கப் பாப்பா புறப்பட்டுப் போவாள். ஆனால் தரிசித்துவிட்டு வீடு திரும்பமாட்டாள். இருவரும் தனித் தனியே பஸ்ஸ்டாண்டை அடைந்து, கோயில்பட்டி வரை பஸ்ஸில் சென்று, பிறகு ரயிலைப் பிடித்து மதுரை சேர்ந்து ஆவணி பிறந்ததும் திருமணம் புரிந்து கொள்ளலாம்.... ஒரு பெண் உற்சாகமாகத் திட்டமிட்டுச் சொல்லுகிறாள். சட்டத்தில் மையம் பார்த்துக் கொக்கி மாட்டுவது போல் அவள் அந்த ஆசையை என் உள்ளத்தில் தொங்கவிட்டு விட்டாள். ஓடிப் போய்விடுவது என்கிற எண்ணம் இனிமையாகத்தான் இருக்கிறது.

திரும்பிப் படுத்தேன். கீழக் கோபுரம் ஜம்மென்று நிமிர்ந்து நிற்கிறது. உச்சியில் ஒரு பாதரஸ விளக்கு, கலங்கரை விளக்கம் போல. மனிதனுடைய சிறுமையை வெறும் காட்சியாலேயே கரைத்து விடுகிற கம்பீரக் கோபுரம். 'ஏலே, படக் கடை, நீ செய்யறது வெறும் வியாபாரம் இல்லேடா. சாமி கைங்கரியம் கூட. விக்கிறது விபூதி குங்குமம். இதிலே ஒடுகாலி எண்ணமா? வயசுப் பொண்ணுதான் பருவக் கோளாறினால் அப்படிச் சொல்லுது. ஆனால் நியாயமான வழியை யோசிக்கிற மூளை உனக்கு வேண்டாம்?' மனச்சாட்சி குத்துகிறது. கோயில் வாசலில் இரும்பு அழிக்குள் மங்கிய விளக்கொளியில் திகழ்ந்த பிள்ளையார் துதிக்கையை நீட்டி ஜாக்கிரதை என்று சொல்லுவது போல இருக்கிறது.

மறுநாட் காலையும் பாப்பா ஜாடை மாடையாக முந்திய முடிவை உணர்த்தினாள். திருமஞ்சனத்துக்காகக் கோவில் யானை பவனி வந்தது. முன் நெற்றியிலே சந்தனம் பூசிய மாதிரி வெண்மை. அது ராஜ அம்சம் என்பார் யானைப்பாகர் அய்யர். 'ராஜபாட்டை



யிலே போ. குறுக்குச் சந்திலே இறங்கி விடாதே. சட்டம் போடுகிறவன், சட்டத்துக்குள் அடங்க வேணும்' என்று உள் மனம் பேசிற்று.

மூட்டையைக் கட்டினேன். பாப்பாவின் தாயாரிடம் வாடகைப் பணத்தைக் கொடுத்துவிட்டு விடைபெற்றேன். 'வருடா வருடம் வந்துகிட்டே இரு. அடுத்த தடவை ஜோடியாக வா' என்று சொல்லிக் கோயில் பிரசாதமாகத் தேங்காய் மூடி கொடுத்தாள். அதனுள் குங்குமமும் இருந்தது. 'ஜோடியாக என்ன உங்கள் வீட்டு மாப்பிள்ளையாவே வருவாரு' என்று கெகிகத்துக் கண்ணடித்தாள் பாப்பா. ஆனால் அந்த அம்மாளின் அன்பும், விசுவாசமும் என்னை நெகிழச் செய்தன. பூசைக்குரிய பூவைக் காலால் மிதிக்கலாமா? அவங்க வீட்டுக்கே துரோகம் செய்யலாமா?

பாப்பா சிங்காரித்துக் கொண்டு தபகக் காட்சி பார்க்கத் தெற்கு வீதி புறப்பட்டாள். பஸ் ஸ்டாண்டுக்குப் பதில் நான் ரயில்வே ஸ்டேஷன் சென்றேன். திருவனந்தபுரம் பாசஞ்சர் வந்து நின்றது. எனது நெஞ்சக் குழப்பத்தைப் பிரதிபலிப்பது போன்ற புகை.

அம்மனைத் தரிசித்துவிட்டுக் கூட்டம் கலையும்போது பாப்பா வீட்டுக்குப் போக மாட்டாள். நேரே பஸ் ஸ்டாண்ட் வந்து காத்து நிற்பாள். என்னைக் காணாமல் பதைத்துப் போவாள். ஆத்திரமும் கோபமும் அடைவாள். இந்தச் சம்பவமும் கொஞ்ச நாள்தான் நினைவு இருக்கும். அப்புறம் ஓர் அர்ச்சகப் பையன் அவளது கைத்தலம் பற்றி அவளை அம்மன் போல் போற்றி வழிபடுவான். பிறகு அவள் இந்தக் கன்றுக் காதல் நிகழ்ச்சியை எண்ணிச் சிரிக்கலாம். திரை அகன்றுவிட்டால் கற்பூர ஹாரத்தியில் தெய்வ பிம்பம் பிரகாசிக்கும். இடையில் வந்த இந்த மாயத் திரை அறுந்து விட்டால் அவள் வாழ்க்கை நேரான வழியில் சென்று சுடர் விடும்.

வண்டி, நிலையத்தை விட்டு நகர்ந்த பின் நெடுமூச்சு வந்தது. மீசைக்காரர் ஒருவர் நகர்ந்து இடம் அளித்தார். உட்கார்ந்து ஆசுவாசப்படுத்திக் கொண்டேன். மன உளைச்சல் தீரவில்லை. ஓர் இளம் பெண்ணை ஏமாற்றி விட்டோம்; வாழ்க்கையை அனுபவிக்கத் தவறிவிட்டோம் என்ற கழிவிரக்கம் ஒரு புறம். பரவாயில்லை, சோதனையில் தப்பி நல்ல நெறியில் நடப்பதற்கு இறைவன் மனத் தெம்பு அளித்தாரே என்று சமாதானம் ஒரு புறம். மல்லிகை மணம்; வளையல் ஒலி; 'பட்டுக் கடைக்காரரே' என்ற குழைவான அழைப்பு; மணியோசையுடன் நடை போடும் யானை; தீவட்டி வெளிச்சம்... ஆலயத்தில் வௌவால் குடியிருப்பதில்லையா? அதுபோல் வக்ர எண்ணங்களும் இதயத்தின் இருட்டு மூலையில் தலைகீழாகத் தொங்கின சில கணங்கள்.

'சாமி எவிடெ போகுன்னு' என்று மீசைக்காரர் மெல்ல விசாரித்தார். நல்ல உயரம்; பனிச்சென்ற வண்ணத்தில் புஷ் ஷர்ட். அவர் அருகே ஓர் அழகான யுவதி; கூந்தலும் முகமும் சொல்லி விட்டன அவள் கேரளத்துச் செல்வி என்று.

ஸ்ரீவில்லிபுத்தூர் வருவதற்குள் நானும், அவரும் நெருங்கிப் பழகி விட்டோம். இரண்டு பேரும் இறங்கிக் காப்பி சாப்பிடச் சென்றோம்.

''சேட்டன், நிங்களோடு ஒரு விஷயம் பரயன்னு. ஆப் பொண்ணு என்டெ கூடி ஓடிப்போனதான்னு. ஞான் ஒரு புட்பால் பிளேயர். அதுகொண்டு எனக்கு ஸ்டிரெயின் கொண்டு ஹார்ட் டிரபில் உண்டு. இனி ஒரு அட்டாக் வந்தால், அது அவஸானம்மா யிருக்கும். இது அவளுக்கு அறியுக இல்லா. அவளுக்கு என்னோடு அசாத பிரேமம் ஆணு. நங்கள் கல்யாணம் கழிக்கானும் பழனியி லேக்கு போகுன்னு. ஸாரே, அவளுடைய ஜீவிதம் பாழாகணும்னு எனக்கு ஆக்ரகம் இல்லே. அதுகொண்டு ஞான் இவ்விட நின்னு விட வாங்குன்னு. அவள் உணர்ந்தவுடனே நிங்கள் விவரம் அவளோட பரஞ்சு மனஸிலே ஆக்கி, கொல்லத்தேக்கு திரிச்சி அயக்குவானு அபேக்ஷா...''

''ஐயையோ! என்னிடம் அந்த மாதிரிப் பொறுப்பை ஒப்படைக்காதீர்கள். நான் லாயக்கில்லே... நீரே சொல்லி அவளைக் கொல்லத்தில் கொண்டு விடுமையா...''

''அவளோடு இக்காரியம் ஞான் பரஞ்சால் அவள் கேட்டுவ இல்லா. மரிச்சாலும் நிங்களோடு கூட மரிக்கணும் என்னுனு அவள் பறையுக...''

ஸ்டேஷன் மணி; கார்டு விசில்; இன்ஜின் ஊதல்.

மீசை பின்தொடர வண்டிக்குள் ஏறினேன். உள்ளே வந்த பிறகுதான் மீசை தொடரவில்லை என்று தெரிந்தது. வண்டி நகர்ந்தது. கதவுப் பக்கம் ஓடினேன். 'வே... வே! வண்டியிலே ஏறும்... என்னை....'

மீசைக்குக் கீழே சிரிப்பு; கையை வீசி வழி அனுப்பினார். மீண்டும் ஆசனத்துக்கு வந்தேன். அந்தப் பெண், அவளைச் சுற்றிச் சுழலும் சூறாவளியை அறியாமல் ஆழ்ந்த தூக்கத்தில் இருந்தாள்.

ஒரு பெண்ணிடமிருந்து அப்பால் அப்பால் அப்பால் ஓடிக் கொண்டிருந்த எனக்குப் புதிய பந்தம். காதலனை இழந்த ஒரு பெண்ணைச் சமாதானப்படுத்த வேண்டிய இக்கட்டான நிலை. கேரளத்து அழகி கனவில் லயித்து இருந்தாள்.

அடுத்த ஸ்டேஷன்.... மள மளவென்று சாமான்களை எடுத்துக் கொண்டு கீழே இறங்கிப் பிளாட்பாரத்தை அடைந்தேன்.

மறுநாட் காலை செய்தித் தாளைப் பிரித்த போது —

சங்கர நயினார் கோயில் ஆடித் தபசு உற்சவக் கூட்டத்தில் சிக்கி, மிதிபட்டு நான்கு பேர் மரணமடைந்த செய்தி.

அவற்றில் பாப்பாவின் பெயரையும் கண்டதும் என் நாடி அடங்கி விட்டது.

வெள்ளிக் கிழமை சாமி படத்தைத் துடைக்கப் போனபோது அது கீழே விழுந்து கண்ணாடி நொறுங்கியது போன்ற அதிர்ச்சி என்னுள் பரவியது.


திட்டமிட்டபடி அவளை அழைத்து வந்திருக்கலாமோ?

அப்படியானால் இது நடந்திராதல்லவா?

அவளது துணிச்சலுக்கா, எனது கோழைத் தனத்துக்கா?

# பீதா தன் பிறப்பு எடையை 4 மாதங்களில் இரட்டிப்பாக்கிக் கொண்டாள்—வெற்றிக் கொடியாள்!

கொழு கொழுவென்றிருக்கும் பீதா யாவரையும் கன்னம் குழிந்த முறுவலுடன் வரவேற்று, தன் சில் விஷமத்தைக் காண்பிக்கிறாள். பீதா தன் பால் பாட்டிலை இறுதித் துளி வரை விடுவதில்லை. கொஞ்சையள்ளும் இக் குழந்தையின் இரகசியம்: ஒரு விசேஷக் குழந்தை உணவு.





# பீதா அருந்துவது அமுல்ஸ்ப்ரே—வெற்றி கண்ட குழந்தை உணவு.

அறிமுகப்படுத்திய 2 ஆண்டுகளுக்குள்ளாகவே, அமுல்ஸ்ப்ரே குழந்தை உணவுகளுக்குள் முதல் இடத்தைப் பிடித்துக் கொண்டு விட்டது. அது ஒரு விசேஷமான செய்முறைப்படி விசேஷ முறையில் (ஸ்ப்ரே ட்ரையிங்) ஆக்கம் பெற்றது... உங்களது அருமைக் குழந்தைக்காக. சீரணிக்க எளிதான அமுல்ஸ்ப்ரே ஒரு சரிவிகிதச் சத்துணவு. குழந்தைகளின் சீரான வளர்ச்சிக்கு அவசியமான வைட்டமின்கள், தாதுப் பொருள்கள், அதிக அளவிலே தரமான புரதம் யாவும் கொண்டது.



## அமுல்ஸ்ப்ரே

**தாய்ப் பாலுக்குப் பதிலாகப் புகட்டச் சிறந்தது.**

**இலவசம்**
அமுல் குழந்தை நூலை இலவசமாகப் பெற (50 பைசா தபால் தலையுடன்) எழுதுக: தபால் பை 10124, பம்பாய்-1.

ASP/AS-16

## ராவுத்தருக்கு மயில் ஏறத் தெரியுமா?

மாவுத்தன் என்றால் யானைப் பாகன். ராவுத்தன் என்றால் குதிரை வீரன். கந்தர் அலங்காரத்தில் அருணகிரிநாதர் முருகப் பெருமானை 'மயிலேறும் ராவுத்தனே!' என்கிறார். குதிரையைப் போல் மயிலை வேகமாகச் செலுத்துகிறவரே என்று பொருள்.

- நெடுமிடல்.

## எஞ்சியிருப்பது எஞ்சினியர்



"உங்கள் பையன் என்ன செய்து கொண்டிருக்கிறான்?"

"சும்மாதான் வீட்டில் இருக்கிறான்!"

"அப்படியா! என் பையன் கூட எஞ்சினியர்தான்!"

- கோட்டா மோகன்

## வெற்றியின் விலை!

பங்களா தேஷ் விடுதலைப் போர் 14 நாட்கள் நடந்தது. போரில் வெற்றி பெற்ற இந்தியா, வெற்றிக்காகச் சுமார் 100 கோடி ரூபாய் செலவழித்தது என்று மதிப்பிட்டிருக்கிறார்கள்! இதில் வெடி மருந்துகளுக்கான செலவு 25 கோடி; சேதமடைந்த டாங்கிகள் மற்றும் போர்க்கருவிகள் இவைகளின் மதிப்பு சுமார் 25 கோடி; போரில் நொறுங்கிய நமது விமானங்களின் மதிப்பு 15 கோடி; அழிந்த கப்பல்களின் பெறுமானம் சுமார் 2 கோடி; விமானங்கள், கப்பல்கள், டாங்கிகள் இவை இயங்குவதற்காகச் செலவான எரிபொருளின் மதிப்பு 10 கோடி; சிப்பாய்களுக்கு அதிகப்படியாகக் கொடுத்த 'போர் அலவன்ஸ்' 2 கோடி; சிவில் டிரான்ஸ்போர்ட்டுக்களுக்காகவும், அவை




களின் மூலம் பொருட்களைப் போர் முனைக்கு சப்ளை செய்யவும் ஆன செலவு ஒரு கோடி ரூபாய்; ராணுவத் தளவாடங்களை ரிப்பேர் செய்ய ஐந்து கோடியும் மற்ற இனங்களுக்கு ஐந்து கோடியும் செலவாயின. இந்தப் போருக்காக இந்தியா வெளிநாட்டு உதவி எதையும் பெறவில்லை. பெற்றிருந்தால் செலவு இன்னும் அதிகமாகி யிருக்கும்!

ஒன்பது மாதங்களாக பங்களாதேஷில் அக்கிரமங்கள் செய்ததற்கும் 14 நாட்கள் போர் புரிந்ததற்கும் பாகிஸ்தான் சுமார் 300 கோடி ரூபாய் செலவிட்டிருக்கிறதாம்! ஆதாரம்: ஹிந்துஸ்தான் டைம்ஸ்

தகவல்: "அனிதா"

★

ஜெய்ப்பூர் மத்திய சிறைச்சாலையில் உள்ள 230 கைதிகள் சம்பந்தித்து நிறைவேற்றிய ஒரு தீர்மானம்: "நாட்டில் நெருக்கடி நிலை நீடிக்கும் வரையில் நாங்கள் காலைச் சிற்றுண்டி சாப்பிடமாட்டோம்; அதன் மூலம் மிச்சமாகும் பணத்தைத் தேசிய பாதுகாப்பு நிதிக்குக் கொடுத்து விடுங்கள்."

"ஹிந்துஸ்தான் டைம்ஸ்"

சரோஜா ராமச்சந்திரன்




நிக்ஸனுக்கு வோட்டளித்த ஒருவரிடம் நண்பர் கேட்டார்:

"நீங்கள் நிக்ஸனுக்கு எதற்காக வோட்டளித்தீர்கள்?"

"நான் குடியரசுக் கட்சியைச் சேர்ந்தவன்."

"நீங்கள் ஏன் குடியரசுக் கட்சிக்காரராக இருக்கிறீர்கள்?"



"ஏனென்றால், என் தந்தையும் ஒரு குடியரசுக் கட்சிக்காரர்!"

"ஓ, அப்படியா? உங்களுக்குக் கல்யாணமாகி விட்டதா?"

"இல்லை. நான் ஒரு பிரம்மசாரி."

"ஏன் பிரம்மச்சாரியாகவே இருக்கிறீர்கள்?"

"என்னமோ இருக்கேன்; வோட்டளிப்புக்கும் கல்யாணத்துக்கும் என்ன சம்பந்தம்?"

"ஒன்றுமில்லை; 'என் அப்பா பிரம்மச்சாரியாக இருந்தார்! அதனால் நானும் பிரம்மச்சாரியாக இருக்கிறேன்' என்பீர்களோ என்று எதிர்பார்த்தேன்!"

-- பி.எஸ்.எம்.

## 'ஒரே' லஞ்சம்!

ஒரு மந்திரி: நான் பதவிக்கு வந்து பத்து ஆண்டுகள் ஆகிவிட்டன. இன்று வரை ஒருவரிடம் நான் லஞ்சம் வாங்கியதில்லை.

ஒரு பிரஜை: அந்த ஒருவர் யார்?

- கோட்டா மோகன்

# அம்மா

## ரா. கணபதி

## 16. ஸ்ரீ ராஜராஜேச்வரி

சிந்தூரம் போல் செவேலென்ற திருமேனியள்; பிரம்மன் முதலிய சகல தேவதைகளாலும் சேவிக்கப் பெறும் உயர்நலமாகிய பரதேவதை; கரும்பு வில், மலரம்பு, பாசம், அங்குசம், புத்தகம், சிறந்த மாணிக்க அக்ஷமாலை இவற்றைக் கரங்களில் தரிப்பவள்; மற்றும் இரு கரங்களால் மார்பகத்தின் மீது மேவும் ரத்தினமிழைத்த வீணையை மீட்டுபவள்; ஒரு கரத்தால் அபயம் அருள்பவள்; ஒரு கரத்தால் வரம் வழங்குபவள்; ஆளும் தன்மை, தர்மம், கீர்த்தி, செல்வம், வைராக்கியம், மோக்ஷம் ஆகிய ஆறு 'பக'ங்களுக்கும் உறைவிடமான பகவதி - இப்பேர்ப்பட்ட ஸ்ரீ லலிதா மகா திரிபுரசுந்தரியாம் ஸ்ரீ ராஜராஜேசுவரியை - பதினாறு அட்சரத் தொகை கொண்ட ஸ்ரீ ஷோடசீ மகா மந்திரத்தின் தேவதையை - ஆசிரயிக்கிறேன்.

— ஸ்ரீ ஷோடசீ தியானம்

சாரதை விம்முகிறபோது ராமகிருஷ்ணர் புன்சிரிப்புடன் பேசினார். எந்தப் பிரேமையினால் அவள் விம்மினாளோ, அதே பிரேமையால் அவர் புன்னகைத்துப் புகல்வார்:

'அம்மா, அசட்டுச் சாரு அம்மா, ஞானத்திலே சமர்த்தாயிருந்தாலும் அன்புக்காக அசடாகிறதிலேயே ஆசை வைச்ச சாரு அம்மா! நான் உன்னை அம்மான்னு கூப்பிடறமாதிரி குழந்தைகளும் அம்மான்னு கூப்பிடணும்னு தானே ஆசைப்பட்டே? அந்த ஆசை நிறைவேறுதுன்னு நினைச்சு இனிமே விசனப்படாதே. அம்மான்னு யார் கூப்பிடறாளோ இல்லையோ, அதைப் பொருட்படுத்தாம நீ எல்லாருக்கும் அம்மாவா இருந்துண்டு இரு. 'அம்மா'ன்னு யாரும் வெளிப்பட ஆவேசப்பட்டுண்டு உன்னண்டை வரணுங்கிறதில்லே. நீயும் உடம்போடு பின்னி வைச்ச லஜ்ஜையை விட்டுட்டு, 'மகனே மகளே'ன்னு யாரையும் வெளிப்படக் கூப்பிட்டுத் தாய்மையைக் காட்டணுங்கிறதும் இல்லே. எப்படி சாக்ஷாத் விசுவமாதா தன்னைக் காட்டிக்காம, ஒளிஞ்சுண்டிருந்தே, அத்தனைபேருக்கும் அம்மாவா அன்பு பண்ணறாளோ, அப்படியே நீயும் திரைக்குள்ளே இருந்துண்டே, மனசுக்குள்ளே அம்மா சாம்ராஜ்யத்தைப் பரப்பிக்கோ! அன்புக்கு அடக்கம் கிடையாதுன்னு சொல்லுவா. நீ லோகத்துக்கே புதுமையா அடக்கம், அன்பு இரண்டுக்கும் ஸ்வரூபமா இருந்துண்டு இரு. அப்புறம் ஒரு காலம் வரும். சாரு என்கிற பெண், ஸ்ரீஸ்ரீஸ்ரீ சாரதாமணி தேவியார் என்கிற பெரிய மநுஷியா ஆவா. அப்போது நீ வெளியேயும் உன்னை அம்மாவாக் காட்டிக்கலாம். அப்போது மநுஷ்யாளும் தானுவே உன்னை அம்மா அம்மான்னு கூப்பிட்டுண்டு ஓடி வருவா....'


—இப்படியெல்லாம் ராமகிருஷ்ணர் வாய்விட்டுச் சொல்லவில்லை. ஆனாலும் அவள் குழைந்து அழுதபோது அவர் குழறிக் குழறி எதையோ சொன்னார், எதையோ சொல்ல முடியாமல் தவித்தார். அவர் சொன்னதிலும், சொல்ல முடியாமல் தவித்ததிலும் இத்தனை வார்த்தைகளையும் சாரதையின் அகச் செவி கேட்டுக் கொண்டது.

அவள் முன்னர் அன்னையின் அன்பு சாம்ராஜ்யம் விரிந்தது. அவள் ஸ்ரீமாதாவாகவும், ஸ்ரீ மகாராக்ஞியாகவும் அந்த சாம்ராஜ்யத்தில் வீற்றிருக்கிறாள். அவளைச் சுற்றிக் குழந்தைகள், குழந்தைகள், குழந்தைகள் — கணக்கேயில்லாத குழந்தைகள், பல ஜாதிக் குழந்தைகள், பலவேறு மன நிலையிலும் செல்வ நிலையிலும் உள்ள குழந்தைகள். 'ஆகா, இதோ இந்தக் குழந்தைகள் என்ன இத்தனை வெளுப்பாக இருக்கிறார்கள்! முழுமதியில் முழுகியிருப்பதால் வெள்ளை வெளேரென்று தோன்றுகிறார்களா?'

ராமகிருஷ்ணரின் மனமோகனக் குரல் அவளது மனோராஜ்யத்தைக் கலைத்தது—அல்லது நிலைக்க வைத்தது: ''அம்மா அம்மான்னு ஏங்கி அழைச்சுண்டு உன்னை ரொம்பப் பேர் தேடி வருவா. இந்தத் தேசத்துக்காரா மட்டும் இல்லே. வெள்ளைக்கார தேசத்திலேருந்துகூட வெள்ளைக் குழந்தைகள் வரும்.''

முதல் வெள்ளைக் குழந்தையாக ராமகிருஷ்ணரே அவள் முன் நின்றார் — அம்மா அம்மா என்றழைத்துக்கொண்டு!

''பத்துக் குழந்தைகளைப் பெற்றெடுத்துக் கொள். பிறகு புருஷனைப் பதினோராவது குழந்தையாக ஆக்கிக் கொள்'' என்று மணப் பெண்ணை ஆசீர்வதிக்கிறாள் வேதமாதா. சாரதாவோ முதல் குழந்தையாகவே கணவரைப் பெற்றுவிட்டாள்!



உலகத்துக்கெல்லாம் ஒரே போல் பூமாவான அம்புலியைக் காட்டி, உலகத்துக்கெல்லாம் ஒரேபோல் அம்மாவான அம்பாளை உணர்த்தி, உலகுக்கெல்லாம் ஒரேபோல் அம்மாவாகச் சாரு ஆவதற்கும் ஆசி கூறி அநுமதி தந்த ராமகிருஷ்ணர், தம்மைப் பெற்ற அன்னையைக் குசலம் விசாரிக்க நஹபத் மாடிக்குச் சென்றார்.

ஆலயத்து அன்னை, கைப் பிடித்த சாரதையன்னை இவர்களிடம் ராமகிருஷ்ணர் கொண்டிருந்த மதுர உறவு அவரை மணிவயிற்றில் தாங்கிய ஜனக மாதா சந்திரமணிதேவிக்கும் கிடைத்தது. தேவி சந்திரமணிக்கு அந்த மதுரம் இரட்டிப்பாகவே கிடைத்தது — ராமகிருஷ்ணரோடு சேர்ந்து சாரதையும் அல்லவா அந்தக் கிழவியை அன்பிலே முழுக்காட்டினாள்?

ராமகிருஷ்ணரின் அன்பு முற்றிலும் மனத் தொடர்பு கொண்டதே. சாரதைதான் சரீரத்தாலும் பணிவிடை செய்து சந்திராவிடம் அன்பைக் கொட்டியவள். ராமகிருஷ்ணர் தாயுடன் சேர்ந்தே உண்பார். சாரதாமணி உணவு பரிமாறுவாள். அந்த மூன்று பிரேம மய ஜீவர்களையும் இப்படிச் சித்திரித்துப் பார்த்துக் கொள்ளும் போது நமக்கும் உதரம் நிறைகிறது!

சாரதைக்கு மாமியாரிடமிருந்த பக்தியும், பரிவும் சொல்லத் தரமன்று. தனது பதிதேவரையும், பிறகு மூத்த புத்திரர் ராமகுமாரரையும் இழந்த சந்திராதேவி சமீபத்தில் அருமைப் பேரன் அக்ஷயனையும் வாரிக் கொடுத்திருந்தாள். எனவே, அந்தப் புண்பட்ட இதயத்தை எவ்வளவு பண்பட நடத்த வேண்டுமோ அப்படிப் பாங்குடன் நடத்தினாள் சாரதை.


நஹபத் மாடியிலிருந்து, ''சாரதா'' என்று மாமியாரின் குரல் கேட்டுவிட்டால் போதும், உடனே கீழேயிருந்து சாரதாமணி துள்ளிக் குதித்துக்கொண்டு ஓடுவாள். நஹபத் வாசல் நிலைக்கு உயரம் போதாது. ''இப்படி ஓடுகிறாயே, தலையில் இடித்துக் கொண்டால் என்னவது?'' என்று யாராவது கேட்டால் சாரதாதேவி, ''இடிச்சுண்டாலும் பரவாயில்லை! அவா வயசானவா, அம்மாவுக்கும் மேலே, அதோட சோகப்பட்டவா, அவாளைக் காக்க வைக்கவே கூடாது'' என்று சொல்லிக் கொண்டு விரைவாள்.

நிதானத்துக்குப் பெயரெடுத்த சாரதை மாமியாரின் அழைப்பு வந்துவிட்டால் புயலாகி அதை நிறைவேற்றுவாள். 'இதோ வந்துவிட்டேன்' என்று கீழேயிருந்து கத்துவது அவளால் முடியாத காரியம். எனவே, குரல் கொடுக்கிற நேரத்துக்குள் மாமியின் முன் தானே ஆஜராகிவிடுவாள்.

ராமகிருஷ்ணரைப் பெறும் யோக்கியதை பெற்ற சந்திரா ஒரு வெள்ளை ஆத்மா. மாற்றுப் பெண்ணிடம் அவளுக்கு எல்லையில்லாத பிரியம். தன் பிள்ளை அவளுடன் நடத்தும் 'அழகு'க் குடித்தனம் அவளுக்குத் தெரியும். அதனாலேயே அவளுக்குச் சாரதையிடம் பரிவு கூடுதலாயிற்று. தங்கள் வீட்டுப் பூர்வ கதைகளையெல்லாம் எந்த மாமியாரும் எந்த மாற்றுப் பெண்ணுக்கும் சொல்லாத விதத்தில் ஒளிவு மறைவில்லாமல் சவிஸ்தாரமாகச் சொல்வாள்.

ஒரு நாள் சாரதை மாமியாரின் சுருங்கிக் காய்ந்த முதுகில் கடுகெண்ணெயைச் சுக உஷ்ணமாக அழுந்தத் தேய்த்துவிட்டுக் கொண்டிருந்தாள். கிழவி உற்சாகமாகப் பேசலானாள்:

''ஹ்ருதே குறைப்பட்டுண்டான், நீ இங்கே கதாயியைப் பார்க்க வரவா கொண்டு வர பழம் பட்சணத்தையெல்லாம் வரவாளுக்கும் வேலைக்காராளுக்கும் வாரிக் கொடுத்துடறயாம். பெரிய மநுஷா, சின்ன மநுஷான்னு நீ வித்தியாசம் பார்க்காதது அந்த அசட்டுப் பிள்ளைக்குப் பிடிக்கலை. போயும் போயும் எங்கிட்ட வந்து குறைப்பட்டுக்கறானே, நானும் உன்மாதிரியேதான். ஊரிலே இருக்கிறவா வயித்திலே வாழையைப் புதைக்கணும்னு எனக்குச் சிறு வயசிலேயே ஏக ஆர்வம்; உன் மாதிரிதான். ஆனா இந்த விஷயத்திலே கதாயி உனக்கு அநுகூலம். உங்க மாமனார் இருந்தாரே, அவர் எனக்குப் பிரதிகூலம். அப்படின்னா அவர் துஷ்டர்னு அர்த்தமில்லை. அந்த மகா புருஷனை அப்படிச் சொன்னா நான் நல்ல கதிக்குப் போகமாட்டேன். ஆனா உன் மாமனார் மகா ஆசாரக்காரராக இருந்ததால் எனக்கும் அவருக்கும் நடுப்பற ஒரு உரசல். அவர் இதராள் கிட்டேயிருந்து எந்த பகுமானமோ, தட்சணையோ, காணிக்கையோ யாசகமாக வாங்கிக்கவே மாட்டார். ஆத்திலே யாரும் வாங்கிக்கக் கூடாதுன்னும் உத்தரவு போட்டிருந்தார். அப்படியும் அவரோட சீலத்தையும், பக்தியையும், அன்பையும் பார்த்து ஊருக்கெல்லாம் அவர்கிட்ட ஒரு மதிப்பு. அவருக்குச் செஞ்சா தெய்வத்துக்குச் செஞ்ச மாதிரின்னு ஜனங்களுக்கு ஒரு தீர்மானம். அதனாலே பல பேர் பழமும், காய்கறியும், தானியங்களும் கொண்டு வருவா. எனக்கு அதையெல்லாம் பார்க்


நீங்கள் ஓர் இல்லத்தரசியோ—
நாகரிக கல்லூரி வனிதையோ
உங்கள் எழில்மிக்க
சருமத்தை, மிருதுவாகவும்,
புத்துணர்ச்சியுடனும்,
பாதுகாப்பது சந்திரிகா
ஆயுர்வேதிக் டாய்லெட்
சோப் ஒன்றேதான்.
AYURVEDIC
SOAP
aries
சந்திரிகா
ஆயுர்வேதிக் டாய்லெட் சோப்
சந்திரிகா பிராடக்ட்ஸ் கோயம்புத்தூர்-2. சென்னை-10.

கச்சே, 'அடடா, நாம இதை வேண்டாம்னுட்டா இதை அவாவாளும் தாங்களே எடுத்துண்டு போய்த்தானே சாப்பிடுவா? நாம வாங்கிண்டு, இதை எல்லாம் ஏழைகளுக்கு விநியோகம் பண்ணலாமே'ன்னு தோணும். அதனாலே உன் மாமனாருக்குத் தெரியாமலே, அவர் வார்த்தையை மீறி அதை எல்லாம் வாங்கி ஏழை எளியவாளுக்குத் தானம் பண்ணுவேன். தானியமா இருந்ததுன்னா, உன் மாமனாருக்குத் தெரியாமலே சிரமப்பட்டுச் சமையலும் பண்ணி நாலு ஜீவனுக்கு அதைப் போடுவேன். ஒரொரு சமயத்திலே அவருக்குத் தெரிஞ்சுவிடும். கோவிச்சுப்பார். 'ஊராரின் பண்டத்தை விநியோகம் பண்றத்துக்கு நீ என்ன மணியக்காரியா? உனக்குத் தானம் பண்ணின புண்ணியம் கிடையாது. தானம் வாங்கின பாபம் தான் சேரும்'னு சொல்வார். நான் பாப — புண்ணியத்துக்காகவா அப்படிப் பண்ணினேன்? ஆத்ம திருப்திக்காகத்தானே அப்படிப் பண்ணிண்டிருந்தேன்? இருந்தாலும் அந்த மகா பெரியவர்கிட்டே இப்படி எல்லாம் வாக்குவாதம் பண்ணமாட்டேன். 'தானம் வாங்கினதை எல்லாம் ரகுவீரனுக்கு நைவேத்தியம் பண்ணிட்டுப் பிரசாதமாகத்தான் விநியோகம் செஞ்சேன். ஸ்வாமி கண்ணுலே எந்த திரவியத்தைக் காட்டினாலும் தோஷ நிவிருத்தின்னு நீங்க சொல்லியிருக்கேளே!'ன்னு நைச்சியமா, பக்குவமாச் சொல்லுவேன். 'எக்கேடு கெட்டுப்போ' என்று அவரும் விட்டுக் கொடுத்துவிடுவார். அம்மாடி, நான்பாட்டுக்குச் சொல்லிண்டே போறேனே, நீ 'ஊம்' கொட்டக்கூட இல்லேயே!''

எல்லையற்ற மரியாதை காரணமாகவே மௌனமாகக் கேட்டு வந்த சாரதை, ''கவனமாக் கேட்டுண்டு தான் அம்மா இருக்கேன். அப்பாவோட கோபத்தைப் பத்திச் சொன்னேள்....'' என்றாள்.

''அடி பெண்ணே! உன் மாமனாரைக் கோபிஷ்டர்னு நினைச்சுடாதே. பாத்திரம் பார்க்காம யாசகம் வாங்கிண்டாத்தான் அவருக்குக் கோபம் வரும். மற்றபடி மகா சாந்தர். அவரோட பக்தியைச் சொல்லி முடியாது. நம்ம குலதேவதை சீதளாதேவி அவர் பின்னாடியே போயிண்டிருக்கிற மாதிரி எனக்குத் தோணும். ஒரு நாள்..... சாரதே! இத்தனை நாழியா எண்ணெய் தேய்க்கறயே, கை வலிக்கப் போறது; அதோடே என் தேக உஷ்ணமெல்லாம் உனக்குள்ளே இறங்கிடும். தேய்ச்சது போதும். இப்படி என் எதிரே வந்து உட்கார்ந்துண்டு சொச்சக் கதையைக் கேளு.....''

சாரதைக்கு எத்தனையோ வேலை காத்துக் கிடந்தது. இருந்தாலும், ''இல்லேம்மா, இன்னொரு பத்து நிமிஷம் இதமாத் தேய்ச்சுடறேன். நீங்க பழைய விருத்தாந்தங்கள் சொல்லிண்டே இருங்கோ'' என்று சொல்லிக் கொண்டு கிழவியின் நடு முதுகில் எண்ணெயை வைத்து சொஸ்தமாக அழுத்தினாள்.

சந்திரமணி தொடர்ந்தாள்: ''ஒரு நாள் உன் மாமனார் லாஹா வீட்டிலே புஷ்பம் பறிக்கப் போயிருந்தார். விடியறதுக்கு முன்னாடியே பூப்பறிச்சுண்டு வரது அவர் வழக்கம். அன்னிக்கும் அப்படித்தான் போயிருந்தார். அப்போ இவர் செடி ஒண்ணுக்கு ஒரு பக்கத்திலே கீழே இறைஞ்சிருந்த பூவைச் சேகரிச்சுண்டிருந்தார். பூ ரொம்ப சொல்பமாத்தான் இருந்தது. அப்போ, 'அப்பா, இந்தப்பக்கம் வந்து பாருங்கோ, கிளையெல்லாம் ஏகப்பட்ட புஷ்பம் இருக்கு. நான் கிளையைத் தாழ்த்தறேன். நீங்க பறிச்சுக்கலாம்'னு செடிக்கு மறு பக்கத்திலேருந்து ஒரு குழந்தைக் குரல் கேட்டதாம். அப்பா அந்தப் பக்கம் போனாராம். சர்வ லக்ஷணமான ஒன்பது வயசுப் பெண் குழந்தை ஒண்ணு கிளையைத் தாழ்த்திப் பிடிச்சுண்டதாம். அப்பா குடலை நிறையப் பூ எடுத்துண்டாராம். 'நீ யாரும்மா? இத்தனை இருட்டோடு இங்கே வந்திருக்கயே!'ன்னாராம். அந்தப் பெண், 'நானா, **நான்தான் நான்**. ஹாலதார் ஆத்திலே இருக்கறவதான் நான்' — அப்படின்னாளாம். சாரு, உனக்குத் தெரிஞ்சிருக்குமே ஹாலதார் ஏரிதான் நம்ம ஊருக்கே நடுநாயகம். அதைத்தான் 'ஹாலதார் ஆத்திலே'ன்னு அந்தப் பெண் சொல்லித்து போல இருக்கு. அப்பாவுக்குச் சிலிர்த்துப் போச்சாம். நம்ம ஊரை ரக்ஷிக்கிற தேவியேன்னு தெரிஞ்சுதாம். அப்பவே அந்தப் பெண் மறைஞ்சு போயிட்டாளாம். உன் மாமனார் அப்படிப் பரம பாகவதராயிருந்ததாலேதான்...'' சந்திரமணி தொண்டை அடைக்கத் தொடர்ந்தாள்:

''....பகவான் இந்த ஆத்திலே வந்து பிறந்தான்.''



மாமியார் மருமகள் இருவரும் விசித்து விசித்து அழுதனர்.

இங்கே நஹபத் மாடியில் மாமியாரும் மாற்றுப் பெண்ணும் அழுதார்கள்—தங்கள் கூடவே மானுடராக வசிக்கும் பகவானை நினைத்து.

அங்கே தமதறையில் அந்த பகவான் சிரித்துக் கொண்டிருந்தார். கோயிலிலிருக்கும் அதே அம்மாதான் தம்மைப் பெற்ற சந்திரமணி, அவளே தம்மை மணந்த சாரதாமணி என்று சொல்லி அவர்களுக்குப் பக்தராக இருந்தவர் இந்த பகவான். பெற்ற தாயை அம்பிகையாக பாவிப்பதில் புதுமை ஏதுமில்லை. 'மாத்ருதேவோபவ' என்று வேதமாதா விதித்த நாளாக அம்மாவை அம்பாளாகக் கொண்டவர் எண்ணிறந்தோர். அம்மாவை 'அம்பாள்' என்று பிரகடனம் செய்து பூஜிக்க வேண்டிய அவசியமில்லாதபடிக்கு, அந்தப் பக்தி நமது உணர்வோடு கரைந்து வந்திருக்கிறது. ஆனால் மனையாளை மகாமாதாவாக பாவிப்பது அருமையிலும் அருமையே. இந்த அருமையைப் பிரகாசமாகப் பிரகடனம் செய்ய வேண்டும் என்று பகவான் ராமகிருஷ்ணர் திருவுளம் கொண்டார். 'நானும் அம்பாள்; அவளும் அம்பாள். இந்த அம்பாள் அந்த அம்பாளை அம்பாளேதான் என்று பிரகடனம் செய்ய வேண்டியிருக்கிறது!' இதை எண்ணிச் சிரித்துக் கொண்டிருந்தார் ஸ்ரீ ராமகிருஷ்ணர்.

இப்போது சாரதாமணி தக்ஷிணேசுவரத்துக்கு வந்து ஒரு மண்டலம் பூர்த்தியாகி விட்டது. தம்முடனேயே சயனம் கொண்டும் அந்த ஒரு மண்டலத்தில் அவள் காட்டிய ஒப்பற்ற தூய்மையைக் கண்டு வியந்த ராமகிருஷ்ணர் அவளிடம் தமது மரியாதையையும், பக்தியையும் வெளிப்படக் காட்டி மகிழவும் எண்ணம் கொண்டார்.

அந்த எண்ணம் செயலான தினம் சமய சரித்திரத்திலேயே சிறப்பிடம் கொண்ட திருநாள்.

பதினெட்டு புராணங்களும் சம்பூர்த்தி பெறும் பிரம்மாண்ட புராணத்தின் பூர்த்தி ஸ்தானமாக விளங்கும் ஸ்ரீ ராஜராஜேசுவரி பட்டாபிஷேகம் மீண்டும் இந்த உலகத்தில் நிகழ்ந்த அற்புத தினம் அது! சாரதை தக்ஷிணேசுவரத்துக்கு வந்து தூய்மை காத்ததற்கு மண்டலாபிஷேகமாக அது நடந்தேறியது. நூறு வருஷங்களுக்கு முன் 1872ம் ஆண்டு ஜூன் ஐந்தாம் தேதியன்று அந்த உற்சவம் நிறைவேறியது.


வங்கம் முழுவதும் அன்று உற்சவம் கொண்டாடப்பட்டது. ஆம், ஜ்யேஷ்ட மாதத்து அமாவாசை இரவில் காளிகா தேவியைப் பலஹாரிணி என்று பெயரிட்டுப் பூஜிப்பது சாக்தர்களின் வழக்கம். ஜ்யேஷ்ட மாதம் என்பது தேவர்களின் இரவான தக்ஷிணாயனம் தொடங்குவதற்கு அண்மைக் காலம். அமாவாசையின் இருள் மனித குலம் அறிந்ததே. இருளின் கருமையே ஒருருவான அம்பிகைக்குத்தான் காளி என்று பெயர். இப்படி எல்லா விதத்திலும் அது இருளில் ஒளி காணும் திருநாள்.

உலகுக்குத் தெரியாத ஓர் இரவாக இருந்த சாரதாமணியை ஞானப் பிரகாசமாகக் கண்ட ராமகிருஷ்ணரும் அன்று பலஹாரிணி தேவிக்கு விசேஷமாகப் பூஜை செய்யத் திருவுளம் கொண்டார். கர்ம பலன்கள் அனைத்தையும் சம்ஹாரம் செய்யும் தேவிக்கே பலஹாரிணி என்று பெயர். பலம் என்பது பழத்தையும் குறிக்குமாதலால், அன்று கனி வகைகளை அம்பிகைக்கு ஏராளமாக நிவேதிப்பர். பலஹாரிணி பூஜைக்கான பழங்களும் மற்ற சாமக்கிரிகளும் சேமிக்குமாறு ஆலயச் சிப்பந்திகளுக்கு உத்தரவிட்டார் ராமகிருஷ்ணர்.

அதோடு இன்னொன்றும் சொன்னார், அவர்களை ஆச்சரியப்படுத்துமாறு. ''இத்தனை திரவியமும் பவதாரிணி சந்நிதியில் சேர்க்கிறதுக்கு இல்லை. இதையெல்லாம் இங்கே இந்த என் அறைக்கே கொண்டு வந்து ஒழுங்கு படுத்தி வையுங்கள்! இன்னிக்கு ராத்திரி ஹ்ருதயனே பவதாரிணியைப் பலஹாரிணியாப் பூஜிக்கட்டும். அதுக்குத் தனியாகத் திரவியங்கள் சேகரிச்சுக் கோங்கோ. இங்கே நான் வேறே பூஜை பண்ணப் போறேன்'' என்றார்.

அதென்ன வேறு பூஜை என்று அவர்களுக்குப் புரியவில்லை. 'அவரது அருமைப் பவதாரிணியை விட்டு, எந்த மூர்த்திக்கு, அல்லது எந்த யந்திரத்துக்கு இந்த அறையில் பூஜை நடத்தப் போகிறாராம்?' இது புரியாவிட்டாலும் விசித்திரமான 'பட்டாசாரியார்' செய்த அநேக விசித்திரங்களில் இதுவும் ஒன்று என்று கருதி அவர்கள் பூஜா வஸ்துக்களைக் கொண்டு வந்து அவரது அறையிலே நிரப்பினர்.

எப்போதும் இது போன்ற காரியங்களில் ராமகிருஷ்ணருக்கு உதவி புரியும்



ஹ்ருதயர் காளி கோயில் பூஜைக்காகப் போய்விட்டார். நினு என்கிற பூஜாரி ராமகிருஷ்ணர் செய்யவிருந்த பூஜைக்கான ஏற்பாடுகளைச் செய்தார்.

புஷ்பங்கள் கமகமத்தன—புனிதமாக.
தூபம் கமழ்ந்தது -- பாவனமாக.
தீபம் பொலிந்தது — பவித்திரமாக.

கண்ணுக்கும், நாசிக்கும், நாவுக்கும் மதுரமான பழங்களும், நிவேதனங்களும் தட்டுத் தட்டாக வைக்கப்பட்டிருந்தன.

அறையின் மையத்தில் தேவிக்கென பீடம் அமைத்து இழைக் கோலம் இட்ட மனை இடப்பட்டிருந்தது.

பீடத்தில் எந்த விக்கிரகத்தை அல்லது யந்திரத்தை ராமகிருஷ்ணர் வைத்துப் பூஜிக்கப் போகிறார் என்று நினுவுக்குப் புரியவில்லை. கேள்விக் குறியுடன் ராமகிருஷ்ணரை நோக்கினார்.

ராமகிருஷ்ணரின் முக மண்டலத்தில் எப்போதும் நிலவும் தெளிவு அன்று அதிகமாகப் பொலிந்தது.

''சாரதாம்மாளை இங்கே வரச் சொல்லிவிட்டு நீயும் பவதாரிணி பூஜைக்குப் போ. இந்தப் பக்கம் யாருமே வரவேண்டாம்'' என்றார் நினுவிடம்.

கணவர் தமதறையிலே நடத்தும் ரகசிய பூஜைக்கு அழைப்பைப் பெற்ற சாரதை, அதே சமயத்தில் வேறெங்கிருந்தோ ஏதோ ஓர் அழைப்பையும் பெற்றாள். எங்கிருந்தோவா? மிக மிக நெருக்கமான, **இங்கிருந்தே** வருகிற அழைப்பு அல்லவா அது? அழைக்கிறவரும், அழைக்கப்படுபவரும் பிரிந்து நிற்கிற அழைப்பு அல்ல. இரண்டும் ஒன்றாகும் இழைப்பு அல்லவா அது? சாரதை இனம் புரியா உன்னத உணர்வோடு பதியின் அறைக்குப் புறப்பட்டாள்.

சாதாரணமாக ஒரு பத்தினி தன் பதியின் அறைக்குச் செல்லும் உணர்வோடு அவள் என்றுமே சென்றதில்லை. ஆலயத்துக்குச் செல்கிற உணர்வோடு தான் செல்வாள். இன்றும் ஆலயத்துக்குச் செல்லும் உணர்வில்தான் சென்றாள். ஆனால் வழக்கமாக ஆலயத்தில் உறையும் தெய்வம் **அவர்** என்று கருதிச் செல்வாள்! இன்றோ... இதென்ன விசித்திர உணர்வு!

வெளியே விண் மீன்களையும் கோள்களையும் மணியாபரணங்களாக இழைத்துப் போட்டுக் கொண்டிருக்கும் ராத்ரி தேவி தனது தன்மையான ஆட்சியில் உலகை யெல்லாம் அணைத்துக் கொண்டிருந்தாள். அவளே சாரதா மணியாக அறைக்கு உள்ளே பிரவேசிப்பதைக் கண்டார் ராமகிருஷ்ணர்.

வாசல் நிலையிலே அப்படியே நின்றாள் சாரதை. வேறோர் உலகத்தின் வாசல் நிலை மெல்ல மெல்லத் திறந்தது. ராமகிருஷ்ணர் விதிவத்தாக மந்திரங்கள் கூறி சங்கல்பம் செய்து கொண்டார். ஆனால் 'பவஹாரிணிப் பிரீதிக்காக' என்று அவர் சங்கற்பம் செய்யவில்லை. 'ஸ்ரீ லலிதா மகாத்ரிபுர சுந்தரி, ஸ்ரீ ஷோடசீ ராஜராஜேசுவரியின் பிரீதிக்காக' என்றே சங்கற்பம் செய்து கொண்டார்.

மந்திரசாஸ்திரங்களின் முடிமணியான ஷோடசாக்ஷரீ என்ற பதினாறு அட்சரத் தொகைகளைக் கொண்ட மகாமந்திரத்தை மனனம் செய்வதன் மூலம் ஸ்ரீ ராஜராஜேசுவரியின் திவ்விய தரிசனம் சித்திக்கும். ஷோடசம் என்றால் பதினாறு என்று அர்த்தம். இதனால் அவளுக்கு ஷோடசி என்றும் ஒரு திருநாமம் உண்டு. என்றும் பதினாறாகப் பொலிபவள் என்றும் பொருள் கொள்வர். (ஷோடசி பூஜா சங்கற்பத்தைக் கூறும் இப்பகுதி 'அம்மா'வின் பதினாறாம் அத்தியாயமாக அமைந்திருப்பதை என்னென்பது !)

பூதசுத்தி, ஸ்தலசுத்தி ஆகியனவும் முறைப்படி செய்கிறார் ராமகிருஷ்ணர். எப்போதுமே சுத்தமான உடல் அவருடையது. அவர் இருப்பதால் எப்போதுமே அந்த ஸ்தலமும் சுத்தமானது தான். இருந்தாலும் சாஸ்திரப் பிரகாரம் இவற்றைச் செய்கிறார்.

இதோ கலச பூஜை முதலிய பூர்வாங்கங்கள் முடிந்து விட்டன.

இனி ஷோடசி மூர்த்திக்குப் பூஜை தொடங்க வேண்டும். எங்கே அந்த மூர்த்தி ? விக்கிரகமோ, யந்திரமோ ஏதுமே இங்கு காணோமே! எதை வைத்துப் பூஜிக்கப் போகிறார் ?

ராமகிருஷ்ணர் சாரதாமணியைப் பார்த்தார். அவளது பார்வையோடு தமது பார்வையை இழைத்தார். அந்தப் பார்வையைத் திருப்பி இழைக்கோலமிட்ட மனையைப் பார்த்தார்.

அந்தப்பார்வை சாரதையின் உட்புகுந்தது. உடனே அணு சரீர உணர்வு உதிர்ந்தது! கர்ம சரீரம் இவளுக்கு என்றுமே கிடையாது. இப்போது பரப்பிரம்மத்தின் கருணை என்கிற ஆதி காரண சரீரம் மட்டுமே தன்னைப் புலர்த்திக் கொள்ளலாயிற்று. திரிபுரசுந்தரியில் தோய்ந்தவளாக, தன்னை அறியாமலே கதவைத் தாழிட்டாள். தன்னையறியாமலே தாளிணைகளைப் பெயர்த்து நடந்தாள்.

ஸ்ரீராஜ ராஜேசுவரியை எழுந்தருளச் செய்வதற்காகப் போட்டிருந்த பீடத்திலே சற்றும் தயக்கமின்றி, துளக்கமின்றி, கம்பீரமாக அமர்ந்தாள் — அடக்கமும் நாணமுமே உருவான சாரதாமணி. (தொடரும்)



## செட்டிநாடு குமாரராஜா

# எம். ஏ. எம். முத்தைய செட்டியார் B.A.

1929 செப்டம்பர் 6உ — 1970 ஜனவரி 24உ

சென்னை ஷெரீப் (1957–58)
தென்னிந்திய வர்த்தக சங்கத் தலைவர் (1958–60)
பிரபல தொழிலதிபர் – வள்ளலார்

இரண்டு ஆண்டுகளுக்கு முன் 24-1-70, அன்று எங்களை விட்டுப் பிரிந்தும், எங்கள் நெஞ்சில் என்றும் நிலைத்திருக்கும் அப்பெருந்தகையோனின் அன்பு நினைவிற்கு அஞ்சலி செலுத்தும் வகையில் அன்னார் ஆற்றி வந்த நற்பணிகளைத் தொடர்ந்து மேற்கொள்வதென உறுதி பூணுகிறோம்.

**பின்கண்ட நிறுவனங்களின் நிர்வாகத்தினரும் ஊழியர்களும் :**

செட்டிநாடு சிமெண்ட் கார்ப்பரேஷன் லிமிடெட், சென்னை & குமாரராஜா முத்தைய நகர், கரூர் ● செட்டிநாடு கார்ப்பரேஷன் பிரைவேட் லிமிடெட், சென்னை & சிலோன் ● மதுரை சௌத் இந்தியா கார்ப்பரேஷன் பிரைவேட் லிமிடெட், சென்னை, மதுரை, பெங்களூர், விசாகப்பட்டினம், செகந்திராபாத், விஜயவாடா மற்றும் இதர கிளைகள் ● சௌத் இந்தியா கார்ப்பரேஷன் பிரைவேட் லிமிடெட், கொச்சி & புதுக்கோட்டை ● லோட்டஸ் மில்ஸ் லிமிடெட், சுந்தரபுரம், கோவை. சௌத் இந்தியா ஸ்டரக்சரல் கார்ப்பரேஷன் லிமிடெட், சென்னை & கிளைகள். ஸ்ரீ கருணாம்பிகை ஜின்னிங் பேக்டரி, அவிநாசி ● துபாரி குரூப் எஸ்டேட்ஸ், சேஷகிரி எஸ்டேட் & மேபிளவர் எஸ்டேட், குடகு ● குண்டள்ளி எஸ்டேட் & தொட்லகுண்டா எஸ்டேட், மைசூர்.

# நாவல் இலக்கியத்தின் நூற்றாண்டு

முதல் தமிழ் நாவல் மாயூரம் வேதநாயகம் பிள்ளை அவர்கள் எழுதிய 'பிரதாப முதலியார் சரித்திரம்'. அது சமூக வாழ்க்கையை அடிப்படையாகக் கொண்டதுதான் என்றாலும், அதை முழுமையான உருவம் பெற்ற நாவலாகக் கொள்ள முடியாது என்பது பல அறிஞர்களின் கருத்து ; காரணம், நகைச்சுவை மிகுந்த பல சம்பவங்களின் தொகுப்பாக அந்நூல் இருப்பதுதான்.

அடுத்து வந்த ''கமலாம்பாள் சரித்திரம்'' பி. ஆர். ராஜம் அய்யர் எழுதியது. அது பாத்திரப் படைப்பிலும், கதையம்சத்திலும் சிறந்து விளங்குவதனால் அந்த நாளில் இலக்கிய உலகில் தனி இடம் பெற்றுவிட்டது. மேலும், அது தற்காலத்துக் கடும் 'கிரிடிக்கு'களால்கூடச் சிறந்த நாவலாக ஏற்றுக் கொள்ளப்பட்டிருக்கிறது. அதன் முக்கிய பாத்திரங்களான கமலாம்பாளும், தமிழ்ப் பண்டிதர் ஆடுசாபட்டி அம்மையப்பபிள்ளையும் சாகாவரம் பெற்றுச் சிரஞ்சீவிப் பாத்திரங்களாக இன்றும் விளங்குகின்றனர்.

ராஜம் அய்யர் அவர்கள் ''கமலாம்பாள் சரித்திர''த்தை எழுதியபோது அவருக்கு வயது இருபத்தொன்று. இன்றைக்கு இருப்பதுபோல் லட்சக் கணக்கில் தமிழ் வாசகர்கள் இல்லாத காலம். தமிழுக்கு இத்துணை ஏற்றமும், சீரும், சிறப்பும் ஏற்படாத காலம்; அந்தக் காலத்தில் அந்நாவலுக்கு நல்ல வரவேற்பு இருந்ததற்குக் காரணம் அது ஓர் இணையற்ற கலைப் படைப்பாகத் திகழ்ந்ததுதான் ; மேலும் அய்யர் அவர்கள் இன்றைய நடப்பியல் படைப்புக்களில் காணப்படும் பல உத்திகளைத் தம் நாவலில் விசேஷமாகக் கையாண்டிருக்கிறார்; தம்மைச் சுற்றியிருந்த மக்களின் சூழ்நிலையிலிருந்தே தம் நாவலைப் படைத்திருக்கிறார்; மனிதர்களின் குணநிசயங்களையும், மனித உள்ளங்களின் விசித்திரமான இயக்கங்களையும் அதியற்புதமாக வெளிப்படுத்தியிருக்கிறார்.

உலகில் யதார்த்தமான அன்பு ஒன்றுதான் சாசுவதமானது. மனித உள்ளங்களை ஒன்று சேர்ப்பதே அந்த அன்பு ஒன்றுதான். ஏன், மனிதனை மனிதனாக்குவதே அன்புதான். ஆனால், அந்த அன்பை விதியும், மனிதனும் ஓயாமல் வேட்டையாடிக் கொண்டிருப்பார்கள். இது உலகில் எப்பொழுதும் நிகழ்ந்த வண்ணமாயிருக்கிறது — இதுதான் கமலாம்பாள் சரித்திரத்தின் அடிப்படைக் கருத்து.

''கமலாம்பாள் சரித்திர''த்துக்கு இன்னொரு தனிச் சிறப்பு உண்டு. 1893ம் ஆண்டில், ''விவேகசிந்தாமணி'' என்ற தமிழ் மாதப் பத்திரிகையில் தொடர்கதையாக வெளிவந்தது! ஆகவே அதுதான் தமிழில் முதல் தொடர்கதை !

மதுரையில் உயர்நிலைப் பள்ளிப் படிப்பு வரையில் படித்த அய்யர் அவர்கள் சென்னைக்கு வந்து கிறிஸ்தவக் கல்லூரியில் படித்து பி. ஏ., பட்டம் பெற்று, சட்டக் கல்லூரியில் சேர்ந்தார். வழக்கறிஞராக முடியாமல் அவருக்கு ஏற்பட்ட தோல்விதான் தமிழ் இலக்கியத்துக்குப் பெரும் பேறாயிற்று: நாவல் பிறந்தது!

அய்யர் அவர்கள் காலத்திலேயே, அதாவது 1892ம் ஆண்டில் பிறந்த மாதவய்யா ''பத்மாவதி சரித்திரம்'' என்ற நாவலை எழுதி வெளியிட்டார். சம காலத்து ஆசிரியர்களால் எழுதப்பட்ட இந்த இரண்டு நாவல்களும் இலக்கிய உலகில் தனி இடம் பெற்றுவிட்டன. ஏறத்தாழ அதே காலத்தில் தோன்றிய இன்னொரு தமிழ் நாவலையும் குறிப்பிட வேண்டும். அதுதான் ''ஜடாவல்லவர்''. வரகவி திரு அ. சுப்பிரமணிய பாரதி எழுதியது. மேற்கூறிய இம்மூன்று நாவல்களும் ஆங்கில வாடையே இல்லாது, அசல் தமிழ் நாட்டுச் சூழ்நிலைகளையும், பண்பாடுகளையும் அடிப்படையாகக் கொண்டவை என்ற சிறப்பையும் பூண்டிருந்தன.



''கமலாம்பாள் சரித்திர''த்தை முடித்த பிறகு ராஜம் அய்யர் ஆன்மிக விஷயங்களில் தீவிரமாக ஈடுபடலானார். கற்பனைக் கருவூலமாக விளங்கி முற்றிலும் புதிய கற்பனையில் நாவல் எழுதிய அய்யரவர்கள், முதிர்ந்த வேதாந்தியாகவும் விளங்கினார். அக்காலத்தில் சென்னையில் நடைபெற்றுவந்த ''பிரும்மவாதின்'' என்ற ஆங்கில மாதப் பத்திரிகையில், தம் வேதாந்தக் கருத்துக்களை, தெள்ளத் தெளிந்த ஆங்கி[illegible]லில் விளக்கி எழுதலானார்.

பாரதத்தின் ஞான தீபமாக விளங்கிய சுவாமி விவேகானந்தர் நம் நாட்டு இளைஞர்களுக்குப் பயன்படும்படியாக ஆன்ம ஞானத்தின் அடிப்படையில் ஒரு பத்திரிகையை ஆங்கிலத்தில் நடத்த வேண்டும் என்று கருதினார். அய்யரின் கட்டுரைகளைப் படித்ததும், அவரையே தம் நோக்கத்துக்குப் பயன்படுத்திக் கொள்ளலாம் என்ற எண்ணம் அவருக்கு எழுந்தது. அந்த எண்ணம் 1896ம் ஆண்டு ''பிரபுத்த பாரத'' என்ற ஆங்கில மாதப் பத்திரிகையாக உருவெடுத்தது. ராஜம் அய்யரே அந்தப் பத்திரிகைக்கு ஆசிரியராக நியமிக்கப்பட்டார்.

''பிரபுத்த பாரத'' பத்திரிகையின் முதல் இதழ் வெளிவந்த போது சுவாமி விவேகானந்தர் இங்கிலாந்தில் இருந்தார். அவருக்கு அனுப்பி வைக்கப்பட்ட ''பிரபுத்த பாரத''வின் முதல் இதழைப் பார்த்துப் பரவசம் அடைந்த சுவாமிஜி தமது பாராட்டுதலை அய்யரவர்களுக்கு ஒரு கடிதத்தின் மூலம் தெரிவித்திருந்தார்.

இந்தப் பத்திரிகையின் ஆசிரியர் பதவியை ஏற்றபிறகு இரண்டு ஆண்டுக் காலத்தில், ராஜம் அய்யர் தமிழில் எழுதுவதை விட்டு விட்டு ஆங்கிலத்தில் நிறையத் தத்துவக் கட்டுரைகள் எழுதலானார். தத்துவ அடிப்படையைக் கொண்ட ''வாசுதேவ சாஸ்திரி'' என்ற ஆங்கிலத் தொடர்கதையை எழுதினார்; ஆனால் அது முற்றுப் பெறவில்லை. வேதாந்தக் கருத்துக்களை விளக்குவதற்கு ஏற்ற பாத்திரங்களை நவினமான நகைச்சுவையோடு கையாண்டு இந்தக் கதையில் வெற்றி கண்டார். ''பிரபுத்த பாரத'' பத்திரிகையை ஒவ்வோர் இதழிலும், ராஜம் அய்யரே பல புனை பெயர்களில் எழுதி நிரப்பிக் கொண்டிருந்தார் என்ற உண்மையைப் பத்திரிகையின் பிரசுரகர்த்தர்கள், அய்யரவர்கள் காலமானபோது குறிப்பிட்டிருந்தார்கள்.

சுமார் இரண்டாண்டு காலம் ''பிரபுத்த பாரத'' பத்திரிகையில் அய்யரவர்கள் எழுதிய கட்டுரைகளும், கதைகளும் பின்னால் ''Rambles in Vedanda'' என்ற தலைப்பில் 900 பக்கங்கள் கொண்ட நூலாகத் தொகுக்கப்பட்டு வெளிவந்து நல்ல வரவேற்பைப் பெற்றது.

இளம் வயதிலேயே அய்யரின் மனம் பாரமார்த்திகத் துறையில் ஈடுபடலாயிற்று. பொங்கி வளர்ந்த தத்துவ வேட்கை அவரது இல்லற வேட்கையைத் தணித்துவிட்டது. ஒன்றிலும் ஒட்டாமல், மனைவியிடம் பேசுவதைக் கூட நிறுத்திவிட்டு, சதா தியானமும், மோனமுமாக இருந்த அய்யரவர்கள் தம் இருபத்தாறுவது வயதில், 1898ம் ஆண்டு, மே மாதம், 13ந் தேதி இயற்கை எய்திவிட்டார். ராஜம் அய்யர் காலமானதும், ''பிரபுத்த பாரத'' நிறுத்தப்பட்டுவிட்டது.

அய்யர் அவர்கள் வாழ்க்கையில் நிகழ்ந்த ஒரு சோகம் நிறைந்த, விந்தையான நிகழ்ச்சியை அவசியம் குறிப்பிட்டாக வேண்டும்.

''பிரபுத்த பாரத'' பத்திரிகையில், ''வேதாந்தம்'' என்றும், ''ராஜாதிராஜன்'' என்றும் ராஜம் அய்யர் எழுதிய இரண்டு கட்டுரைகள் மிகவும் பிரசித்தி பெற்றவை. அக்கால பிரிட்டிஷ் அரசு அக்கட்டுரைகளுக்காக அவர் மீது ராஜத் துவேஷக் குற்றம் சாட்டி வாரண்டு அனுப்பியது. மேற்படி கட்டுரைகளில் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தைப் பரிகசித்து எழுதப்பட்டிருந்தது.

ராஜம் அய்யர் வீட்டுக்குப் போலீஸார் வந்தனர். ஆனால் வாரண்டை 'சாதரா' செய்ய முடியாமல் போலீஸார் தோல்வியடைந்தனர். ராஜம் அய்யர் இல்லை...... இரண்டு நாட்களுக்கு முன்பே காலமாகிவிட்டிருந்தார்!

தற்போது அய்யரவர்களின் பிறந்தநாள் நூற்றாண்டு 1972 ஜனவரி 25ந் தேதி வருகிறது. இதற்காக ராஜம் அய்யர் நூற்றாண்டு விழாக் குழுவினர் திட்டம் ஒன்றைத் தீட்டியிருக்கின்றனர். 21-1-72 சென்னை நகரிலும், அய்யர் பிறந்த ஊராகிய வத்தலகுண்டிலும் கருத்தரங்குகள், சொற்பொழிவுகள் நடத்த ஏற்பாடாகியிருக்கின்றன. ஒரு சிறப்பு மலர் வெளியிடவும், நினைவுச் சின்னம் நிறுவவும் உத்தேசிக்கப்பட்டிருக்கிறது. தமிழர் வாழும் டில்லி, பம்பாய், கல்கத்தா போன்ற நகரங்களிலும் இவ்விழாக் கொண்டாட ஏற்பாடுகள் செய்திருக்கின்றனர். ராஜம் அய்யரின் நூல்களை மறு பிரசுரம் செய்வது, மொழிபெயர்ப்பது ஆகிய முயற்சிகளும் திட்டத்தில் இடம் பெற்றிருக்கின்றன.

ராஜம் அய்யர் நினைவைப் போற்ற நாம் கடமைப்பட்டிருக்கிறோம். அது தமிழ் வளர்ச்சிக்குச் செய்த சேவையாகும். மேலே கூறிய நல்ல காரியங்களுக்குத் தமிழ்ப் பெருமக்கள் தங்களால் இயன்றதை மனமுவந்து அளித்து ராஜம் அய்யர் நூற்றாண்டு விழாவைப் பரிமளிக்கச் செய்ய வேண்டும் என்று விழாக் கமிட்டியினர் வேண்டுகின்றனர். நிதிஅனுப்ப வேண்டிய முகவரி: **சோ. சிவபாதசுந்தரம், பொருளாளர், பி. ஆர். ராஜம் அய்யர் நூற்றாண்டு விழாக் குழு, அறை எண் 50, 193, மவுண்ட்ரோடு, சென்னை - 2**

**— ஸோமாஸ்**

## அட்டைப்பட விளக்கம்

வாசல் திண்ணையில் உட்கார்ந்திருந்த ஸ்ரீநிவாசனுக்கும் சமையலுள்ளில் இருக்கும் தன் மனைவி லக்ஷ்மியுடன் எப்படியாவது பேச வேண்டுமென்று ஆசை; லக்ஷ்மிக்கும் தன் கணவனுடன் பேசவேண்டுமென்று ஆசை. பெரியவர்களும் சிறியவர்களுமாக வீடு முழுவதும் உறவினர்கள் நிரம்பி வழிகிறார்கள்! யாருக்காவது, 'இளந்தம்பதியர் பேசத் துடிக்கிறார்களே! அவர்கள் பேசட்டும். நாம் எங்கேயாவது, காலாறச் சற்று வெளியே போய்த் தொலைவோம்!' என்று தோன்ற வேண்டாமோ ஊஹூம்! அது தானே கிடையாது!

தெருவில் ஒரு பிச்சைக்காரன் வந்து 'அம்மா!' என்று குரல் கொடுத்தான். கையில் சாதத்துடன் லக்ஷ்மி வாசலுக்கு வந்தாள். ஸ்ரீநிவாசன் இது தான் சமயம் என்று அவளுடன் பேசத் துடித்தபோது லக்ஷ்மியின் ஆவல் முந்திக் கொண்டது. ஆசை ஒரு புறமும், வெட்கம் ஒருபுறமும் அலைக்கழிக்க கணவனுக்கு மட்டும் கேட்கும்படி மெல்ல, ''சாப்பிட வாருங்களேன்!'' என்று தேன் குரலில் மிழற்றினாள். ஸ்ரீநிவாசன் ஆனந்தபரவசனாகி மெய்சிலிர்த்துத் தன்னை மறந்தான்.

'இந்தக் காலத்தில் இவ்வளவு வெட்கப்படுகிற பெண் -- மாப்பிள்ளை ஏது' என்று கேட்கிறீர்களா? நியாயம்தான். இந்நிகழ்ச்சி முதல் தமிழ் நாவலான ''கமலாம்பாள் சரித்திர''த்தில்தான் வருகிறது. மேற்படி நிகழ்ச்சியை ஓவியர் விஜயாவின் கைவண்ணமாக அட்டைப்படத்தில் காண்கிறோம்.






FDSAG1659TM



# பொன்னியின் செல்வன்

அமரர் கல்கி

### அத்தியாயம் எண்பத்தைந்து

## சிற்பத்தின் உட்பொருள்

சேந்தன் அமுதனாகிய மதுராந்தகத் தேவர், தம்மைத் திருவயிறு சுமந்து பெற்ற அன்னை செம்பியன்மா தேவியைப் பார்த்து, "அம்மா! இந்த உலகில் யுத்தப் பைத்தியம் பிடித்து அலைகிறவர்கள் எத்தனையோ பேர் இருக்கிறார்கள். போர் செய்யாத நாள் எல்லாம் வீண் போன வெறும் நாளாகவே அவர்களுக்குத் தோன்றுகிறது. அந்தக் கூட்ட தைச் சேர்ந்தவர்தான் என் நண்பர் வ நியத்தேவரும், என் சகோதரர் பொன்னியின் செல்வரும். தாங்களோ, இறைவனைப் பற்றிப் பேசாத நாளெல்லாம் பிறவாத நாள் என்று கருதுகிறவர் ஆயிற்றே? தாங்களும் போர்த் தொழிலை ஆதரித்துப் பேசுவது மிகமிக ஆச்சரியமாயிருக்கிறது. இதன் காரணத்தை எங்களுக்கு விளக்கமாய்ச் சொல்ல வேண்டும்!" என்றார்.

அப்போது செம்பியன்மா தேவி "என் அருமை மகனே! வேறு யார் போர்த் தொழிலை இகழ்ந்து பேசினாலும் நீ பேசக் கூடாது; பூங்குழலியும் பேசலாகாது. வல்லத்து அரசர் போர்த் தொழிலிலும் வல்லவராயிருப்பதினாலே அல்லவா நீ இன்று உயிரோடிருந்து இறைவனைத் துதிக்கும் பாடல்களை என் உள்ளமும் உடலும் உருகப் பாடுகிறாய்?" என்றார்.

"தாயே! நான் தங்கள் அருமைப் புதல்வரின் உயிரைக் காப்பாற்றியது இருக்கட்டும். அவரும் அவரைக் கரம் பிடித்த தங்கள் மருமகளும் என் உயிரைக் காப்பாற்றியதை நான் மறக்க முடியாது. பூங்குழலி அம்மையாரின் போர்க் குணம் அல்லவோ நான் இன்று உயிரோடிருப்பதற்குக் காரணமாயிருக்கிறது?" என்றான் வந்தியத்தேவன்.

"பரமேசுவரனும் துர்க்கா பரமேசுவரியும் நம் எல்லோரையும் காப்பாற்றுகிறார்கள்! அவர்களுடைய கருணை இல்லாவிட்டால், நாம் ஒருவரையொருவர் காப்பாற்றுவது ஏது?" என்றார் மதுராந்தகத் தேவர்.

"குழந்தாய்! கருணையே வடிவமான சிவபெருமானும் பல முறை போர் செய்ய நேர்ந்தது. அன்பும் அருளும் சாந்தமும் உருக் கொண்ட ஜகன்மாதாவான துர்க்கா பரமேசுவரியும் யுத்தம் செய்வது அவசியமாயிற்று. இந்தப் புண்ணிய ஸ்தலத்திலுள்ள ஆலயத்தில் அம்பிகை அறம் வளர்த்த நாயகியாக வீற்றிருக்கிறாள். ஆயினும், ஆலயத்தின்



திருச்சுற்று வீதியில் மகிஷாசுர மர்த்தனியாகவும் தரிசனம் தருகிறாள். நீ கவனித்தாயல்லவா?'' என்றார்.

''ஆம், அன்னையே! கவனித்து வியந்தேன். அண்ட சராசரங்களை ஈன்றெடுத்துக் காக்கும் அன்னை ஓர் எருமை மாட்டின் தலை மீது எதற்காக நின்று காட்சி அளிக்கிறாள் என்று எண்ணி அதிசயித்தேன்!'' என்றார் மதுராந்தகர்.

''ஆம், ஆம்! இந்த ஆலயத்திலுள்ள தேவி, மகிஷாசுரனை வதம் செய்து முடித்து விட்டாள். அதனால் எருமையின் தலையில் நிற்கும் தேவியின் திருமுகத்தில் அன்பும் அருளும் குடிகொண்டிருக்கக் காண்கிறோம். மாமல்லபுரத்துக் குகைச் சிற்பங்களிலே தேவி மகிஷாசுரனுடன் போரிடுவது போல் அமைந்த சிற்பம் ஒன்று இருக்கிறது. அங்கே துர்க்கா பரமேசுவரி வீர பயங்கர ரண பத்திர காளியாகத் தரிசனம் தருகிறாள். சகல லோக மாதாவாகிய துர்க்கா பரமேசுவரி கேவலம் ஓர் எருமை மாட்டுடன் ஏன் சண்டை போட வேண்டும், அதற்கு இவ்வளவு ஆர்ப்பாட்டம் வேண்டுமா என்று வெளிப்படையாகப் பார்ப்பவர்களுக்குத் தோன்றக் கூடும். என் அருமைக் குமாரா! நம் பெரியோர்களின் உள்ளத்தில் உதயமான இத்தகைய நிகழ்ச்சிகளுக்கெல்லாம் உட்பொருள்கள் இருக்கின்றன. அவற்றை அறிந்து கொள்வதற்குத் தக்க பரிபக்குவம் வேண்டும்; அறிந்துகொள்ள வேண்டுமென்னும் சிரத்தையும் வேண்டும்!''

''தேவி! எங்களுக்கெல்லாம் பரிபக்குவம் இருக்கிறதோ, என்னமோ, தெரியாது! ஆனால் சிரத்தை இருக்கிறது. தாங்கள் திருவாய் மலர்ந்தருளும் வார்த்தை ஒவ்வொன்றையும் சிரத்தை

யுடன் கேட்டுக் கொண்டிருக்கிறோம்! ஏன்? நமது வல்லத்து அரசருடைய ஓயாமற் சலிக்கும் கண்கள் கூடவல்லவா தங்களையே பார்த்துக் கொண்டிருக்கின்றன?'' என்றார் அருள்மொழி.

இந்த வார்த்தைகள் அங்கே சிறிது கலகலப்பை உண்டாக்கின. வந்தியத்தேவன் அடிக்கடி இளையபிராட்டியின் திரு முகத்தை நோக்குவதையே அருள்மொழிவர்மர் குறிப்பிடுகிறார் என்று அறிந்து கொண்ட பெண்மணிகள் இலேசாக நகைத்தார்கள்.

செம்பியன்மா தேவி கூறினார்: ''சிரத்தையுடன் கேட்பதானால் சொல்கிறேன், கேளுங்கள். நமது புராண இதிகாசங்களில் தேவாசுர யுத்தங்களைப் பற்றி நிரம்பக் கூறியிருக்கிறார்கள். இவ்வுலகில் திருமால் அவதாரம் எடுத்து ராட்சதர்களோடு சண்டையிட்டது பற்றியும் சொல்லியிருக்கிறார்கள். இறைவன் உலகத்தைப் படைத்த காலத்திலிருந்து தேவ சக்திகளும் அசுர சக்திகளும் போரிட்டு வருகின்றன. அசுர சக்திகளை இறைவன் ஏன் படைத்தார் என்று கேட்டால், அதற்குச் சிற்றறிவு படைத்த நம்மால் விடை சொல்ல முடியாது. இறைவனுடைய திருவிளையாடல் அது என்றுதான் கூற முடியும். தெய்வ சக்திகளும் அசுர சக்திகளும் ஓயாமல் போராடி வருகின்றன என்பது மட்டும் நிச்சயம். சில சமயம் அசுர சக்திகளின் கை மேலோங்குவதுபோல் காணப்படுகின்றன. அவையே உலகை என்றென்றைக்கும் ஆளும் என்று தோன்றுகின்றது. சூரபத்மனும், இரணியனும், இராவணனும் எத்தனை பல்லாயிரம் ஆண்டுகள் ஆட்சி புரிந்தார்கள்! ஆனாலும் அவர்களுக்கெல்லாம் ஒரு நொடிப் பொழுதில் முடிவு வந்துவிட்டது!''

''ஆம், ஆம்! தேவர்களை யெல்லாம் அடிபணிந்து குற்றேவல் புரிய வைத்த தசகண்ட இராவணனுக்கு முடிவு வந்தபோது, இரண்டு மனிதர்களும் ஒரு சில வானரங்களும் சேர்ந்து அவனைக் குலத்தோடு நாசமாக்கிவிட வில்லையா?'' என்றார் மதுராந்தகத் தேவர்.

''ஆகையால் அசுரசக்திகள் மேலோங்குவதைக் கண்டு மாந்தர்கள் மனச் சோர்வு அடைந்துவிடக் கூடாது. தெய்வ சக்திகள் முடிவில் வெற்றிகொள்ளும் என்று நம்பித் தர்மத்திலும் சத்தியத்திலும் நின்று போராட வேண்டும். அப்படிப் போராடுகிறவர்களுக்குத் தெய்வமும் நிச்சயம் துணை செய்யும்!''

''அன்னையே! மகிஷாசுரனைப் பற்றிச் சொல்ல வந்தீர்கள்!'' என்று பூங்குழலி ஞாபகப்படுத்தினாள்.

''ஆம்; நல்லவேளையாக ஞாபகப் படுத்தினாய், மகளே! அசுர சக்திகள் இரண்டு வகையானவை. ஒன்று, மௌடீக அசுர சக்திகள். இன்னொன்று, மதி நுட்பம் வாய்ந்த அசுர சக்திகள். மௌடீக அசுர சக்தியையே மகிஷாசுரனாக நமது முன்னோர்கள் உருவகப் படுத்தினார்கள். காட்டெருமைக்கு வெறி வந்து தெறி கெட்டு ஓடுவதை நீங்கள் பார்த்திருக்கிறீர்களா? அப்போது அந்த எருமை யானையைவிட அதிக பலம் பெற்று விடுகிறது. தன் எதிர்ப்பட்ட பிராணிகள் எல்லாவற்றையும் சின்னாபின்னப்படுத்திவிடுகிறது. மௌடீகமும் வெறி கொண்ட காட்டு எருமையைப் போல் வலிமை கொண்டது. மௌடீகம் சில சமயம் சிங்காதனத்தில் அமர்ந்து ஆட்சி நடத்தத் தொடங்கி விடுகிறது. இதைத்தான் மகிஷாசுரனுடைய ஆட்சி என்று நம் முன்னோர்கள் சொன்னார்கள். மகிஷாசுரன் தேவலோகச் சிங்காதனத்தில் அமர்ந்து ஆட்சி செலுத்தத் தொடங்கியபோது, மூன்று உலகங்களிலும் அல்லோல கல்லோலமுண்டாயிற்று. அறிவு வேண்டாம், அறிவு நூல்கள் வேண்டாம், அறிவுக் கலைகள் வேண்டாம், இசை வேண்டாம், சிற்பம், சித்திரம், கோயில், கோபுரம் ஒன்றும் வேண்டாம், — எல்லாவற்றையும் அழித்துப் போடுங்கள் என்று மகிஷாசுரன் கட்டளையிட்டான். தேவர்கள் முனிவர்கள் மனிதர்கள் எல்லாரும் நடுநடுங்கினார்கள். அவர்களில் பலர் மகிஷாசுரனுக்கு அடிபணிந்து அவனுடைய ஆட்சியை ஒப்புக் கொண்டார்கள். இதனால் மகிஷாசுரனுடைய அகந்தையும் மூர்க்கத்தனமும் அதிகமாயின. மௌடீகத்தோடு அகந்தையும் மூர்க்கத்தனமும் சேர்ந்துவிட்டால் கேட்க வேண்டுமா? மகிஷாசுரனுடைய கொடுமையைப் பொறுக்க முடியாமல் மூன்று உலகங்களிலும் மக்கள் ஓலமிட்டார்கள். அசுரர்களுங்கூடச் சேர்ந்து அலறினார்கள். துர்க்கா பரமேசுவரி அப்போது கண் திறந்தாள். மாகாளி வடிவங் கொண்டு வந்து மகிஷாசுரனை வதஞ் செய்தாள். மௌடீக சக்தியைத் தெய்விக சக்தி வென்றது. மூன்று உலகங்களும் மௌடீக அடிமைத் தளையிலிருந்து விடுதலை பெற்றன. தேவர்களும் முனிவர்களும் அசுரர்களுங் கூடப் பெருமூச்சுவிட்டுத் துர்க்கா பரமேசுவரியை வாழ்த்தி வணங்கினார்கள். குழந்தைகளே! இப்போதுங்கூட இவ்வுலகில் மௌடீக அசுர சக்திகள் இல்

லாமல் போகவில்லை. இந்தப் புண்ணிய பரத கண்டத்தின் வடமேற்கு திசைக்கு அப்பால் மௌடீக அசுர சக்திகள் சில தோன்றியிருப்பதாகச் சொல்லுகிறார்கள். அவர்கள் மூர்க்காவேசத்துடன் போர் புரிந்து நகரங்களைச் சூறையாடிக் குற்றமற்ற மக்களைக் கொன்று கோயில்களையும், விக்கிரகங்களையும் உடைத்துத் தகர்த்து நாசமாக்குகிறார்களாம். அவர்களைத் தடுத்து நிறுத்தக் கூடிய பெரிய சக்கரவர்த்திகள் இப்போது வடநாட்டில் யாரும் இல்லையாம்! இந்தத் தெய்வத் தமிழ் நாட்டுக்கு அத்தகைய கதி நேராதிருக்கட்டும். அப்படி நேர்வதாயிருந்தால், வீர மறக் குலத்தில் பிறந்த நீங்கள் அந்த அசுர சக்திகளுடன் போராடச் சித்தமாயிருக்க வேண்டுமல்லவா ?''

''கட்டாயம் சித்தமா யிருப்போம், தாயே! மற்றொரு வகை அசுர சக்திகளைப் பற்றியும் சொல்லுங்கள்!'' என்று வந்தியத்தேவன் கேட்டான்.

''மற்றொரு வகை அசுரர்கள் அறிவுக் கூர்மையுள்ளவர்கள். அந்த அறிவைக் கெட்ட காரியங்களில் பயன்படுத்துகிறவர்கள். அவர்கள் தவம் செய்து வரம் பெறுவார்கள். அதையும் துஷ்ட காரியங்களுக்கே பயன் படுத்துவார்கள். திரிபுரர்கள் என்ன செய்தார்கள்? ஒவ்வொருவரும் ஓர் உலகத்தையே உண்டாக்கிக் கொண்டார்கள். வானத்தில் பறந்து சென்று நாடு நகரங்களின் மீது இறங்கி நிர்மூலமாக்கினார்கள். சூரபத்மன் எத்தனை தடவை அவனுடைய தலையைக் கொய்தாலும் புதிய தலை அடையும் ஆற்றலைப் பெற்றிருந்தான். இராவணன், இந்திரஜித்து முதலிய ராட்சதர்கள் வானத்தில் மேகங்களில் மறைந்து கொண்டு கீழே உள்ளவர்கள் மீது அஸ்திரங்களைப் பொழியும் சக்தி பெற்றிருந்தார்கள். இத்தகைய சூழ்ச்சித் திறமை வாய்ந்த அசுர சக்திகளையே 'முயலகன்' என்னும் அசுரனாக நம் முன்னோர்கள் உருவகப்படுத்தி யிருக்கிறார்கள். இறைவன் ஆனந்த நடனம் புரியும்போதெல்லாம் தம்முடைய காலடியில் அடக்கி வைத்திருக்கும் முயலகன் மீதும் சிறிது ஞாபகம் வைத்துக் கொள்கிறார். கொஞ்சம் கவனக் குறைவா யிருந்தால் முயலகன் கிளம்பி விடுவான். சிருஷ்டியின் ஆரம்ப காலத்தில் இருந்து அசுர சக்திகளுடன் தெய்விக சக்திகள் போராடி வருகின்றன என்பதையே முயலகன் நமக்குத் தெரியப்படுத்துகிறான் ! ஆகையால், என் அருமை மக்களே! யுத்தமே கூடாது என்று நாம் எப்படிச் சொல்லிவிட முடியும்!''

''தேவி! இது வரையில் எங்களுக்கு விளங்காமல் இருந்த பல விஷயங்களை இன்று தெரிந்து கொண்டோம். எங்களுக்கு என்ன கட்டளை இடுகிறீர்கள் ?'' என்று பொன்னியின் செல்வர் கேட்டார்.

''குழந்தைகளே! நீங்கள் எப்போதும் தெய்விக சக்திகளின் பக்கம் நின்று போராடுங்கள் என்று மட்டுமே நான் சொல்ல முடியும். உங்களுக்குக் கட்டளையிட முடியாது. உங்களுடைய அந்தராத்மாதான் உங்களுக்குக் கட்டளையிட முடியும். அந்தக் கட்டளையைக் கேட்டு நடவுங்கள். சற்று முன்னால், இந்தச் செந்தமிழ் நாட்டைச் சுற்றியுள்ள கடல்களில் கப்பல் கொள்ளைக்காரர்கள் மிகுந்து விட்டதாகச் சொன்னீர்கள். அதனால் தமிழ் நாட்டு வர்த்தகர்கள் பெரிதும் கஷ்ட நஷ்டங்களை அடைவதாகவும் கூறினீர்கள். அந்தக் கொள்ளைக்காரர்களை ஒழித்து நம் நாட்டு வர்த்தகர்களுக்குப் பாதுகாப்பு அளிப்பது இராஜகுலத்தில் பிறந்த உங்கள் தர்மம். இன்று கடல் கொள்ளைக்காரர்களுக்கு இடங் கொடுத்து விட்டால், நாளைக்கு அவர்கள் இந்தத் தெய்வத் தமிழ் நாட்டுக்குள்ளேயும் பிரவேசித்துவிடமாட்டார்களா? இன்று கைலாசவாசியாகிச் சிவபெருமானுடைய சந்நிதியில் சிவகணங்களுடன் வீற்றிருக்கும் என் கணவர் ஜீவிய வந்தரா யிருந்தால், அவரும் உங்களுக்கு இதைத்தான் சொல்லியிருப்பார்!''

''தேவி! தங்கள் திரு உள்ளத்தை அறிந்து கொண்டோம். அதன்படியே நடந்து கொள்வோம்!'' என்றார் இளவரசர் அருள்மொழிவர்மர்.

''பொன்னியின் செல்வ ! நீ என்னுடைய விருப்பத்தை மதித்து நடப்பதாயிருந்தால், இன்னும் ஒன்றும் இப்பொழுது சொல்ல விரும்புகிறேன்!'' என்றார் அந்தப் பெரு மூதாட்டியார்.

''தேவி! தங்கள் விருப்பத்துக்கு மாறாக இதுவரையில் நான் நடந்ததாக நினைவில்லையே? அப்படி ஏதேனும் செய்திருந்தால் மன்னியுங்கள்!''

''குழந்தாய்! இதற்கு முன்னால் நீ நடந்துகொண்டதெல்லாம் வேறு; இனிமேல் நடக்கப் போவது வேறு. இது வரையில் நீ அரண்மனையில் செல்லக் குழந்தையாக இருந்தாய். உன் விருப்பம் போல் நாங்கள் நடந்தோம்; எங்கள் விருப்பத்தை நீயும் நிறைவேற்றி வைத்தாய். இனி, நீ இந்த மாநிலத்தை ஆளும் மன்னர் மன்னன் ஆகப் போகிறாய். முடிசூட்டு விழா நடந்த பிறகு, உன் விருப்பத்தின்படிதான் நாங்கள் எல்லாரும் நடந்துகொள்ள வேண்டும்.''

''தாயே! அப்படிச் சொல்ல வேண்டாம். இனியும் நான் உங்கள் செல்லக் குழந்தையாகவே இருந்து வருவேன். உங்கள் விருப்பப்படியே நடப்பேன்.''

''அப்படியானால், இதைக் கேள்! இந்தப் புராதனமான சோழர்குலம் வாழையடி வாழையாகத் தளிர்த்து வளர வேண்டும். இராஜ குலத்தில் பிறந்தவர்கள் எப்போதும் வீர சொர்க்கம் அடையத் தயாராயிருக்க வேண்டியது தான். ஆனால் குலம் வளர்வதற்கும் முன்ஜாக்கிரதையாக ஏற்பாடு செய்ய வேண்டும். உன் தமையன் ஆதித்த கரிகாலன் கலியாணம் செய்து கொள்ளாமலே காலமாகி விட்டான். சோழ குலம் தழைப்பதற்கு நீ ஒருவன்தான் இருக்கிறாய்! ஆகையால் நீ மறுபடியும் கப்பலேறிக் கடல் கடந்து வெற்றித் திருமகளைத் தேடிப் போவதற்கு முன்னால் குலம் தழைப்பதற்கு வேண்டிய ஏற்பாட்டைச் செய்ய வேண்டும். உன் மகுடாபிஷேகத்தோடு சேர்த்துத் திருமணத்தையும் வைத்துக்கொள். வானதியைப் போன்ற பெண்ணை மனைவியாகப் பெற நீ எவ்வளவோ தவம் செய்திருக்க வேண்டும். இந்தப் பெண்ணரசியின் மாங்கலிய பலம் நீ போகுமிடமெல்லாம் மந்திரக் கவசம் போலிருந்து உன்னைப் பாதுகாக்கும்!''

''தேவி! அந்தக் கவசத்தை அணிய நான் சித்தமாகத்தான் இருக்கிறேன். வானதிதான் மறுதளிக்கிறாள். 'சிங்காதனம் ஏறமாட்டேன்; சபதம் செய்திருக்கிறேன்' என்று பிடிவாதம் பிடிக்கிறாள்!'' என்றார் இளவரசர்.

யாரும் எதிர்பாராதவிதமாகப் பூங்குழலி அப்போது தலையிட்டு, ''கொடும்பாளூர் இளவரசியின் பேச்சை அப்படியே நம்பிவிட வேண்டாம். நாமெல்லாரும் சேர்ந்து மேலும் உபசாரம் செய்ய வேண்டும் என்று எண்ணுகிறார். பொன்னியின் செல்வர் இன்னும் கொஞ்சம் கெஞ்சிக் கேட்க வேண்டும்!'' என்று சொல்லி நகைத்தாள். அது வேடிக்கைப் பேச்சு என்று எண்ணி மற்றவர்களும் சிரித்தார்கள். ஆனால் வானதி மட்டும் விம்மி விம்மி அழத் தொடங்கினாள்.

''அசட்டுப் பெண்ணே! இது என்ன? எதற்காக நீ இப்படி விம்மி அழுகிறாய்?'' என்று குந்தவை கேட்டுவிட்டு, வானதியின் கரத்தைப் பிடித்து அழைத்துக் கொண்டு கீழே போனாள்.

## அத்தியாயம் எண்பத்தாறு

# "கனவா? நனவா?"

மறு நாள் காலையில் செம்பியன்மாதேவியும் மதுராந்தகரும் பூங்குழலியும் தஞ்சைக்குப் புறப்பட்டார்கள்.

பொன்னியின் செல்வரும் வந்தியத்தேவனும் உறையூருக்கும் ஸ்ரீரங்கத்துக்கும் போய் வர எண்ணியிருந்தார்கள். போகும்போது கரிகாலச் சோழர் காலத்தில் காவேரி நதியின் நீரைத் தேக்குவதற்காகக் கட்டப்பட்ட பேரணையை வந்தியத் தேவனுக்குக் காட்டுவதாக அருள்மொழிவர்மர் கூறியிருந்தார்.

அவர்கள் புறபபடுவதற்கு முன்னால் பொன்னியின் செல்வர் குந்தவை தேவியிடம் விடைபெற்றுக் கொள்வதற்காகச் சென்றார்.

''அக்கா! தாங்கள் பழையாறைக்கு அவசியம் போக வேண்டுமா?'' என்றார்.

''தம்பி! நீங்கள் உறையூருக்கு அவசியம் போக வேண்டுமா? எங்களுடன் பழையாறைக்கு வரக் கூடாதா?'' என்று கேட்டாள்.

''இல்லை, அக்கா! உறையூரில் ஆழ்வார்க்கடியானை முக்கியமான காரியத்துக்காகச் சந்திப்பதாகச் சொல்லியிருக்கிறோம்....'' என்று சொன்னார்.

''ஆகா! நீ முன்மாதிரி இல்லை, தம்பி! உன் மனசு மிகவும் கெட்டுப் போய்விட்டது. என்னை நீ இலட்சியம் செய்வதே இல்லை. இந்த மாறுதலுக்குக் காரணம் அந்த வல்லத்து அரசரின் சிநேகந்தான் என்று கருதுகிறேன்.....''

''வீணாக அவர் பேரில் பழியைப் போடாதீர்கள்! எனக்குப் பிராயம் வந்துவிடவில்லையா, அக்கா! ஒரு பெரிய இராஜ்யத்தின் சக்கரவர்த்தியாக முடிசூட்டிக் கொள்ளப் போகிறேன். இனிமேலாவது என் இஷ்டப்படி நான் நடந்துகொள்ள வேண்டாமா?''

''நன்றாக உன் இஷ்டப்படி நடந்து கொள்! உன்னுடைய அதிகாரத்தை என்பேரில் காட்டாமலிருந்தால் சரி. உன் இஷ்டப்படி நான் நடக்க வேண்டுமென்று சொல்லாமலிருந்தால் சரி.''

''மகுடாபிஷேகத்துக்குமட்டும் வந்துவிடுங்கள். அப்புறம் உங்கள் இஷ்டப்படி நடந்து கொள்ளுங்கள்.''

''மகுடாபிஷேகத்துக்குப் பிறகு வேண்டுமானால் நீ என்பேரில் அதிகாரம் செலுத்தலாம். அதுவரை என்னைக் கட்டாயப்படுத்த உனக்கு என்ன உரிமை?''

''அப்படியானால், நீங்கள் மகுடாபிஷேகத்துக்கு வரப் போவதில்லையா?''

''அது வானதியின் விருப்பம். அவள் போக வேண்டுமென்றால் நானும் வருவேன். இல்லாவிட்டால் வர மாட்டேன்.''

''அந்தப் பெண் எங்கே அக்கா ?''

''உன் அன்னையான பொன்னி நதிக்குப் பூஜை செய்யப் போயிருக்கிறாள். உனக்கு நல்ல புத்தியைக் கொடுத்து அருள வேண்டுமென்று பிரார்த்தனை செய்யப் போயிருக்கிறாள்.''

இளவரசர் சிரித்து விட்டு, ''அவளுடைய பிரார்த்தனை நிறைவேறட்டும்; நான் புறப்படுகிறேன்'' என்றார்.

''தம்பி! உன்னைப்போல் குரூரமானவனை நான் பார்த்ததே இல்லை. வானதி இரவெல்லாம் தூங்கவே இல்லை; நினைத்து நினைத்து விம்மிக் கொண்டிருந்தாள். காவேரிப் படித் துறைக்குச் சென்று அவளிடம் விடைபெற்றுக் கொண்டு போ!'' என்றாள் குந்தவை.

''அவள் தூங்காதது மட்டும் என்ன? என் தூக்கத்தையும் அவள்தான் பறித்துக்கொண்டுவிட்டாள் போலிருக்கிறது. ஒருவர் மனத்தை ஒருவர் அறிந்து நடந்து கொள்ளத் தெரியாவிட்டால் விம்மி அழுது கொண்டிருக்க வேண்டியதுதான். இப்படிப்பட்ட பெண்ணைக் கட்டிக் கொண்டு வாழ்நாளெல்லாம் நான் கஷ்டப்பட வேண்டுமென்கிறீர்கள்!'' என்று பொன்னியின் செல்வர் சொல்லிவிட்டு, அந்த அரண்மனையின் பின்புறம் விரைந்து சென்றார். தோட்டத்தைத் தாண்டியதும் பொன்னி நதியின் படித் துறையில் வானதி அமர்ந்திருப்பதையும், பக்கத்திலிருந்த தட்டிலிருந்து மலர்களை எடுத்துப் பொன்னி நதியின் வெள்ளத்தில் ஒவ்வொன்றாகப் போட்டுக்கொண்டிருப்பதையும் பார்த்தார்.

**வா**னதி அவ்விதம் அர்ச்சனை செய்து கொண்டிராவிட்டால், அவள் அந்தக் காவேரித் துறையில் அமைக்கப்பட்ட ஒரு பெண்ணின் பொற்சிலையாகவே தோன்றியிருப்பாள்.

பொன்னியின்செல்வர் சத்தமிடாமல் சென்று வானதிக்குப் பின்னால் மேற்படி ஒன்றில் உட்கார்ந்து கொண்டார்.

வானதிக்கு யாரோ வருகிறார்கள் என்பது தெரிந்துதானிருக்க வேண்டும். உள்ளுணர்வினால் அவர் பொன்னியின்செல்வர்தான் என்று தெரிந்து கொண்டாள் போலும். ஆகையால் திரும்பிப் பாராமல் அர்ச்சனை செய்வதையும் நிறுத்திவிட்டுச் சும்மா இருந்தாள்.

தட்டிலிருந்த மலர்களின் இதழ்களில் பனித் துளிகள் இரண்டொன்று காணப்பட்டன. வானதியின் கண் மலரின் இதழ்களிலும் முத்துப்போன்ற இரண்டு கண்ணீர்த் துளிகள் பிரகாசித்தன.

உதய சூரியனின் பசும் பொற்கிரணங்கள் பொன்னி நதியின் மெல்லிய அலைகளோடு கூடிக் குலாவியபோது, சோழ சாம்ராஜ்ய மங்கை தங்க ரேகைகள் ஊடுருவிப் படர்ந்த நீலப் பட்டுச்சேலையை உத்தரீயமாக அணிந்து விளங்குவது போலத் தோன்றியது. அந்த நீலப் பட்டுச் சேலையின் இருபுறங்களிலும் அமைந்த பச்சை வர்ணப் பட்டுக் கரையைப் போல நதியின் இரு புறங்களிலும் செழித்து வளர்ந்திருந்த பசும் சோலைகள் காட்சி தந்தன.

காவேரியின் பிரவாகம் அசைத்த இனிய சுருதிக்கு இணங்க இருபுறத்துச் சோலைகளிலும் பலவகைப் புள்ளினங்கள் மங்கள கீதங்கள் பாடி வாழ்த்தின.

கற்பனை உலகிலே சஞ்சரித்துப் பகற் கனவு காண்பதற்கு இடமும் நேரமும் சூழ்நிலையும் மிக வாய்ப்பாக இருந்தன.

இளவரசர் சிறிது மௌனமாயிருந்து பார்த்துவிட்டு, ''வானதி! பகற் கனவு காண்கிறாயா? நான் உன் கனவைக் கலைத்துவிட்டேனா?'' என்றார்.

''நான் பகற்கனவுதான் காண்கிறேன், ஐயா ! ஆனால் என் கனவைத் தாங்கள் எப்படிக் கலைக்க முடியும் ? இரவிலே நான் கனவு கண்டாலும் பகலிலே நான் கனவு கண்டாலும், அக் கனவிலே நடுநாயகமாக விளங்குகிறவர் தாங்கள்தானே ? ஆகையாலேயே தங்களைப் பக்கத்தில் பார்க்கும்போது, 'இது கனவா? நனவா?' என்று எனக்குச் சந்தேகம் தோன்றி விடுகிறது. 'வாருங்கள்' என்று அழைக்கவும் இயலாமற் போகிறது. ஆம், சுவாமி! எத்தனையோ நாள் எத்தனையோவிதமான பகற் கனவு கண்டிருக்கிறேன். தங்களை முதன் முதலில் திருநல்லம் அரண்மனைத் தோட்டத்தில் நான் சந்தித்தபோது, தங்களை யானைப் பாகன் என்று நினைத்தேன். தாங்கள் சாதாரண யானைப் பாகனாகவே இருக்கக் கூடாதா என்று பின்னர் பல தடவை நான் எண்ணியதுண்டு. தாங்கள் வெறும் யானைப்பாகனாயிருந்து என்னைத் தங்கள் பின்னால் யானையின் மீது ஏற்றிச் சென்றதாகப் பல முறை கற்பனையில் கண்டு களித்தேன். அப்போதெல்லாம் இந்த உலகத்தைச் சேர்ந்த சாதாரண கரிய யானையின் மேல் ஏறிப் போவதாக எனக்குத் தோன்றுவதில்லை. தேவலோகத்தில் உள்ள ஐராவதம் என்னும் வெள்ளை யானையின் பேரில் நான் ஏறிச் செல்வதாகத் தோன்றும்.

தாங்களே தேவேந்திரன் என்றும் நான் இந்திராணி என்றும் எண்ணிக் கொள் வேன்.........''

''அப்படியானால் இப்போது.....'' என்று பொன்னியின் செல்வர் குறுக்கிட்டுப் பேச முயன்றதை வானதி தடுத்துத் தொடர்ந்து கூறினாள்:

''கொஞ்சம் பொறுங்கள், அரசே! தேவேந்திரன் இந்திராணி என்ற கற்பனையை உடனே மாற்றிக் கொள்வேன். தேவேந்திரனுக்கும், இந்திராணிக்கும் நிம்மதி ஏது? அவர்கள் இருவரும் தனியாக ஐராவதத்தில் ஏறி ஆனந்தப் பிரயாணம் செய்வதற்கு அவகாசம் ஏது? தேவர்களும் தேவிகளும் புடை சூழவல்லவா எப்பொழுதும் கொலுவிருக்க வேண்டும்? ஆகையால் அந்த எண்ணத்தை உடனே மாற்றிக் கொள்வேன். அரசர் குலத்தில் பிறந்தவளாயில்லாமல் கடற்கரையில் வாழும் படகுக்காரர் குடும்பத்தில் நான் பிறந்திருக்கக் கூடாதா என்று எண்ணிக் கொள்வேன்.''

''தெரிகிறது, வானதி! எனக்குத் தெரிகிறது! பூங்குழலியைப் பார்த்து நீ பொறுமைப்படுகிறாய்!''

''ஆம்; அது உண்மைதான்! இந்த உலகத்திலேயே பூங்குழலி தேவியைப் பார்த்துத்தான் நான் பொறுமைப்படுகிறேன். அவருடைய மனோரதம் நிறைவேறி விட்டது. அவரும் அவருடைய காதலரும் கோடிக்கரைக்குப் போய் அலைகடலில் படகு செலுத்தியும் குழகர் கோவிலில் சேவை செய்தும் ஆனந்த வாழ்க்கை நடத்தப் போகிறார்கள். அவர் ஏன் என்னைப் பார்த்துச் சிரிக்க மாட்டார்? சிரிக்கத்தான் சிரிப்பார்! ஐயா! வேறு எந்த விதமாகவேனும் என்னைத் தண்டியுங்கள். பூங்குழலி தேவி என்னைப் பார்த்துச் சிரிக்கும்படி மட்டும் செய்யாதிர்கள்!...''

மூன்னாள் இரவு நடந்ததைப் பொன்னியின்செல்வர் நினைவுகூர்ந்தார்.

''வானதி! கொஞ்சம் பொறுத்துக் கொண்டிரு! நேற்று பூங்குழலி உன்னைப் பார்த்துச் சிரித்தாள் அல்லவா? அவளைப் பார்த்து நீ சிரிக்கும் காலம் வரும்!''

''சுவாமி! நான் பூங்குழலி தேவியைப் பார்த்துச் சிரிக்க விரும்பவில்லை. வேறு யாரைப் பார்த்தும் சிரிக்க விரும்பவில்லை. யார் வேண்டுமானாலும் என்னைப் பார்த்துச் சிரித்துக் கொண்டு போகட்டும். தங்களுடைய பொன் முகத்தில் சில சமயம் புன்னகையைக் காண்பதற்குத்தான் ஆசைப்படுகிறேன். மற்றவர்களைப் பார்க்கும்போதும் பேசும் போதும் தங்கள் முகம் மலர்ந்திருக்கிறது. என்னைப் பார்க்கும் போது மட்டும் தங்கள் புருவங்கள் நெரிகின்றன. இப்போதுகூடத் தங்களைப் பார்ப்பதற்கே எனக்குப் பயமாயிருக்கிறது...''

''வானதி! இதைக் கேள்! உன்னைப் பார்த்ததும் என் முகம் சுருங்குவதற்குக் காரணம் இருக்கிறது. மற்றவர்களால் எனக்கு எவ்வித இடையூறும் இல்லை. அவர்களால் என் மன நிம்மதி குலைவதில்லை. உன்னால் என் உள்ளம் அமைதியை இழக்கிறது.நேற்றிரவு நீ தூங்கவில்லை என்று என் தமக்கையார் கூறினார். நானும் தூங்கவில்லை. வானதி பலதினங்களாகவே நான் தூங்குவதில்லை. அரண்மனை மேன் மாடத்தில் படுத்து ஆகாச நட்சத்திரங்களைப் பார்த்தேனானால், உன் கண்களின் ஒளியைத்தான் அந்த விண்மீன்கள் எனக்கு ஞாபகப் படுத்துகின்றன. சோலை மரங்கள் காற்றில் அசைந்தாடி இலைகள் சலசல வென்று சப்திக்கும்போது, நீ உன் இனிய குரலில் கலகலவென்று சிரிக்கும் ஒலியைத்தான் கேட்கிறேன். மிருதுவான தென்றல் காற்று என் தேகத்தில் படும் போது நீ உன் காந்தள் மலர்களை ஒத்த விரல்களால் என்னைத் தொடுவதாக எண்ணிப் பரவசமடைகிறேன். வானதி இப்படியெல்லாம் உன் நினைவு என்னை ஆட்கொண்டிருப்பதால் உன்னை நேருக்கு நேர் பார்க்கும்போது என் முகம் சுருங்குகிறது; புருவங்கள் நெரிகின்றன. என் வாழ்க்கையில் நான் சாதனை செய்ய விரும்பும் காரியங்களுக்கெல்லாம் நீ தடங்கலாகி விடுவாயோ என்று அஞ்சுகிறேன்...''

''சுவாமி! அந்தப் பயம் தங்களுக்கு வேண்டாம்! தங்கள் காரியங்களுக்கு நான் தடையாக இருக்க மாட்டேன்.''

''நீ தடையாக இருக்க மாட்டாய்; யாருமே தடையாக இருக்க முடியாது! மாரிக் காலத்தில் கீழ்த் திசையிலிருந்து புயல் கொண்டு வரும் கருமேகத் திரளை நீ பார்த்திருக்கிறாயா, வானதி! அந்த மேகத் திரளில் மழை நீர் நிறைந்திருக்கிறது. மின்னல்களும் இடிகளும் அம் மேகத்தில் மறைந்திருக்கின்றன. சண்ட மாருதம் அந்த மழை நிறைந்த கொண்டலைத் தள்ளிக் கொண்டு வருகிறது. அதை யாராவது தடுத்து நிறுத்த முடியுமா? அந்த மேகங்களின் நிலையில் நான் இருக்கிறேன், வானதி! என் உடம்பில் எப்போதும் ஒரு பரபரப்பு இருந்து கொண்டிருக்கிறது. என் உள்ளத்தில் ஏதோ ஒரு வேகம் இருந்து கொண்டிருக்கிறது. கண்ணுக்குத் தெரியாத மின்னல்கள் மின்னுகின்றன;

## பணமா, பாசமா?

டால்ஸ்டாய் ஒரு தெருவின் வழியாகச் சென்று கொண்டிருக்கும்போது ஒரு பிச்சைக்காரன், "ஒரு நாணயம் தருமம் செய்யுங்களேன்" எனக் கெஞ்சினான்.

"என்னிடம் சில்லறை இல்லையே, சகோதரனே!" என்றார் டால்ஸ்டாய்.

உடனே பிச்சைக்காரன் சொன்னான்: "பரவாயில்லை, ஐயா! பணத்தைவிட உயர்ந்த ஒன்றை எனக்குத் தாங்கள் அளித்துவிட்டீர்கள். என்னை, "சகோதரனே!" என்று அழைத்தீர்களே அதுவே போதும்."

—கோட்டா மோகன்

---

காதில் கேட்காத இடி முழக்கங்கள் ஒலிக்கின்றன. புயல்களும் சூறைக் காற்றுகளும் சண்ட மாருதங்களும் என்னை அழைக்கின்றன. ஏழு கடல்களிலும் மலை மலையாக அலைகள் கிளம்பி என்னை வரவேற்கின்றன. ஆயிரமாயிரம் சங்கங்களின் நாதமும், முரசுகளின் முழக்கமும் போர் யானைகளின் பிளிறல்களும் என்னைக் கவர்ந்து இழுக்கின்றன. என்னை யாரும் தடுக்க முடியாது, வானதி! ஆனால் தடுக்க முயன்று எனக்கு மன அமைதி இல்லாமல் செய்ய முடியும்..."

"சுவாமி! அவ்வாறு நான் ஒரு நாளும் செய்ய மாட்டேன்; தடை செய்ய முயலவும் மாட்டேன். மூன்று உலகையும் ஆளப் பிறந்த தங்களுக்கு உதவி செய்ய முடியா விட்டாலும் இடையூறாக இருக்க மாட்டேன். ஆகையினாலேதான் தங்கள் அருகில் சோழ சிங்காதனத்தில் உட்காரவும் மறுதளிக்கிறேன்."

"வானதி! சோழர் குலச் சிங்காதனம் மகிமையில் பெரிதானாலும் அளவிலே சிறியது. அதில் ஒருவர்தான் அமர முடியும். சக்கரவர்த்திக்குப் பக்கத்தில் வேறொரு சிங்காதனம் அமைத்து அதில் தான் சக்கரவர்த்தினி அமர வேண்டும்."

"சுவாமி! எனக்குத் தாங்கள் அமரும் சிங்காதனத்திலும் இடம் வேண்டாம். தங்கள் அருகில் தனிச் சிங்காதனத்திலும் இடம் வேண்டாம். தங்களுடைய பட்டமகிஷியாகச் சிங்காதனத்தில் அமர்ந்திருக்கப் புண்ணியம் செய்தவளுக்கு அந்தப் பாக்கியம் கிடைக்கட்டும். தங்களுடைய நெஞ்சகமாகிய சிங்காதனத்திலே எனக்குச் சிறிது இடங்கொடுத்தீர்களானால் அதுவே ஏழு ஜன்மங்களில் நான் செய்த தவத்தின் பயன் என்று கருதிப் பூரிப்பு அடைவேன்!"

"வானதி! என்னால் சுலபமாகக் கொடுக்க முடிந்ததை நீ கேட்டாய். என்னுடைய நெஞ்சகமாகிய சிங்காதனத்தில் நீ ஏற்கெனவே இடம் தயார் செய்து கொண்டு விட்டாய். அதை நான் உனக்குத் தருவதில் எவ்விதத் தடையுமில்லை! இந்தப் பெரிய சோழ சாம்ராஜ்யத்தின் சக்கரவர்த்தினியாக உண்மையிலேயே நீ விரும்பவில்லையா, வானதி! கண்டோர் கண்கள் கூசும்படி ஜொலிக்கும் நவரத்தினங்கள் பதித்த பொற்கிரீடத்தை உன் சிரசில் சூட்டிக் கொள்ள வேண்டும் என்ற ஆசை உனக்கு இல்லையா?"

"அந்த ஆசை எனக்குச் சிறிதும் இல்லை! சோழ குலத்துப் புராதன மணி மகுடங்களை நான் பார்த்திருக்கிறேன். கையில் எடுத்தும் பார்த்திருக்கிறேன். அவற்றில் ஒன்றை என் தலையில் வைத்துக்கொண்டால், அதன் கனம் என் தலையை அமுக்கிக் கழுத்தை நெரித்து மூச்சு விடத் திணறும்படி செய்துவிடும் என்று அஞ்சுகிறேன். அவ்வளவு வலிமை என் உடலில் இல்லை; அவ்வளவு தைரியம் என் மனத்திலும் இல்லை. சுவாமி! நவரத்தினங்கள் இழைத்த மணி மகுடத்தைச் சுமக்க வலிமையும் தைரியமும் உள்ளவர்கள் அதைச் சுமக்கட்டும். தாங்கள் கடல் கடந்த நாடுகளுக்குப் பிரயாணம் புறப்படுவதற்கு முன்னால் எனக்கு வேறொரு பரிசு கொடுத்துவிட்டுப் போங்கள். அரண்மனை நந்தவனத்திலிருந்து அழகான மலர்களைப் பறித்துத் தொடுத்து மாலை கட்டித் தருகிறேன். என்னால் எளிதில் சுமக்கக்கூடிய அந்த மாலையை என் கழுத்தில் சூட்டி என்னைத் தங்கள் அடிமையாக்கிக் கொண்டு விட்டுப் புறப்படுங்கள்!..."


"சீன வர்த்தகர்களிடமிருந்து நவரத்தின மாலையை உனக்குப் பட்டாபிஷேகப் பரிசாகக் கொண்டு வந்தேன்."

"தங்கள் பட்டாபிஷேகத்துக்கு எனக்குப் பரிசு எதற்கு?"

"சரி; வேண்டாம்! இதை வேறு யாருக்காவது கொடுத்து விடுகிறேன். வானதி! நீயும் நானும் ஓர் ஒப்பந்தம் செய்துகொள்வோம். நான் புறப்படுவதற்கு முன்னர் உன் விருப்பத்தின்படி உனக்கு ஒரு மாலை சூட்டிவிட்டுப் போகிறேன். நான் சூட்டும் அந்த மண மாலைக்குப் பதிலாக நான் ஒவ்வொரு தடவை அயல்நாடுகளிலிருந்து திரும்பி வரும்போதும் நீ ஒவ்வொரு பூமாலையுடன் காத்திருக்க வேண்டும். கடல் கடந்து தூர தூர தேசங்களுக்கெல்லாம் சென்று புலிக்கொடியை நாட்டிவிட்டு வெற்றி முழக்கத்துடன் நான் திரும்பி வரும்போதெல்லாம் நீ ஒரு வெற்றி மாலையுடன் எனக்காகக் காத்திருக்க வேண்டும்" என்றார் இளவரசர்.

"ஒரு மாலை என்ன? நூறு நூறு மாலைகள் தொடுத்து வைத்துக்கொண்டு காத்திருப்பேன். இந்தத் தேச மக்கள் எல்லாரும் காத்திருப்பார்கள்!" என்றாள் இளவரசி வானதி. (தொடரும்)

# வணக்கம் சௌக்கியமா?



இவ்வாரம் உரையாடலில்
பங்கு பெறுபவர்கள்:

ஸ்ரீமதி
ஜானகி கிருஷ்ணன்
ஸ்ரீமதி
புஷ்பா ரங்கரத்தினம்

இரு
இல்லத்தரசிகளின்
சந்திப்பு

எட்வர்ட் எலியட்ஸ் சாலையில் ராஜேசுவரி கல்யாண மண்டபத்துக்கு எதிரேயுள்ள டாக்டர் கிருஷ்ணன் இல்லம். வாசலில் ஒரு ஹெரால்ட் கார் வந்து நின்றது.

"ஒரு கல்யாண விஷயமாக மாம்பலம் போயிருந்தேன். வழியில் கார் கொஞ்சம் 'மக்கர்' செய்தது. தாமதத்துக்கு வருந்துகிறேன்..." என, படி ஏறியபடியே கூறினார் ஸ்ரீமதி ஜானகி கிருஷ்ணன்.

"அதனாலென்ன... பரவாயில்லை!" என அவரைச் சந்திக்க வந்து காத்திருந்த ஸ்ரீமதி புஷ்பா ரங்கரத்தினம் பதிலுரைத்தார்.

ரொம்ப நாட்கள் பழகியவர்கள் போல் பெண்மணிகள் சகஜமாகப் பேச ஆரம்பித்து விட்டனர்.

ஜானகி கிருஷ்ணன்: டாக்டரும் சுதந்திரமாகத் தொழில் நடத்தலாம். வக்கீலும் சுதந்திரமாகத் தொழில் நடத்தலாம். இந்த விஷயத்தில் ஒற்றுமை இருப்பதைப் போல் வேறு என்னென்ன ஒற்றுமைகளைப் பார்க்கிறீர்கள்?



திரு ஜி. ரங்கரத்தினம்

புஷ்பா ரங்கரத்தினம்: டாக்டரையும் வக்கீலையும் நடுநிசியில்கூடச் சந்திக்க வருகிறார்கள். உடம்பு மோசமாகிவிட்ட நிலையில் அவசரமாக டாக்டரை அழைக்கவருகிறார்கள். திடீரென ஏதேனும் வழக்கில் கைதாகி விட்டவரை, ஜாமீனில் விடுவிக்க வக்கீலைத் தேடி வருகிறார்கள் — இரவில்கூட. கொஞ்சம் நாள் முன்னால் இரவு ஒன்பது மணி சுமாருக்கு யாரோ அவசரமாக வந்தார். கல்யாணத்துக்கு முதல் நாள், மாப்பிள்ளையாகப் போகிற பையனைக் கைது பண்ணி விட்டார்கள் போலீசில். பிள்ளை வீட்டார் பையனை ஜாமீனில் விடுவிக்க வந்துவிட்டார்கள்.

ஜா. கி. ஓஹோ! கல்யாணம்?

பு. ர.: நடந்தது! உங்கள் முதல் கேள்விக்குப் பதிலாக இன்னொரு ஒற்றுமையையும் சொல்லலாம். நோயாளியை டாக்டர் குணப்படுத்தி வாழ வைக்கிறார். வக்கீல் கட்சிக்காரனை ஆயுள் தண்டனையோ அல்லது மரண தண்டனையோ பெறாமல் மீட்டுக் கொண்டு வந்து பழையபடி 'உயிர்' கொடுக்கிறார்.



திரு கிருஷ்ணன்

உங்கள் கணவர் யார் யாருக்குக் குடும்ப வைத்தியர் ?

ஜா. கி. : என் கணவர் அண்ணாதுரையின் நண்பர். அவருக்கும், அவர் குடும்பத்தாருக்கும் டாக்டராக இருந்தார். நான் ராணி அம்மாவை அடிக்கடி போய்ப் பார்ப்பேன். இப்போது அண்ணா குடும்பத்துக்கு வேறு டாக்டர் எதற்கு? மகன் பரிமளம் டாக்டராகிவிட்டார் ! ம. பொ. சி.க்கும் இவர் தான் வைத்தியம் பார்க்கிறார்.

பு.ர.: அண்ணாவிடம் டாக்டருக்கு ரொம்ப நாள் தொடர்பா?

ஜா.கி.: ஆமாம். வி. பி. ராமன் டாக்டரின் உறவினர். தி. மு. க.வில் அவர் இருந்த போது, அவர் மூலம் அண்ணாவிடம் தொடர்பு ஏற்பட்டது......

அது சரி, திருப்புகழ் மணி டி. எம்.கிருஷ்ண சாமி அய்யரைப் பற்றி ஒரு கட்டுரை படித்த ஞாபகம் வர்றது. அவர் கேஸ் கட்டைப் படித்துவிட்டு, கேஸ் ஜெயிக்காது என்றால் கட்சிக்காரரிடம் கொஞ்சமும் தயங்காமல் சொல்வாராம்... 'இந்த கேஸுக்குச் செலவு பண்ணற பணத்தைக் கோயிலுக்குச் செலவு பண்ணுங்கள். புண்ணியம் கிடைக்கும்' என்பாராம்! உங்க வீட்டுக்காரர் எப்படி?

பு.ர.: ஒரு வழக்கு சம்பந்தமாக அவரும் அப்படித்தான் சொன்னார். அப்பாவின் ஆஸ்திக்காக மூன்று பெண்களுக்கிடையில் ஏதோ மனத்தாங்கல். அக்காவின் மீது தங்கைகள்இருவரும் வழக்குப்போட்டார்கள். கீழ்க்கோர்ட்டில் அக்காவின் பக்கம் தீர்ப்பு. தங்கைகள் அப்பீல் போட ஆலோசனை கேட்டார்கள். ஹைகோர்ட்டுக்குப் போனாலும் ஜெயிக்காது. பணத்தை விரயம் செய்யாதீர்கள் என்றே சொல்லி விட்டார்.... மனிதாபிமானம் இந்த அளவுக்கேனும் இருக்க வேண்டாமா? ஏன், ஏழை என்றும், பணம் கொடுத்து வைத்தியம் செய்ய வசதி இல்லை என்றும் உங்கள் கணவரைப் பலர் தேடி வருவதில்லையா என்ன?

ஜா.கி.: ஓ! சில சேரிவாசிகள் டாக்டரிடம் வந்து ரொம்ப உரிமையோடு 'மருந்து எதனாச்சும் கொடுத்து சொஸ்தம் பண்ணுங்க' எனக் கேட்பார்கள். தயங்காமல் கவனிப்பார். பணம்தான் பெரிசு என்பதில்லே, ஏழைகளின் அன்பையும் நிறையச் சம்பாதிக்கணும்னு சொல்வார்....

பு. ர.: என் வீட்டுக்காரர்கூட, ஸ்டேட் டிரான்ஸ்போர்ட் கண்டக்டர்களுக்கும், — மாணவர்களுக்கும் மோதல் ஏற்பட்டபோது, மாணவர்கள் சார்பாக இலவசமாக வழக்காடினார். பாதிக்கப்பட்டவர்களுக்கு நஷ்டஈடும் வாங்கித் தந்தார். சீனப் படையெடுப்பின் போது போர்முனை சென்ற நம் வீரர்களின் சொந்த வழக்குகள் சிலவற்றுக்கு இலவசமாகவே ஆஜரானார். அதிருக்கட்டும், டாக்டர் வீட்டின் சமையல் திட்டங்களைக் கேட்டுத் தெரிந்துகொள்ள ஆசை....? சத்துணவுகளையும் சொல்வீர்களா ?

ஜா. கி.: தாராளமாக! எங்கள் வீட்டில் தினசரி சமையலில் கீரை நிச்சயமாக இடம் பெறும். கீரையில் இரும்புச் சத்து அதிகம் என்கிற சமாசாரம் உங்களுக்கும் தெரிந்து தான் இருக்கும். சோயா பீன்ஸின் மகிமை பலருக்குப் புரிவதில்லை சத்துமான பொருள்கள் அதில் இருக்கு. இன்னொரு விஷயம். எங்கள் வீட்டில் எப்போதும் பழைய சாதம் இருந்து கொண்டேயிருக்கும். மண் பானையில் போட்டு வைத்திருப்பேன். இதோ காண்பிக்கிறேன்....

(ஸ்ரீமதி ஜானகி கிருஷ்ணன் காஸ் அடுப்பு, பிரஷர் குக்கர், ரிப்ரிஜிரேடர் போன்ற பல நவீன சாதனங்கள் கொண்ட சமையல் அறையிலிருந்து பழையது உள்ள மண் பானையைக் கொண்டு வந்து காண்பித்தார் !)

கோடை காலத்தில் 'பிரிஜ்'ஜில் நீராகாரத்தைப் பாட்டில்களில் வைத்துத் தாகத்துக்கு அதையே உப்புப் போட்டுச் சாப்பிடுவோம்.

டாக்டர் தினமும் பழைய சாதம் காலை பத்து மணிக்குச் சாப்பிடுவார் , டாக்டர் ரங்காச்சாரி மாதிரி ! பழைய சாதத்தில் நிறைய ஈஸ்ட் இருக்கிறதே !

(டாக்டர் கிருஷ்ணனின் பிள்ளை, வைத்தியக் கல்லூரி மாணவர் குறுக்கிட்டு, 'ஒரு கிளாஸ் நீராகாரம், நாலு ரூபாய் கொடுத்து பி. காம்ப்ளக்ஸ் டானிக் வாங்கிச் சாப்பிடுவதற்கு ஈடானது' என்றார்.)

பு. ர.: ரொம்பப் பயனுள்ள தகவல் தந்தீர்கள். டாக்டர் ரங்காச்சாரி என்று குறிப்பிட்டீர்களே! உங்கள் கணவர் ரங்காச்சாரியிடம் பழகியது உண்டா ?

ஜா.கி.: சிறுவயசில் டாக்டரின் தங்கைக்கு டான்சில் ஆபரேஷனை ரங்காச்சாரிதான் செய்தாராம்!

(டாக்டர் கிருஷ்ணன் வந்தார். டெலிபோன் மணி அடித்தது. டாக்டரின் மனைவி டெலிபோனில் பேசிக் கொண்டிருந்தபோது, டாக்டர் கிருஷ்ணன் டாக்டர் ரங்காச்சாரியைப் பற்றி ஒரு தகவல் தெரிவித்தார்.)

கிருஷ்ணன்: கூலி வேலை செய்யும் ஓர் ஏழைக் குடிசைவாசி மனைவி பிரசவ வேதனையால் துடிப்பதைக் காணச் சகியாமல் ரங்காச்சாரியின் வீட்டுக்கு ஓடி வந்தான். 'என் பெண்சாதியைக் காப்பாத்துங்க' எனக் கெஞ்சிக் காலில் விழுந்தான்.

ரங்காச்சாரி உடனே புறப்பட்டு வந்து, கர்ப்பிணியின் உடல்நிலையைப் பரிசோதித்தார். ஆபரேஷன் செய்ய வேண்டிய கேஸ் என்று தெரிந்து கொண்டார். தம் காரின் ஹெட் லைட் விளக்கு வெளிச்சத்தில், அந்தக் குடிசையில் ஆபரேஷன் செய்து, தாயையும் பிள்ளையையும் காப்பாற்றிவிட்டார்.

சில மருந்துகளை எழுதிக் கொடுத்துவிட்டு, காரில் ஏறிப் போனார்.

'ஐயா! மருந்து வாங்கித் தரப் பணம் இல்லீங்க' என்று கண் கலங்கினான் அந்த ஏழை.

'பயப்படாதே! உன் பெண்டாட்டியின் படுக்கையில் போய்ப் பார். பணம் வைத்திருக்கிறேன். மருந்தெல்லாம் வாங்கிக் கொடு' எனச் சொல்லிவிட்டுக் கிளம்பினார், ரங்காச்சாரி.

பு.ர. (டெலிபோனில் பேசிவிட்டுத் திரும்பிய தோழியிடம்): டாக்டர் ரங்காச்சாரி பற்றிய இந்த நிகழ்ச்சியைக் கேட்ட நிறைவோடேயே நான் விடைபெறுகிறேன். எனக்கும் நேரமாகிறது.

(குங்குமம் எடுத்துக் கொண்டு புறப்பட்டார் புஷ்பா ரங்கநாதம்.)

(உரையாடல் தொகுப்பு: ஏ. சுவாமிநாதன்)

கல்யாணக் கதை - 2

# டெலிபோன் செய்த உதவி

**கோமதி ஸ்வாமிநாதன்**

கோதண்டராமன் அன்று மாலையில் வெங்கடேசபுரத்தை நோக்கிக் கிளம்பிவிட்டார். கல்யாணத்துக்குத் தயாராகப் பிள்ளையாண்டான் ஒருவன் அந்தப் பகுதியில் இருக்கிறான் என்ற தகவல் கிடைத்தபிறகும் அவரால் சும்மா இருக்க முடியுமா? தன் பெண்ணுக்கு வரன் தேடும் முயற்சியில் அவர் மும்முரமாக இறங்கி மூன்று மாதங்களாகி விட்டன.

அன்று காலையில் அகஸ்மாத்தாக அந்தத் தகவல் அவருக்குக் கிடைத்தது. "என்னப்பா கோதண்டம்! மாப்பிள்ளை வேட்டையில் இறங்கி யிருக்கிறாயாமே? எந்த இடமாவது அமைந்ததா?" என்று கேட்டார் அவர் நண்பர் நரசிம்மன், மார்க்கெட்டில் கத்திரிக்காய்க் கடையில் பேரம் செய்து கொண்டே.

"வீட்டுக்கு வாயேன்! கல்யாண 'ஆல்ப'த்தைக் காண்பிக்கிறேன்" என்றார் கோதண்டராமன்.

"அட பாவி! கல்யாணம் எல்லாம் ஆயிடுத்தா? எனக்கு இன்விடேஷன் அனுப்பினால் சாப்பாட்டுக்கு வந்து உட்கார்ந்து விடுவேன் என்று பயந்து சும்மா இருந்து விட்டாயா?" என்று அசல் கோபத்துடனேயே நரசிம்மன் ஆரம்பித்தபோது கோதண்டராமன் கையை அமர்த்தி, "உஷ்!





உனக்குத் தெரியாமல் கல்யாணம் நடக்குமா? நான் இந்தக் கல்யாணப் பேச்சு சம்பந்தமான கடிதப் போக்குவரத்தை ஆல்பமாகச் சேர்த்து வைத்திருப்பதைச்சொன்னேன். உள்ளூரில் எனக்குக் கிடைத்த பட்டியலில் யாரும் சுகமில்லை. என் பெண்ணுக்கு வெளியூர் சம்பந்தம் நான் தேடத் தயாராயில்லை" என்றார். அப்போது தான் நரசிம்மன் வெங்கடேசபுரம் பகுதியிலுள்ள பையனைப்பற்றித் தகவல் கொடுத்தார்.

மயிலாப்பூர் குளக்கரை பஸ் ஸ்டாப்பில் இறங்கி, கபாலீசுவரர் கோயில் பக்கம் திரும்பி ஒரு கும்பிடு போட்டுவிட்டு, தம் சட்டைப் பையிலிருந்த விலாசத்தைச் சரி பார்த்துக் கொண்டு நடந்தார். பையன் பெயர் வேணுகாபாலன். அவன் தகப்பனார் பெயர் சிவசாமி. வீட்டு நம்பரும் விலாசத்தில் இருந்தது.

குறிப்பிட்ட நம்பருள்ள வீட்டுத் திண்ணையில் ஒரு முதியவர் சாய்வுநாற்காலியில் அமர்ந்திருந்தார்.

"யார் வேணும்?" என்று அந்த முதியவர் அசையாமலே கேட்டார்.

"சிவசாமிங்கிறது நீங்கதானே? உங்களைப் பார்க்கத்தான்......"

கோதண்டராமன் முடிக்குமுன்பே அந்த முதியவர் அவசரம் அவசரமாக நிமிர்ந்து உட்கார்ந்தார். "சிவசாமியா....? சிவசாமி காலமாகி ரொம்பநாட்களாச்சே...நீங்க...?"

கோதண்டராமன் திடுக்கிட்டார். "அவர் பையன் வேணுகோபாலன் என்று...."

"இங்கேதான் இருக்கான்! உள்ளே போய் அவன் தாயாரிடம் விசாரியுங்கள்" என்று சொல்லிவிட்டு அந்த முதியவர் மீண்டும் சாய்ந்துகொண்டார்.

பெருமூச்சை ஓரளவு வெளிக்குத் தெரியாமல் விட்டு விட்டுக் கோதண்டராமன் உள்ளே புகுந்தார். வேணுகோபாலன் தாயார் நடுத்தர வயதைத் தாண்டிய அம்மாள். அந்த அம்மாள் யார் என்று தெரிந்து கொள்ளக்கூட ஆர்வம் காட்டாமல், ''அம்மா! நான் வேணுகோபாலனைப் பார்க்க வந்தேன். ஜாதகம் வேண்டும். என் பெண்ணுக்கு வரன் தேடிக் கொண்டிருக்கிறேன்'' என்று ஆரம்பித்து விட்டார். இந்த அம்மாவும் வேறு யாரையாவது கட்டிக்காட்டிவிட்டு ஒதுங்கிக் கொண்டால் என்ன செய்வது என்ற பயத்தினால்தான்.

''உட்காருங்கோ! வேணு என் பிள்ளைதான். நீங்க வந்த வேலையாவது நல்ல வேலையாக இருக்கட்டும். நானும் மூணு வருஷமாகக் கெஞ்சுகிறேன். பிடி கொடுக்க மாட்டேன் என்கிறான்! உங்க பெண் நல்ல சிவப்பாக இருப்பாளா? என்ன படித்திருக்கிறாள்?'' என்று மிகுந்த உற்சாகத்துடன் ஆரம்பித்தாள் அந்த அம்மாள்.

''உங்கள் பையன் ஆபிசிலிருந்து வந்துவிட்டாரா?'' என்று கேட்டார் கோதண்டராமன். ஒவ்வொருவருக்காக விஷயத்தைச் சொல்லிக் கொண்டிருக்காமல் மொத்தமாகச் சொல்ல விரும்பினார்.

''அவன் வர எட்டு மணியாகுமே!'' என்றாள் அந்த அம்மாள். இனி தப்ப முடியாது என்ற எண்ணத்துடன், சுருக்கமாகத் தம் குடும்பத்தைப் பற்றியும் பெண்ணைப் பற்றியும் சொல்லிவிட்டு, வாசலில் அமர்ந்திருப்பவர், அந்த அம்மாளின் மாமா என்றும் தெரிந்து கொண்டார். கோயில் பக்கம் போய்விட்டு மீண்டும் எட்டு மணி வாக்கில் வருவதாகச் சொல்லி விட்டுக் கிளம்பினார்.

கபாலீசுவரர் கோயில், சாயிபாபா கோயில் எல்லாம் போய்விட்டு மீண்டும் வேணுகோபாலனைப் பார்க்க வந்தபோது இரவு மணி எட்டேகால். அப்போதும் வேணுகோபாலன் வீடு திரும்பியிருக்கவில்லை. 'அன்றிரவு பம்பாய் மெயிலில் போகும் ஒரு நண்பரை வழியனுப்ப வேண்டிய அவசியம் கோதண்டராமனுக்கு இருந்தது. ஆகவே, மேலும் காத்திருக்க முடியாத நிலையில், தம் வீட்டு விலாசம் டெலிபோன் நம்பர் எல்லாவற்றையும் கொடுத்துவிட்டு மறுநாள் எப்போது சந்திக்கலாம் என்று வேணுவை டெலிபோன் செய்யச் சொல்லிவிட்டுக் கிளம்பினார்.



காத்திருக்க வேண்டிய அவசியமில்லாமல் அவர் போக வேண்டிய பஸ் வந்துவிட்டது. பாதி வழியில்தான் அவருக்கு ஒரு விஷயம் நினைவுக்கு வந்தது. வேணுகோபாலன் வீட்டு ஹாலில் டெலிபோனைப் பார்த்தது நன்றாக ஞாபகம் வந்தது. ''அடடா! நம்பரைக் கேட்காமல் வந்துவிட்டோமே! நம்பர் தெரிந்திருந்தால் வீடு திரும்பியவுடன் வேணு கோபாலனைக் கூப்பிட்டே அவனை எப்போது சந்திக்கலாம் என்று கேட்டிருக்கலாமே!'' என்று நினைத்துக் கொண்டார்.

கோதண்டராமன் வீடு திரும்பியவுடன் விவரங்களைச் சொன்னார். டெலிபோன் நம்பரைக் கொண்டு வராதது பற்றியும் குறிப்பிட்டார். அதற்கு அவர் பெண் சியாமளா, ''இதென்ன பிரமாதம்! டெலிபோன் விசாரணைப் பகுதியைக் கூப்பிட்டுக் குறிப்பிட்ட விலாசத்தில் உள்ள டெலிபோன் நம்பரைக் கேட்டால் தன்னாலே சொல்லுகிறார்கள்'' என்று சொல்லிவிட்டு, டெலிபோன் டைரக்டரியில் வேணுகோபாலன் பெயரில் அந்த வீட்டில் டெலிபோன் இல்லை என்று உறுதிப்படுத்திக் கொண்டு, விசாரணைப் பகுதிக்குப் போன் செய்தாள். குறிப்பிட்ட நபருக்கு டெலிபோனே கிடையாது என்று 'டாண்' என்று பதில் வந்தது.

'' சரியாகப் பார்த்தீர்களா, அப்பா ?'' என்று கேட்டான் கோதண்டராமனின் பிள்ளை விகவம்.

''நிச்சயமாகப் பார்த்தேன்'' என்று பதில் வந்ததும் விகவம் மும்முரமாக டெலிபோன் டைரக்டரியை ஆராய்ந்து, வெங்கடேசுவரபுரம் பகுதியில் உள்ள ஐந்து டெலிபோன் நம்பர்களையும் விலாசங்களையும் குறித்துக் கொண்டான். ''அப்பா ! வரிசையாக இந்த ஐந்து நம்பர்களுக்கும் போன் செய்து பார்ப்போம். ஒருவருக்காவது வேணுகோபாலன் வீட்டில் இருக்கும் போன் நம்பராவது அல்லது அது யார் பேரில் இருக்கிறது என்ற விவரமாவது தெரியாமல் போகாது. இந்த எல்லா விலாசங்களுமே வேணுகோபாலன் வீட்டுக்கு அக்கம்பக்கத்தில் உள்ளவை தான்'' என்று தன் யோசனையைத் தெரிவித்தான். ஆட்சேபணை இல்லாமல் அந்த யோசனை ஏற்றுக் கொள்ளப்பட்டது. கோதண்டராமன் பக்தி சிரத்தையுடன் அந்த டெலிபோன் நம்பர்களைச் சுற்ற ஆரம்பிக்கார்.

முதல அழைப்புகருப் பதில் சொன்ன ஆசாமி அந்த வீட்டு வேலைக்காரக் கிழவன். ''ஐயா! அம்மா எல்லாரும் பயாஸ்கோப்புக்குப் போயிட்டாங்க!.... என்னங்க, அந்த வீட்டு டெலிபோன் நம்பரா?.... அதெல்லாம் எனக்குத் தெரியாதுங்க ! போனை வைச்சுடுங்க!...'' என்று சொல்லி அவனும் 'டக்' என்று வைத்துவிட்டான்.

அடுத்த நம்பரில் கோதண்டராமன ஓர் ஆசாமியிடம் மாட்டிக் கொண்டார். தம் வாழ்க்கைச் சரித்திரம், தாம் சற்றுமுன் வெங்கடேசபுரத்துக்கு வந்த விஷயம், இப்போது அந்த வீட்டு நம்பர் கேட்கும் காரணம் எல்லாவற்றையும் ஒப்புவிக்க வேண்டியதாயிற்று. இதை எல்லாவற்றையுமே கேட்டுவிட்டு அந்த நபர், ''என் தம்பிக்குத்தான் அந்த நம்பர் தெரியும்! காலையிலே மறுபடியும் போன் பண்ணுங்கோ'' என்று சொல்லிவிட்டார்.

அடுத்த இரண்டு இடங்களிலும் ஏறத்தாழ இதே விதம்தான். கோதண்டராமனின் பூர்வீகம் முதற்கொண்டு விசாரித்த ஒருவர் கடைசியில் கையை விரித்தார். ஐந்தாவது தடவையில், மறு முனையில் போனை எடுத்த சிறுமி, டாண் என்று, அந்த போன் அருணகிரி என்பவர் பெயரில் இருப்பதாகச் சொன்னதோடல்லாமல் அவர் நம்பரையும் கொடுத்தாள்.

விடுவாரா கோதண்டராமன்? அடுத்தபடியாக அந்த நம்பரைத்தான் சுற்றினார். ''டேய், வேணு! உன்னைத்தான்டா யாரோ கூப்பிடுகிறார்கள்'' என்ற இன்னொரு முதியவரின் குரலும் அதைத் தொடர்ந்து சில விநாடிகள் அமைதியும் நிலவியது.

வேணுகோபாலன் பிடிகொடுத்தே பேசவில்லை. கோதண்டராமன் மறுநாளே வெங்கடேசபுரத்தில் வந்து நிற்பேன் என்று பயமுறுத்தியதன் பேரில், ஒரு வாரத்துக்குள் தானே டெலிபோன் செய்வதாக வேணுகோபாலன் ஒப்புக் கொண்டான்.

இரண்டு மூன்று நாட்கள் கழிந்து ஒரு நாள் காலை ஒரு ஜிப்பாக்கார ஆசாமி கோதண்டராமனைச் சந்திக்க வந்து சேர்ந்தார். சுற்றி வளைக்காமல் நேராக விஷயத்தில் புகுந்தார். ''உங்கள் பெண்ணுக்கு வரன் தேடிக் கொண்டிருப்பதாகக் கேள்விப்பட்டேன். இதோ ஒரு பையன் ஜாதகம். நல்ல உத்தியோகத்தில் இருக்கிறான். யோக்கியமான பையன......'' என்று ஆரம்பித்தார்.

கோதண்டராமன் உஷாரானார். ''சார் ! என்னை மன்னிக்கணும். நான் கல்யாண புரோக்கர்களை நம்பி எந்தக் காரியத்திலும் இறங்குவதில்லை. நானே நேரடியாகப் பார்த்துக் கொள்கிறேன்....'' என்றார்.


வந்தவர் முகம் வெட்கத்தால் சிவந்தது. '' நான் புரோக்கர் இல்லே, சார் ! ஃபாதர்! பையனுடைய ஃபாதர் ! உங்களைப் பற்றி வெங்கடேசபுரத்திலுள்ள என் மைத்துனன் கோபாலசாமி தகவல் கொடுத்தான். சம்பிரதாயத்தையும் விட்டு விட்டு நான் உங்களைப் பார்த்துப் பேசிப் போகலாம் என்று வந்தேன்'' என்றார் ஜிப்பாக்காரர். அப்போது தான் டெலிபோன் டைரக்டரியில் அன்று பொறுக்கிய ஐந்து விலாசங்களில் கோபாலசாமியின் பெயரும் இருந்தது நினைவுக்கு வந்தது.

அப்புறம் கோதண்டராமன் வந்தவருடன் வெகு நேரம் பேசிக் கொண்டிருந்துவிட்டு முறைப்படி தம் பெண் ஜாதகத்தையும் கொடுத்து, அடுத்த வாரம் பெண் பார்க்க வர முடிவான தகவல் கொடுப்பதாகச் சொல்லி அனுப்பினார்.

கோதண்டராமனுக்கு ஓரளவு ஜாதக கட்டு விஷயங்களில் பரிச்சயம் ஏற்பட்டிருந்ததால்

இன்னுமொரு குழந்தையைப் பெறுவதற்குமுன் சற்று

# யோசியுங்கள்




இக்குழந்தையை நன்றாக படிக்க வைக்க வேண்டாமா? உங்கள் விருப்பப்படி, குழந்தைக்கு வசதிகள் அனைத்தும் அளிக்க வேண்டாமா? இன்னொரு குழந்தையை உடனே பெற்றால், இதெல்லாம் முடியுமா? சிரமம் தான். அடுத்த குழந்தை உடனே வேண்டாம் என்று நீங்கள் கருதுவது இயற்கைதானே.

நீங்கள் மட்டுமல்ல; உலகெங்கிலும் தம்பதிகள் இவ்விதம்தான் கருதுகிறார்கள். வளமுடன் வளர்க்க வசதிகள் பெருகும் வரை, அவர்கள் இன்னொரு குழந்தையைப் பெறுவதில்லை. நீங்களும் 'நிரோத்' உபயோகித்து குழந்தை பெறுவதைத் தள்ளிப்போடலாம். அனைவரும் விரும்பி ஏற்கும் ரப்பர் கருத்தடைச் சாதனம் நிரோத்; இது ஆண்களுக்கானது. தலைமுறை தலைமுறையாக உபயோகத்தில் இருந்துவரும் சிறந்த, எளிய, பாதுகாப்பான கருத்தடைச் சாதனம் நிரோத். நீங்களும் நிரோத் உபயோகியுங்கள்.

நிரோத் எங்கும் கிடைக்கிறது. அரசாங்க ஆதரவு விலை 15 பைசாவுக்கு 3




இன்னொரு குழந்தையை வளர்க்க வசதி பெறும் வரை
உபயோகியுங்கள்

## நிரோத்

லட்சக்கணக்கான பேர் விரும்பி ஏற்கும் எளிய, பாதுகாப்பான கருத்தடைச் சாதனம் நிரோத்.

dasp 71/119

பலசரக்குக் கடைகள், மருந்தகங்கள், வெற்றிலைபாக்குக்கடைகள் இங்கெல்லாம் நிரோத் விற்பனையாகிறது.

பிள்ளையின் ஜாதகத்தைப் பார்த்தவுடனேயே அது பொருந்தக் கூடியதுதான் என்று கண்டு கொண்டார். அன்றைக்கே பையனைப் பற்றிய விசாரணையிலும் இறங்கினார். அவனுக்குத் தெரியாமலேயே காரியாலய வாயிலிலிருந்து அவனைப் பார்த்துத் திருப்தியும் அடைந்தார். பையன் சங்கரைப் பற்றி நல்ல தகவல்கள் கிடைத்தன. பெண் பார்க்க வரச் சொல்ல ஆயத்தமானார்.

அன்று காலையில் வேறு ஓர் ஆசாமி கோதண்டராமனைச் சந்திக்க வந்தார். டாக்ஸியில் வந்து இறங்கினார், மலைப் பழக் கூடையுடன். ''சார்! என்னை உங்களுக்குத் தெரிந்திருக்க நியாயமில்லை. இது தான் முதல் சந்திப்பு. எல். ஐ. ஸி.யில் அதிகாரியாக இருக்கும் என் பையன் ரமேஷுக்கு நல்ல இடமாக வந்தால் கல்யாணத்தைச் செய்துவிடுவது என்று தீர்மானித்து விட்டேன். வெங்கடேசபுரத்தில் உள்ள என் தம்பி உங்களைப் பற்றிய தகவல்களைக் கொடுத்தான். நாங்க பூர்விகம் தஞ்சாவூர். இப்போ எல்லாமே மெட்ராஸ் ஆயிடுத்து. இதோ பையன் ஜாதகம். நீங்க பொருத்தம் பார்த்துத் திருப்தி அடைந்தால் போதும். நான் இதிலே எல்லாம் அதிகம் அலட்டிக் கொள்ள மாட்டேன்! நல்ல இடத்துச் சம்பந்தம் வேண்டும். அவ்வளவுதான்! நான் உங்களைப் பற்றி நிறைய விசாரித்துவிட்டேன்! நீங்களும் நன்றாய் விசாரித்துக் கொண்டு மேற்கொண்டு தகவல் கொடுங்கள்! நன்றி!'' என்று கச்சிதமாகப் பேசிவிட்டுக் கிளம்பி விட்டார்.

கோதண்டராமனுக்கு ஒரு பக்கம் சிரிப்பு! ஒரு பக்கம் வியப்பு. அன்றைக்கு வெங்கடேசபுரத்துக்குப் போட்ட டெலிபோன் கால்கள் இப்படி எதிர்பாராத பலன்கள் அளிக்கின்றனவே என்பதில் சிரிப்பு. ரமேஷின் ஜாதகமும் நன்றாகப் பொருந்தியிருக்கிறதே என்பதில் வியப்பு.

அடுத்த இரண்டு நாட்களில் அவர் ரமேஷைப் பற்றித் திருப்திகரமாக விசாரித்துத் தெரிந்து கொண்டார். சங்கரைப் பார்த்தது போல் ரமேஷையும் பார்த்தார். அவனும் லட்சணமாகவும் அடக்கமாகவும் இருந்தான்.

கோதண்டராமனுக்கு இப்போதுதான் கவலை தோன்றியது. இரண்டு இடங்களுமே நல்ல இடம். சமமான இடமும்கூட. லௌகிக விஷயங்களில்கூடப் பேச்சு அவர் சக்திக்கு உட்பட்டதாகத்தான் இருந்தது. ஆனால் இந்த இரண்டு இடங்களில் எதைத் தேர்ந்தெடுப்பது என்பது பெரிய பிரச்னையாகி விட்டது.

''சியாமளா. நீ என்னம்மா சொல்லுகிறாய்?'' என்று பெண்ணைக் கேட்டார் தந்தை.

''உங்களுக்கு எது உசிதமாகப்படுகிறதோ, அப்படியே செய்யுங்கள் அப்பா!'' என்று மகிழ்ச்சியுடனேயே பதில் சொல்லி விட்டாள் சியாமளா.

வாழ்க்கையில் ரசனை உள்ள ஆசாமி கோதண்டராமன்! ஒரு வழி கண்டுபிடித்தார். சங்கரின் தந்தை ஜிப்பாக்காரரையும், ரமேஷின் தந்தை மலைப் பழக் கூடைக்காரரையும் தனித்தனியே சந்தித்து, வரும் ஞாயிற்றுக் கிழமை காலை ஒன்பது மணி சுமாருக்குத் தம் வீட்டுக்கு வரும்படி வேண்டிக் கொண்டார். அவர்களும் ஒப்புக் கொண்டார்கள். ஒருவர் வருவது மற்றொருவருக்குத் தெரியாது.

ஞாயிற்றுக்கிழமை காலையும் வந்தது. ஒரே சமயத்தில் அந்த இருவரும் வந்து சேர்ந்தார்கள். ஒருவருக்கொருவரைக் கோதண்டராமன் அறிமுகப்படுத்தி வைத்த போது அவர்கள் திடுக்கிட்டார்கள்.

கோதண்டராமன் சிரித்துக் கொண்டே பேசினார். ''உங்கள் இரண்டு பேரையுமே எனக்குப் பிடித்திருக்கிறது. ஆனால் ஓர் இடத்தை மாத்திரம் தேர்ந்தெடுக்க வேண்டிய நிர்ப்பந்தம். இதற்கு ஒரு வழி கண்டு பிடித்திருக்கிறேன். இதை நவீன சுயம்வரம் என்றோ, டெண்டர் முறை என்றோ நீங்கள் எடுத்துக் கொள்ளலாம். நான் என்னால் இந்தக் கல்யாண விஷயமாகச் செலவிடக் கூடியதை ஒரு கடிதத்தில் எழுதி இதோ மடித்து வைத்திருக்கிறேன். என் கௌரவத்தைக் காப்பாற்றிக் கொள்வேன் என்பதையும் நீங்கள் மனத்தில் வைத்துக் கொள்ள வேண்டும். நீங்களும் உங்கள் தேவைகளைக் குறித்துத் தனித்தனியே எழுதுங்கள். ஒரே சமயத்தில் இந்த மூன்று குறிப்புக்களையும் பார்ப்போம். எது கூடியவரை என் குறிப்புடன் நெருங்கி வருகிறதோ, அந்த இடத்தை ஏற்றுக் கொள்கிறேன்'' என்றார்.

அவர்களில் ஒருவராவது சீறி விழுந்து எழுந்து போவார், மற்றவரைச் சம்பந்தியாக்கிக் கொள்ளலாம் என்று கோதண்டராமன் நினைத்தார். அப்படியொன்றும் நிகழவில்லை. இருவரும் சில விநாடிகள் தயங்கினார்கள். ஆனால் கோதண்டராமன் நீட்டிய கடிதத் துண்டுகளை வாங்கி மறைத்துக் கொண்டு எழுத ஆரம்பித்து விட்டார்கள்.

மூன்று கடிதத் துண்டுகளையும் ஒரே நேரத்தில் விரித்தார் கோதண்டராமன். ஜிப்பாக்காரர், 'செலவுகளைக் குறைக்கும் வகையில் திருநீர்மலையில் முகூர்த்தத்தை வைத்துக் கொண்டு சென்னையில் ஒரு ரிசப்ஷன் கொடுக்கலாம். பத்தாயிரத்தில் அடங்கும்' என்று எழுதியிருந்தார். ரமேஷின் தந்தை, 'நான் போட்ட பட்ஜெட் இருபத்தி ஐயாயிரம். என் மனைவி போட்ட பட்ஜெட் இருபதினாயிரம்' என்று எழுதியிருந்தார்.

கோதண்டராமன் மலைப்பழக் கூடைக்காரர் கையைக் குலுக்கினார். ''இதோ, நான் என்ன எழுதியிருக்கிறேன், பாருங்கள். இருபதினாயிரம்! நான் என் வாக்குறுதியைக் காப்பாற்றிக் கொள்ள வேண்டாமா?'' என்றார் ஜிப்பாக்காரரைப் பார்த்துவிட்டு. ''அவசரப்பட்டுவிட்டோமே'' என்ற நினைவுடன் ஜிப்பாக்காரர் வெளியேறினார்.

சியாமளா - ரமேஷ் திருமணம் அடுத்த மாதத்திலேயே ஜாம் ஜாம் என்று நடந்தது. வேணுகோபாலனுக்கு நினைவாக ஓர் அழைப்பு அனுப்பி வைத்தார் கோதண்டராமன்.

(சம்பவங்கள் உண்மை; பெயர்கள் மட்டும் மாற்றப்பட்டுள்ளன.)



# இரகசியம்

சரசன்

திடீரென்று ஏன் இந்த மாற்றம்? காந்திமதிக்கு விளங்கவே யில்லை. என்றைக்குமே சீதாராமன் இப்படி நடந்து கொண்டதில்லை. தினமும் ஆபீஸிலிருந்து அவன் வந்ததும் வீடு ஒரே அமளிதுமளிப்படும்.

சீதாராமன் ஆபீஸிலிருந்து வீடு திரும்பி விட்டதை, அவனைப் பாராமலே அறிந்து கொள்வார்கள், அந்த வீட்டிலே மற்றக் குடித்தனக்காரர்கள் ! "அப்பா வந்துட்டா ! அப்பா வந்துட்டா !" என்று குழந்தைகள் போடும் கும்மாளக் கூப்பாடு அந்த வீதியே அதிரும் அளவுக்கு ஒலிக்குமே !

அம்மாதிரி வீடு அமளி துமளிப்படும் வண்ணம் ஆபீசிலிருந்து திரும்பக்கூடிய சீதாராமன், அன்று மௌனமாக, குரலே கொடுக்காமல், முகத்திலே உற்சாகமே இல்லாமல் உள்ளே நுழைந்தது காந்திமதிக்கு வியப்பாகவும் இருந்தது ; புதிராகவும் அமைந்தது என்றுதான் கூற வேண்டும் !

தந்தை வந்துவிட்டதை உணர்ந்த குழந்தைகள், "அப்பா....! வந்துட்டா.... !" என்று கூவியவண்ணம் ஓடி வந்தார்கள். வந்தவர்கள், தாய் தந்தை இருவருமே ஒரு மாதிரியாக இருப்பது கண்டு, குழப்பத்துடன் ஒருவரை யொருவர் நோக்கியபடியே பின் வாங்கினார்கள்.

எல்லாமே காந்திமதிக்குப் புதுமையாக இருந்தன. மறுநாள் பிற்பகல் ஆபீஸ் பையன் முத்து பகல் உணவு எடுத்துச் செல்ல வந்தபோது காந்திமதி கேட்டாள்: "முத்து! ஐயா நேற்று மாலை முதல் ஒரு மாதிரியாக இருக்கிறாரே! ஏன்? ஏதாவது ஆபீசிலே தகராறு? மானேஜர் கோபித்துக் கொண்டாரா?" என்று.

"அதெல்லாம் ஒன்றும் இல்லீங்களே, அம்மா! எப்பவும் போல் ஐயா குஷியாக இருந்தாரே! காலையிலேகூட என்கிட்ட, 'ஏண்டா, முத்து! ஊரிலேயிருந்து காயிதம் வந்ததா?' என்று கிண்டல் செய்தாரே?" என்றான் முத்து.

அறைக்குள் நுழைந்தாள் காந்திமதி.

"ஆமாம்! நாளைக்கு ஞாயிற்றுக் கிழமையாச்சே !"

"தெரியும் ! என்ன அதற்கு?"



"சபாவிலே டான்ஸ் கச்சேரி அல்லவா? போக வேண்டாமோ? டிக்கட் இன்னும் வரவில்லையே!"

"டிக்கட் வராது காந்தி, டிக்கட் வராது!"

"ஏன் வராது ?"

"சந்தாவை நிறுத்திவிட்டேன்!"

பிரதிமாதமும் அவர்கள் சபா நிகழ்ச்சிகளுக்கு எத்தனை மகிழ்ச்சியுடன் போயிருக்கிறார்கள் !

அவர்கள் சபாவுக்குக் குடும்பத்துடன் ஆடம்பரத்துடன் புறப்படும் போது, "பால்காரன் வருவானே! யாரை வாங்கி வைக்கச் சொன்னாய்?" என்று சீதாராமன் கேட்க, "நம்ம கிரிஜா மாமியை வாங்கி வைக்கச் சொல்லியிருக்கிறேன். மாமி தங்கமானவள்!" என்று கூறிக் கொண்டு காந்திமதி கிளம்புவது வழக்கம்.

கிரிஜா மாமி என்பவள் காந்திமதி குடியிருக்கும் போர்ஷனுக்கு அடுத்த போர்ஷனில் இருப்பவள். இளம் வயதிலேயே கணவனை இழந்து, இரண்டு குழந்தைகளுடன் வாழ்கிறாள். வயது முப்பது இருக்கலாம். ஒரு கம்பெனியிலே டைப்பிஸ்டாக வேலை பார்க்கிறாள். அவளுடைய குழந்தைகள் இருவரும் — ஆணும் பெண்ணும் — படிக்கிறார்கள்.

குழந்தைகளின் பராமரிப்பு, குடும்பப் பொறுப்பு, வயிற்றுப் பிழைப்புக்காக உழைப்பு எல்லாவற்றையும் கிரிஜாவின் தலை மீது விதி சுமத்தி விட்டது! குடும்பத்தின் தலைவனும் அவளே, தலைவியும் அவளே!

அது கிடக்கட்டும். இப்படிக் கல குஷியாய் ஓடிக் கொண்டிருந்த காந்திமதி — சீதாராமன் குடும்பத்திலே ஏன் இந்தத் திருப்பம்?

அந்தக் குடும்பத்து இயல்புக்கு முற்றிலும் மாறாக இப்படி ஓர் அதிசயிக்கத்தக்க சூழ்நிலை உருவானது குறித்து அந்த வீட்டு ஏனைய பிற குடும்பங்கள் வியப்புக்குள்ளாயின. பலர் பலவாறாகப் பேசிக் கொண்டார்கள். ஊர் வாயை மூட யாரால் முடியும்?

காந்திமதியினால் இந்த மாற்றத்தைச் சகித்துக் கொண்டிருக்க முடியவில்லை. தன் கணவனின் இந்த நிலைமைக்கு என்ன காரணம் என்று எப்படி அறிவது? யாரைக் கேட்பது?

அன்று முதல் தேதி. சம்பள தினம். மாலை வீடு திரும்பிய சீதாராமன் வழக்கத்துக்கு மாறாக, சம்பளக் கவரைத் தானே கொண்டு போய்ப் பூஜை அறைக்குள் படங்களுக்கு முன்பு வைத்தான். ஒரு வார்த்தை பேசக் காணோம்! வழக்கமாய்ச் சம்பள தினத்தன்று குழந்தைகளுக்கு வாங்கி வரும் இனிப்புக்கள் எங்கே? காந்திமதிக்கும் பெண் குழந்தைகளுக்கும் வாங்கி வரும் பூ எங்கே?

காந்திமதிக்கு அழுகையே வந்துவிட்டது! ஆம், உண்மையில் ஏதோ விபரீதம் நிகழ்ந்து விட்டது என்றுதான் முடிவு கட்டினாள். இது வரை, சம்பளத்தன்று குழந்தைகளுக்கு இனிப்பு வாங்கி வரத் தவறியதில்லையே! மலர் வாங்கி வரவும் மறந்தது கிடையாதே!

யாரிடமாவது கூறி, தன் மன ஆதங்கத்தை ஆற்றிக் கொள்ள வேண்டும் போலிருந்தது அவளுக்கு. குடும்ப விஷயத்தை யாரிடம் போய்ச் சொல்ல முடியும்?

திடீரென்று ஒரு நாள் மாலை ஆபீசிலிருந்து வீடு திரும்பிய சீதாராமன், வாசலில் ஒரு கை வண்டி நிற்பது கண்டு, "என்ன காந்தி! கைவண்டி எதற்காக வாசலில் நிறுத்தப்பட்டிருக்கிறது?" என்று கேட்டான்.

பெரிய பெண் பதில் தந்தாள்: "அப்பா! கிரிஜா மாமி காலி பண்ணுகிறார். வேறு வீடு பார்த்திருக்கிறாராம்!" என்று.

வியப்படைந்த சீதாராமன், "அப்படியா? ஏன்?" என்று கேட்க, "மாமியின் கம்பெனிக்கு அருகிலேயே ஒரு வீடு கிடைத்து விட்டதாம்!" என்று கூறினாள் காந்திமதி.

கிரிஜா வீட்டைக் காலி செய்துவிட்டாள். அன்று இரவே ஓர் அதிசயம் நடந்தது சீதாராமனின் வீட்டிலே.

"காந்தி! நாளைக்கு ஞாயிற்றுக்கிழமையாச்சே! குழந்தைகளை அழைத்துக்கொண்டு எங்கே போகலாம்?" என்று வெகு குஷியுடன் கேட்ட சீதாராமனை, காந்திமதி மட்டுமல்ல, குழந்தைகள் எல்லாம்கூடச் சூழ்ந்து கொண்டு, ஆச்சரியத்துடன் நோக்கினார்கள்.

"ஏன் காந்தி என்னை இப்படி எல்லாரும் மிருகக் காட்சிச் சாலையிலே காண்டாமிருகத்தைப் பார்ப்பது போலப் பார்க்கிறீர்கள்?" என்று கேட்டான் சீதாராமன்.

"ஒரே புதிராய்த்தானிருக்கிறது உங்கள் செய்கை!" என்று கூறினாள் காந்திமதி.

"ஆமாம்! புதிர்தான் காந்தி! திடீரென்று நான் மாறியதற்குக் காரணம் கிரிஜாதான்!...."

"கிரிஜாவா? என்ன சொல்கிறீர்கள்?"

"ஆம்! கிரிஜாதான், காந்தி! ஆபீசிலிருந்து வீடு திரும்பிய என்னை நீ இன்முகம் காட்டி வரவேற்கிறாய். என் வரவு கண்டு குழந்தைகள் குதூகலத்துடன் கூச்சலிடுகிறார்கள். உங்களை எல்லாம் வெளியே உல்லாசமாய் அழைத்துச் செல்கிறேன். குழந்தைகளுடன் கொஞ்சுகிறேன்.. ஆனால்... கிரிஜாவின் குடும்பத்திலே இத்தனை அநுபவங்களும் ஏற்படுகின்றனவா காந்தி? நாம் அடையக்கூடிய மகிழ்ச்சியைக் கண்ணுறும் கிரிஜாவின் உள்ளம் எப்படி வேதனைப்படும் என்று நீ கற்பனை செய்து பார்த்ததுண்டா? உன்னைப் போல் அவளும் பெண்! உனக்கு ஏற்படக்கூடிய ஆசாபாசங்கள் அவளுக்கும் ஏற்படாதா? ஆனால் விதி அவளுக்கு இழைத்துவிட்ட கொடுமை குறித்து அவள் ஏங்கித் தவிக்கமாட்டாளா? நாம் நமது உற்சாகத்தை வெளிப்படுத்தி, அதன் மூலம் அவள் மனத்தையும் புண்படுத்தலாமா காந்தி? சில தினங்களுக்கு முன்பு நாம் ஒரு கல்யாணத்துக்குப் புறப்படும்போது, கிரிஜா நம்மைப் பார்த்து ஒரு பெருமூச்சு விட்டாள்! அவள் விட்ட பெருமூச்சுத்தான் எனக்கு விழிப்பைத் தந்தது. அன்று முதல் நான் மாறினேன். ஒரு மென்மையான அபலைப் பெண்ணுள்ளம் வேதனைப்படும் அளவுக்கு நாம் நடந்து கொள்ளக் கூடாது; அவள் உள்ளம் வேதனைப்படாதவண்ணம் இருக்க, நாம் ஏன் சற்றுத் தியாகம் செய்யக் கூடாது என்று எனக்குத் தோன்றியது. என் போக்கிலே ஏற்பட்ட திடீர் மாறுதலுக்கு இதுதான் காரணம்" என்றான் சீதாராமன்.

காந்திமதி உணர்ச்சி வசப்பட்டு நின்றாள். தன் கணவனுடைய மன நிலையின் உன்னதப் போக்கில் அவளுக்குப் புல்லரிப்பு ஏற்பட்டது. கணவனின் கூற்றுக்கு நியாயம் இருப்பதாகவே உணர்ந்தாள். ஆனால்.... காந்திமதிக்கோ அல்லது சீதாராமனுக்கோ ஓர் இரகசியம் தெரிந்திருக்க நியாயமில்லை.

தான் பெருமூச்சுவிட்டதைக் கவனித்து விட்டதிலிருந்துதான் சீதாராமன் முற்றிலும் மாறிவிட்டான் என்பது கிரிஜாவுக்கு நன்றாக விளங்கிவிட்டது. தன்னால் ஓர் உத்தமமான குடும்பத்தின் இன்பச் சூழ்நிலைக்குப் பங்கம் ஏற்படுவது எந்த வகையிலும் நியாயம் அல்ல என்று உணர்ந்தாள் கிரிஜா. சீதாராமனின் தியாக மனப்பான்மை அவளுக்குப் புல்லரிப்பு ஏற்படுத்தியதுடன் மட்டுமில்லாமல், அவளிடம் ஓர் உயர்வான மதிப்பையும் உண்டாக்கியது. இப்படிப்பட்ட உயர்ந்த பண்பாடுடைய மனிதனின் குடும்பத்துக்குத் தன்னால் மேலும் தொடர்ந்து துன்பம் ஏற்படக் கூடாது என்று கிரிஜாவுக்குத் தோன்றியது. அதனால்தான் சற்று அதிக வாடகையையும் பொருட்படுத்தாமல் வேறு வீட்டுக்கு மாற்றிக் கொண்டுபோய் விட்டாள் அவள்!

Printed & published by R. Ananthanarayanan on behalf of Messrs. Bharathan Publications Private Limited at Kalki Press, Chetput, Madras-31
Managing Editor: T. Sadasivam

REGISTERED No. M. 4392
Registered as a Newspaper in Ceylon

